நடைபெறுகிறது!
A/L 87 DAY CLASS
பிரிவு I
8.00 - 9.00 CHEMISTRY
9.00 - 10.00 PHYSICS
10.00 - 11.00 ZOOLOGY
11.00 - 12.00 BOTANY
10.00 - 12.00 (PURE & APP (MATHS
New Master Institute
B.M.C. Lane, Jaffna.

# சஞ்சீவி

அறிவு-ஆக்கம்-அபிவிருத்தி

விலை ரூ 2/-

Day Class
Physics: திரு. சத்தியசீலன்
Chemistry: திரு. மக்ஸி
Zoology: திரு. நாகநாதன்
Botany: திரு. குகதாசன்
Pure & Applied Maths: திரு. நல்லையா
New Master Institute
B.M.C. Lane, Jaffna

மலர் 1 யாழ்ப்பாணம் அக்ஷய ஆவணி மீ 28 உ. சனிக்கிழமை ஹிஜ்ரி 1406 முஹறம் பிறை 8 (13-09-1986) SANJEAVY: REGENERATIVE TAMIL WEEKLY இதழ்: 3

## கருத்துக் கலசம்

### சரித்திரம் திரிப்போர்!

வரலாறும் அறிவியலும் ஒன்றுக்கு மற்றது தொடர்புடைய[illegible] அரசியல்வாதிகள் வரலாறு பேசுவது வழக்கம். அதுவும் ஓர் ஆளுமை மற்றும் ஆளப்படும் இனங்களும் வாழும் நாடுகளில் வரலாறு குறித்த சர்ச்சைகள் எழுவது இயல்பு; வழக்கம்.

இலங்கையும் வெவ்வேறு கலாசாரங்களை உடைய பல இன மக்கள் வாழும் நாடு. பெரும்பான்மை இனத்தவர், மற்றவர்கள் மீது ஆதிக்கம் செலுத்த தவறினால் தம்மைச் சிறப்பு மிக்க கலாசாரப் பின்னணியும், வரலாற்றுப் பின்னணியும் கொண்டவர்களாகக் காட்ட முனையும் வழக்கம் இங்கு மேலோங்கி நிற்கிறது.

அண்மைக்காலமாக தென்னிலங்கை அரசியல்வாதிகள் தமது இனத்தைப் பெருமைப்படுத்தும் நோக்குடன் சரித்திரத்தைத் தங்கள் மாற்றிச் சொல்லி வருகிறார்கள்; திரித்துக் கூறுகிறார்கள்.

தமிழர்களை விடத் தாம் சிறந்த சரித்திரப் பெருமை உடையவர்கள் என்று காட்ட முயல்கிறார்கள். தமிழர்களுக்கு முன்பே தாம் இங்கு வாழ்ந்து வந்ததாகச் சொல்ல முனைகிறார்கள்.

இலங்கையின் ஆதியில் வாழ்ந்த யக், ரக், நாக, அசுர இனங்கள் ஒன்றுகச் சேர்ந்து நாளடைவில் அடைந்த இனமே சிங்கள இனம் என்று ஓர் அமைச்சர் கூறுகிறார்.

சிங்களமக்கள் விஜயனுக்கு முன்பே இலங்கையில் வாழ்ந்தார்கள் என்று புதிய சரித்திரம் சொல்லி வருகிறார். மற்ற அமைச்சர் ஒருவர். மகாவம்சத்தையே தமது அரசியல் பூர்வ வரலாற்று நூலாகச் சொன்னவர்கள் இப்போது அதனையே துவம்சம் செய்யப் பார்க்கிறார்கள்!

நல்லூர் இராசதானியில் சிங்கள மன்னன் சிங்கக்கொடி ஏற்றியதாகவும் ஒரு மந்திரியார் சொன்னார் சில மாதங்களுக்கு முன்னர்.

இவ்வாறு அரசியல்வாதிகள் செய்யும் சரித்திரத் திரிபுகள் எண்ணற்றவை. தமது மனதுக்கு வந்தவாறு இல் வரலாறு கூறுகிறார்கள். தாங்களும் வரலாறு படைக்கலாம் என நினைத்துப் போலும்!

அரசியல்வாதிகள் விடும் இடைவெளிகளை சில தென்னிலங்கைப் பேராசிரியர்களும் மற்றும் புத்திஜீவிகளும் நிரப்புகிறார்கள்.

விஷ்ணு, விபூஷணு, (விபீஷணன்) சுமனசமன் கடவுள் (முருகன்) ஆகிய தெய்வங்கள் இந்தியாவில் இருந்து வந்தவர்கள் என பலர்

(8-ம் பக்கம் பார்க்க)

# இலங்கைக் கடலில் இந்தியப் படகுகள்

## அத்துமீறல் செய்வதாக மந்திரி மாவட்டத்தில் முறையீடு

கொழும்பு, செப்டம்பர் 13

இலங்கையின் கடல் எல்லைக்குள் இந்தியப் படகுகள் அத்து மீறி நுழைவது அதிகரித்து வருகிறதாம்.

இதுகுறித்து இந்திய அரசாங்கத்திடம், அதிகாரிகள் மட்டத்திலிருந்து, அமைச்சர்கள் மட்டத்தில் ஆட்சேபம் தெரிவிக்க இலங்கை அரசாங்கம் தீர்மானித்திருக்கிறது.

பிரஸ்தாப முறைப்பாட்டை இந்திய வெளியுறவு அமைச்சர் திரு பி சிவ்சங்கரிடம் நேரில் தெரிவிக்குமாறு, புதுடில்லியில் உள்ள இலங்கைத்தூதுவர் திரு. பேர்னட் திலகரத்தினு பணிக்கப்பட்டுள்ளார்

கொழும்பு வெளிநாட்டமைச்சு வட்டாரங்கள் வெறிக்கிழமை தகவலை சஞ்சீவிக்கு வெளியிட்டன.

இலங்கை கடல் எல்லைக்குள் ஆகஸ்ட் மாதத்தில் தினமும் 75 முதல் 100 இந்திய மீன்பிடிப் படகுகள் அத்துமீறி நுழைந்து மீன்பிடிபதில் ஈடுபட்டிருந்தன.

இது தீவிரவாதிகள் தென்னிந்தியாவில் இருந்து ஆயுதங்கள், ஆட்களை கொண்டு வர வெகுதம் உதவின.

இனப்பிரச்சினைப் பேச்சுக்கள் இறுதி கட்டத்துக்கு வந்து விட்டன. பேச்சுக்கள் ஒருவேளை பாதகமாக முடிவடைந்துவிடின், இராணுவ நடவடிக்கை எடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படலாம்.

தொடர்ந்து இந்திய மீன்பிடிப் படகுகள் சட்டவிரோதமாக நுழைவதை அனுமதிப்பின், தீவிரவாதிகளும் ஆயுதங்களைக் கொண்டு வந்து தங்கள் பலத்தையும் பெருக்கி விடுவார்கள்.

ஆகவே உயர் மட்டத்தில் இது சம்பந்தமாக முறையிடுவது என்று அரசு தீர்மானித்துள்ளது.

இவ்வாறு நாட்டமைச்சு வட்டாரங்கள் விவரம் தெரிவித்தன.

முன்னரும் இந்திய மீன்பிடிப் படகுகள் அத்துமீறி நுழைவது பற்றி கொழும்பில் உள்ள இந்தியத் தூதரிடம் முறையிடப்பட்டது.

ஆனால் எதுவித பலனும் ஏற்படவில்லை. ஆகவே தான் இந்திய வெளிநாட்டமைச்சரிடம் இது பற்றி நேரில் முறையிடும்படி புதுடில்லியில் உள்ள எமது தூதர் பணிக்கப் பட்டுள்ளார்- என்றும் வெளிநாட்டு அமைச்சு வட்டாரங்கள் இங்கு தெரிவித்தன. (அ-எ)

தெல்லிப்பளை ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தான தேர்த் திருவிழாவை முன்னிட்டு வெளியிடப்படும் சிறப்புமலர் நாளைய உதயனுடன் இலவசமாகக் கிடைக்கும். சுன்னாகம் துர்க்கா ஸ்ரேஷனேர்ஸ் ஏற்பாட்டில் வெளியாகும் சிறப்புமலரைக் கேட்டுவாங்கத் தவறாதீர்கள்

### சுபநேரம்

13—9—1986
சனிக்கிழமை
சுபநேரம்:
3.03 முதல் 4.33 வரை
ராகுகாலம்:
9.03 முதல் 10.33 வரை
இவை யாழ்ப்பாணத்துக்கும் இராமேசுவரத்துக்கும் பொருந்தும்

## திருமலையில் தேடுதல் 300 தமிழர்கள் விசாரணையில்

திருகோணமலை, செப். 13

திருகோணமலை நகரின் ஒரு பகுதியில் நேற்று நடந்த தேடுதலில் சுமார் 300 தமிழர் விசாரணைக்காகத் தடுத்து வைக்கப் பட்டனர்

மாலையில் 150 பேர் விடுவிக்கப்பட்டனர். எஞ்சியோர் கோட்டை இராணுவ முகாமுக்குக் கொண்டு போகப்பட்டனர்.

பகல் விசாரணை இந்து மகளிர் கல்லூரியில் நடைபெற்றது

கடல்முக வீதியிலிருந்து மட்டக்களப்பு பக்கமாக - சிவன் கோவில் பகுதி வரை உள்ளடக்கியதாக— இத் தேடுதல் நேற்றுக் காலை 10 மணி முதல் பிற்கல் 3 மணி வரை நடைபெற்றது. (உ-எ-150)

## 8 இளைஞர்களுக்கு சிறைத் தண்டனை

கொழும்பு. செப் 13

எட்டுத் தமிழ் இளைஞர்களுக்கு எதிராக பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின்கீழ் தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்குகள் வியாழனன்று கொழும்பு மேல் நீதிமன்றத்தில் நீதி திஸ்ஸ விக்னராசா முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்டு தீர்ப்பு வழங்கப்பட்டது

எதிரிகள் குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து நீதிபதி தீர்ப்பை வழங்கினார்.

தீவிரவாதிகளைப் பற்றிய தகவல்களைத் தெரிவிக்கத் தவறியதாக பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் 5ஆம் பிரிவின்கீழ் இவர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

கொக்குவிலைச் சேர்ந்த வி. விக்னமூர்த்தி என்ற இளைஞருக்கு ஒரு வாரச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

காவிராஜா என்ற இளைஞருக்கு 2 வார காலத் திற்கும் -

பி. சிறீதரன் என்ற இளைஞருக்கு ஒன்றரை வருட காலத்திற்கும் -

இரவீந்திரன் என்ற இளைஞருக்கு 2 வார காலத்திற்கும் -

அரியாலையைச் சேர்ந்த ஞானராஜாவுக்கு 3மாத காலத்திற்கும் -

வவுனியாவைச் சேர்ந்த அப்துல் நஸாருக்கு 6 மாத காலத்திற்கும்

நாகரட்ணம் (வயது 42) என்ற ஆசிரியருக்கு ஒன்றரை வருட காலத்திற்கும் -

சந்திரலிங்கம் என்ற இளைஞருக்கு 3 வருட காலத்திற்கும் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

எதிரிகள் சார்பில் சட்டத்தரணிகள் திரு ஜி ஜி பொன்னம்பலம், திரு. வி மோதிலால் நேரு, செல்வி ரஜனி ஜெயரட்ணம், திரு. ஞானலிங்கம் ஆகியோர் ஆஜரானார்கள். (உ)

## புதூர் தாக்குதல் 8 பொலீஸார் பலி

### ஈ. பி. ஆர். எல். எவ். அறிக்கை

யாழ்ப்பாணம், செப். 13

மட்டுநகர் கல்முனை வீதியில் உள்ள புதூர் என்னும் இடத்தில் கடந்த வியாழக்கிழமை ரோந்து சென்ற பொலீஸாருக்கும் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் இராணுவப் பிரிவாகிய மக்கள் விடுதலைப் படையினருக்கும் இடையில் இடம்பெற்ற நேரடி மோதலில் 8 பொலீஸார் கொல்லப்பட்டனர். பலர் காயமுற்றனர். இவ்வாறு ஈ. பி ஆர். எல் எவ். இயக்கம் விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

படையினர் பயணம் புரிந்த மூன்று வாகனங்களும் எம்மால் சேதமாக்கப்பட்டன. அவர்களிடமிருந்து ஆயுதங்களும் சில 'வோக்கி டோக்கி' உபகரணங்களும் எம்மால் கைப்பற்றப்பட்டன இப்படி அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருந்தது. (உ)

## செல்வநாயகபுரம் பகுதியில் துன்புறுத்தல்

### பிரசைகள் குழுவிடம்முறையீடு

திருகோணமலை, செப் 13

திருமலை செல்வநாயகபுரம் பகுதியில் புதிதாக இராணுவமுகாம் ஒன்று திறக்கப்பட்டதைத் தொடர்ந்து அன்புறுத்தல்கள் அதிகரித்துள்ளதாக அப்பகுதித் தமிழ்மக்கள், திருமலை பிரசைகள் குழுவுக்கு நேற்று முறையிட்டனர்.

செல்வநாயகபுரம் அரசினர் தமிழ் பாடசாலையில் இந்த முகாம் நேற்று முன்தினம் திறக்கப்பட்டது.

திறக்கப்பட்ட அன்றிரவே, சிறுமை அணிந்தவர்கள் அப்பகுதி வீடுகளைத் தட்டி 'கொட்டியா' இருக்கின்றதா? என்று சத்தம் போட்டுக் கிண்டல் செய்தார்களாம்.

சுமார் 150 பெண்கள் வரையில் நேற்று பிரசைகள் குழுவினரைச் சந்தித்து இது சம்பந்தமாக முறையிட்டனர். (உ-எ-150)

## மூன்றாவது நாளாக தாக்குதல்

யாழ்ப்பாணம், செப். 13

படுவான்கரைப் பகுதியை முற்றுகையிட வந்த சிப்பாய்கள் மற்றும் பாதை வவுணதீவு, தாண்டியடி, நாவற்குடா கன்னன்குடா, குறிஞ்சாந்தீவு ஆகிய கிராமங்களை முற்றுகையிட முயற்சித்து வருகின்றனர்.

அவர்களை எதிர்த்து 3ஆவது நாளாக தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகள் தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

புலிகள் விடுத்த அறிக்கை ஒன்றில் இது தெரிவிக்கப்பட்டிருக்கிறது (உ)

## இந்தியாவுக்கு விசேட செய்தி

புதுடில்லி, செப் 12

இலங்கை அரசு, இந்திய அரசாங்கத்துக்கு விசேட செய்தி ஒன்றை அனுப்பி வைத்துள்ளது.

இப்படி புதுடில்லி அரச வட்டாரங்கள் தெரிவித்தன.

செய்தியின் உள்ளடக்கம் குறித்து தகவல் ஏதும் வெளியிடப்படவில்லை. (உ-ஐ-எ)

## தெற்கிலும் வான் கடத்தல்

கொழும்பு. செப் 13

இனந்தெரியாத ஆயுதம் தாங்கிய நபர்கள் கோஷ்டி ஒன்று முந்தராஜவெல என்னும் இடத்தில் புத்தம் புதிய பச்சை நிற ஹைஏஸ் வான் ஒன்றை கடத்திச் சென்றது.

கொழும்பில் இருந்து கட்டுநாயக்கா விமான நிலையம் செல்வதற்காக இந்த வானை வாடகைக்குப் பிடித்த கோஷ்டியே சாரதியை இறக்கி விட்டு வானைக் கொண்டு சென்றதாம். (உ-எ)

## வவுனியாவில் புதிய முகாம்கள்

யாழ்ப்பாணம் செப் 12

வவுனியா -திருகோணமலை வீதியில் புளியங்குளம் என்ற இடத்தில் புதிய இராணுவ முகாம் ஒன்று நேற்று திறக்கப்பட்டது.

சுமார் நூறுபேர் வரையில் இந்த இராணுவ முகாமுக்கு கவச வாகனங்களிலும் லொறிகளிலும் கொண்டு செல்லப்பட்டதாகத் தெரியவருகிறது

இதேவேளை நெடுங்குளம், மாமடுவ, தச்சடம்போடி ஆகிய இடங்களிலும் அண்மையில் இராணுவ முகாம்கள் திறக்கப்பட்டுள்ளன. (உ-10)

## மன்னாரில் குண்டுச் சத்தம்

யாழ்ப்பாணம், செப 13

நேற்று மன்னாரில் பலத்த குண்டுச் சத்தங்களும் வெடிச்சத்தங்களும் கேட்டதாக அறிவிக்கப்படுகிறது.

மன்னார் இராணுவ முகாம் பக்கமாகவே இந்த வெடிச் சத்தங்கள் கேட்டன.

மேல் விவரங்கள் பற்றி தகவல் ஏதும் கிடைக்கவில்லை (உ-10)

## தமிழ் இளைஞர்கள் இருவர் கைது

கொழும்பு, செப்.13

வெள்ளவத்தை ரயில்வே பாதையைப் படம் பிடித்ததாகக் கூறப்படும் 2 தமிழ் இளைஞர்களை பொலீஸார் கைது செய்தனர்.

இம்மாதம் 16 ஆம் திகதி வரை இருவரையும் விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு தெற்கு நீதிவான் திரு. சே. கலவில உத்தரவிட்டார் (உ-எ)

## செய்திச் சாரம்

### யாழ் இளைஞர் வவுனியாவில் கைதானார்

யாழ்ப்பாணம், செப். 13

சுகாதாரத் திணைக்களத்தினால் கொழும்பில் நடத்தப்பட்ட பரீட்சையில் தோற்றிவிட்டு யாழ்ப்பாணம் திரும்பியவர் வவுனியாவில் வைத்து ஆயுதப்படையினரால் கைது செய்யப்பட்டார்.

சண்முகராசா சுபச்சந்திரன் (23 வயது) என்பவரே கைது செய்யப்பட்டவர் ஆவார்.

இவர் புகையிரதம் மூலம் வவுனியா வந்து யாழ்ப்பாணத்திற்குப் பஸ் எடுக்க வரும் வழியில் கைதானார்.

இது தொடர்பாக வவுனியா மாவட்ட பிரசைகள் குழுவினர் வவுனியா இராணுவ அதிகாரிகளுடன் தொடர்புகொண்டு உள்ளனர். (இ-10)

### ஹோட்டலில் மண்மூடை அரண்

யாழ்ப்பாணம்செப் 13

யாழ் நகரில் பிரபலமான சைவ ஹோட்டல் ஒன்றில் கடையின் முன்பக்கத்தை மறைத்தும் கடையின் உள்ளே நடுவிலும் மண் மூடைகளினால் பாதுகாப்பு அரண்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

கோட்டையிலிருந்து மேற்கொள்ளப்படும் ஷெல் குண்டு வீச்சால் இந்தக் கடையின் முன்பகுதி பலதடவைகள் சேதமடைந்தது என்பது குறிப்பிடத்தக்கது

கடைக்கு வரும் வாடிக்கையாளர்களுக்கு மேலதிக பாதுகாப்பாகவே இந்த மண் மூடை அரண்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன (உ.10)

### மீன்வாங்கச் சென்றவருக்குச் சூடு

யாழ்ப்பாணம், செப் 13

வியாழன் காலை ஐந்து மணியளவில் யாழ் கடற்கரை வீதியில் கங்கை இலங்காவிற்கு அருகாமையில் மீன் வாங்கச் சென்ற ஒருவர் மீது கோட்டையிலிருந்து துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

இதனால் வேலன் சின்னத்தம்பி (46) என்ற பேர்படி நபர் கையில் பலத்த காயம் அடைந்தார். (உ-10)

### கன்னன் குடா தாக்குதல்

யாழ்ப்பாணம், செப். 13

வியாழனன்று மட்டுநகர் கன்னன்குடா என்னும் இடத்தினைச் சுற்றிவளைக்க முயற்சித்த இராணுவத்தினரை நோக்கி மக்கள் விடுதலைப்படையினர் மோட்டார் தாக்குதல் நடத்தியதில் சிலர் கொல்லப்பட்டனர் பலர் படுகாயமுற்றனர்:

ஈ பி. ஆர். எல். எவ் இயக்கம் விடுத்த அறிக்கை ஒன்றில் இத்தகவல் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (உ)

### துப்பாக்கி மீட்பு

யாழ்ப்பாணம், செப். 13

கடந்த ஜூலை 30ஆம் திகதி வவுனியாவில் இராணுவத்தினருடனான நேரடி மோதலின் போது கைவிட்டுச் சென்ற 5 56 எம். எம் ரக எம் ஜி துப்பாக்கி தப்பாக்கிக் தினமினுல் நேற்று மீட்கப்பட்டதாக புலிகள் அறிவித்தனர்.

இந்தத் தாக்குதலில் இராணுவ தினரின் ஏ. கே ரைபிள்கள் இரண்டைத் தாங்கள் கைப்பற்றியதாகவும் புலிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (உ)

### ஆண்டுவிழா

பளாலி, செப் 13

இன்று பாரதி வீதி— பத்தமேனி இளங்கதிர் சனசமூக நிலையத்தின் ஆண்டுவிழா நடைபெறவுள்ளது

பளர்பொருள் அபிவிருத்திச்சபைத் தலைவர் திரு க. நடராசா அவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார் (உ-119)

### நூல் அறிமுகம்

யாழ்ப்பாணம், செப். 13

திரு. கி. வல்லிபகுலம் அவர்களின் ஈழத்துப் புனைகதைகளில் 'பேச்சு வழக்கு' என்னும் நூல் அறிமுகவிழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்குக் கட்டைவேலி நெல்லியடி பலநோக்குக் கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் கலாசாரக் கூட்டுறவுப் பெருமன்றத்தின் ஆதரவில் அதன் தலைவர் திரு. த சிதம்பரப்பிள்ளை தலைமையில் நடைபெறுகிறது பேராசிரியர் கா. சிவத்தம்பி, கலாநிதி திரு மதி. பார்வதி கந்தசாமி, தெணியான் ஆகியோர் ஆய்வுரைகளை நிகழ்த்துவர். கலாசாரக் கூட்டுறவுப் பெருமன்ற அமைப்பாளர் திரு நெ. லோ. பேரன் நன்றியுரை நிகழ்த்துவார்.

### திருமலைக்கு மின்சாரம்

திருகோணமலை செப் 13

திருகோணமலை நகருக்கு மட்டும் தனி ஜெனரேட்டர் மூலம் நேற்று இரவு 7 மணி தொடக்கம் மின்சாரம் வழங்கப்படுகிறது (உ-எ-150)

## பீரங்கித் தாக்குதலில் வயோதிபப்பெண் பலி

### பருத்தித்துறையில் சம்பவம்

பருத்தித்துறை, செப் 13

பருத்தித்துறையில் வியாழன்று மாலை கடற்படைப் படகுகளில் இருந்து மேற்கொள்ளப்பட்ட பீரங்கித் தாக்குதலில் வயோதிபப் பெண் ஒருத்தி பலியானார் மற்றொருவர் காயமடைந்தார்.

வியாழன் மாலை 2-30 மணியிலிருந்து மாலை 6-30 வரை கடற்படையினரின் பீரங்கித் தாக்குதல்கள் நடைபெற்றன. பீரங்கிக் குண்டுகள் துறைமுகம் வராத்துப்பளை, உபயகதிர்காமம், மந்திகை, சுலடி, தம்பசெட்டி, சாயக்கை, மாதனை, பன்னக்கட்டைப் பகுதிகளில் விழுந்து வெடித்தன. இதனால் பல வீடுகள் சேதமுற்றன

பனை,தென்னை போன்ற உயர்ந்த மரங்கள் முறிந்து வீழ்ந்துள்ளன.

இம்முறைப் பகுதியில் விழுந்து வெடித்த பீரங்கிக் குண்டினால் தும்பளையைச் சேர்ந்த திருமதி வேலுப்பிள்ளை வியாழம்மா (வயது 62) என்பவர் பலியானார் மாதனையைச்சேர்ந்த திரு எஸ் இராஜகோபால் (வயது 40) என்பவர் காயமுற்றார் (உ-18)

புதுமையும் எழிலும் பொலியும் பல்சுவை வார இதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் விடுதலைக்காகப் போராடும்
# தேசிய மக்கள் இராணுவமே நாம்

'இந்து' இணை ஆசிரியர் என். ராம் அண்மையில் தமிழீழ விடுதலைப்புலிகள் தலைவர் வே. பிரபாகரனைப் பேட்டிகண்டார்.

அப்பேட்டி 'இந்து' நாளிதழில் செப் 3, 4 ஆம் திகதிகளில் பிரசுரமானது.

இப்பேட்டி பிரசுரமான 'இந்து' நாளிதழ் முதலில் அரசாங்கத்தினால் தடுத்து வைக்கப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்டது.

பேட்டியின் முதலாவது பகுதி இங்கு பிரசுரமாகிறது.

திரு. பிரபாகரனைப் பேட்டிகண்ட திரு. ராம் தான் கொழும்பு வந்து ஜனாதிபதி ஜெயவர்த்தனாவையும் சிலமாதங்களுக்கு முன்னர் பேட்டி கண்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

கேள்வி: இராணுவ நடவடிக்கை, மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் முதலியவற்றை அடிப்படையாக வைத்து இலங்கைத் தமிழ்ப்பகுதிகளில் நிலவும் நிலைமை பற்றி விவரிப்பீர்களா? பிரச்சினையின் தன்மை என்ன?

பதில்: இராணுவ ஆக்கிரமிப்புப் பிரதேசமாக எமது பிரதேசம் உள்ளது. சிறிய பகுதிகளில் கூட பெரிய இராணுவ முகாம்கள் எமது பிரதேசத்தில் அமைக்கப்பட்டுள்ளன. இன்றுகூட மட்டக்களப்பு மாவட்டத்தில் 5 அப்பாவித் தமிழர்களை இராணுவம் சுட்டுக்கொன்றது. குடிமக்கள் பாதுகாப்பாக இருக்கமுடியாத சூழ்நிலை தான் உள்ளது. வீதிகளில் செல்லும் இராணுவத்தினரால் எப்போது சுடப்படுவோம் என்று சொல்லமுடியாத நிலையில் மக்கள் பயத்துடன் வாழ்கின்றார்கள்.

கே: தமிழ்ப் பகுதிகளுக்கு செல்லும் வெளிநாட்டுப் பத்திரிகையாளர், அவதானிகளின் அறிக்கையின்படி வட பகுதியில் குறிப்பாக யாழ்.குடாநாட்டில் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம்தான் மிகவும் சக்திவாய்ந்த இயக்கமாக இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. உண்மையில் உங்களின் நிர்வாகம்தான் அங்கு நிலவுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. அக்கூற்று நிலைமையைப் பெருப்பித்துக் கூறுவதாக இருக்குமா?

பதில்: அக்கூற்றுக்களில் குறிப்பிடக்கூடிய அளவு உண்மை உண்டு. யாழ் குடாநாடு எம் விரிவான கட்டுப்பாட்டின் கீழ் இருப்பதாக கூறமுடியும். மன்னார், கிளிநொச்சி மாவட்டங்கள் எமது பாதுகாப்புப்பகுதிகள். கிழக்கில் திருமலை, மூதூர், மட்டக்களப்பு, அம்பாறைப் பகுதிகளில் எமது நடவடிக்கைகளை அதிகரித்து நிலைப்பாட்டை பலப்படுத்தி வருகின்றோம்.

கே: ஏனையபோராளி அமைப்புக்களின் செல்வாக்கு, நிலைபற்றி உங்களால் தெரிவிக்க முடியுமா? தமிழ்ப்பகுதிகளில் உங்கள் நடவடிக்கைகளோடு அவர்களின் தொடர்பு எப்படி உள்ளது? இராணுவத்துடன்அவர்கள் தொடர்புஎப்படி உண்டு?

பதில்: இராணுவத்தைப் பொறுத்தளவில் சிவில் நிர்வாகம் நடத்தும் அடையாளங்களோ குறியீடுகளோ கிடையாது. இந்தநிலைதான் அங்கு உருவாகியுள்ளது. சிவில் சமூகத்தின் சாயலே அங்கு இல்லை. வீடுகளில் மக்கள் நிம்மதியாக வாழமுடியாது. அவர்களின் வீடுகள் எந்த நிமிடத்திலும் தாக்கப்படலாம். இராணுவம் கிராமங்களைச் சுற்றி வளைத்துச் சுடலாம். இப்படியான சம்பவங்கள் குறித்து உண்மையான விசாரணைகளுக்கு உத்தரவிடப்படுவது இல்லை.

அடக்குமுறைச் செயல்கள் குறித்து விசாரணைகளே நடைபெறுதவிடத்தில் வழமையான நிர்வாகம் நடைபெறுகின்றது என்று எம்மால் எப்படிச் சொல்லமுடியும்?

நாம் பெரிய பிரதேசத்தில் போராட்டம் நடத்திக் கொண்டிருக்கிறோம். ஏனைய அமைப்புக்கள் குறிப்பிட்ட சிறிய பகுதிகளில் போராடுகின்றன.

### தற்காப்புப் படைகள்

பொதுவாக போராளி அமைப்புக்கள் மக்களைப் பாதுகாப்பதில் தற்காப்புப் படைகளாக இயங்குகின்றன.

அரச ஆயுதபடைகள், இனவாத அழிப்பு வேலைகளில் ஈடுபடும் சக்தியாக விளங்குகின்றன.

தமிழ் மக்களின் விடுதலைக்காகப் போராடும் 'தேசிய மக்கள் இராணுவமாக' நாம் செயல்படுகின்றோம்.

இங்கு ஒரு முக்கிய விஷயத்தைச் சொல்ல



வே. பிரபாகரன்

வேண்டும். கிழக்கு மாகாணத்தில் நேரடியாகவே மக்களுக்கு எதிராக இராணுவம் ஈடுபடுகிறது. போராளி அமைப்புக்கள் அங்கு மக்களைக் காப்பாற்றப் போராடுகிறார்கள்.

இப்படியான இராணுவ நடவடிக்கைகளை வடபகுதியைப் பொறுத்த மட்டில் குறிப்பாக யாழ் குடாநாட்டில் முழுமையாக நிறுத்தி விட்டோம் என்று நாம் கூறமுடியும். அதை உடைக்கமுடியாது படையினர் உள்ளனர்.

முகாம்களுக்குள் மட்டும் அவர்கள் இருக்கின்றனர். முகாமுக்குள் இருந்து சிறு ரக ஆயுதங்களையும், வானத்தாக்குதலையும் நடத்தி அப்பாவி மக்களைத் தாக்குகின்றனர். ஆனால் அவர்களால் முகாம்களில் இருந்து புறப்பட்டு வந்து மக்களை நேரடியாகத் தாக்க முடியாதிருக்கின்றது வடமராணத்தைப் பொறுத்தமட்டில் இராணுவம் அடைபட்ட நிலையில் உள்ளது.

## எமது போராளிகளிடம் விறகும் மாம்பழமும் கேட்ட யாழ்ப்பாண இராணுவ அதிகாரிகள்

### இராணுவம்- புலிகள் தொடர்பு

கே: இலங்கை இராணுவத்தின் மனோநிலை, அவர்கள் பிரச்சினையை அணுகும் விதம் பற்றி விவரிப்பீர்களா? ஆக்கிரமிப்பு இராணுவமாக இருந்து வடபகுதியில் கட்டுப்பாட்டுக்குள் வைக்கப்பட்டிருப்பதாகக் கூறுமிடத்து, அவர்களின் மனநிலை எப்படி இருக்கும் என்று விவரிப்பீர்களா?

பதில்: யதார்த்தபூர்வமாக பார்ப்பின், அவர்கள் குழம்பிய, கிளர்ச்சி செய்யும் மனநிலையில் தான் உள்ளனர்.

சில இடங்களில் இராணுவத் தளபதிகள் பிரசைகள் குழுக்கள் மூலமாக எமக்குத் தகவல்கள் அனுப்பியுள்ளனர். தொண்டமானாறு போன்ற இடங்களில் தண்ணீர் விநியோகத்தைத் தடைப்படுத்த [illegible] கள் எம்மைக் கேட்டிருக்கிறார்கள்.

அது போன்று யாழ்ப்பாணத்தில் எமது அமைப்பாளர்களும் அவர்களும் வயர்லஸ் சாதனம்மூலம் தொடர்பு கொண்டுள்ளார்கள்.

எமது அமைப்பாளர்கள் கேட்டார்கள்; "உங்களுக்கு என்ன வேண்டும்?"

இராணுவ அதிகாரிகள் சொன்னார்கள்; "எமக்கு இரண்டு லொறிகளில் விறகுகளும் மாம்பழங்களும் வேண்டும்"— அந்த அளவுக்கு விநியோகத் தட்டுப்பாட்டால் அவர்கள் பாதிக்கப்பட்டார்கள். எம்மவர் ஒரு லொறி விறகை அவர்கள் எடுக்க அனுமதித்தனர்.

கே: மாம்பழங்கள்?.

பிரபா: (சிரித்தபடி) உண்மையில் இராணுவம் கஷ்டமான நிலையில் அங்கு உள்ளது. அத்தியாவசிய உணவுப் பொருள்களின் விநியோகம் கட்டுப்படுத்தப்பட்டுள்ள படியால் இந்த விஷயத்தில் எம்முடன் ஏதாவது ஒரு வகையாக புரிந்து கொள்ளும் தன்மை நிலைமையை உருவாக்க அவர்கள் முயற்சிக்கின்றனர்.

இந்துவுக்கு பிரபா அளித்த பேட்டி

### பலவீனப்படுத்தும் யுக்தி

கே; கடந்தமே மாதம் வட பகுதியில் இராணுவம் பெரிய தாக்குதல் ஒன்றை நடத்தியது; சொந்த மக்கள் மீதே விமானக் குண்டு வீச்சையும் நடத்தியது. உங்கள் அபிப்பிராயத்தின்படி இதனால் என்ன கிடைத்தது? மக்களைப் பயமுறுத்துவதில் வெற்றி கிடைத் கள் அறிந்து கொண்ட செய்தி என்ன?

பதில்: இந்த இராணுவ நடவடிக்கை எம்மைப்பலவீனப்படுத்தவே நடத்தப்பட்டது. புதிய பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட முன்னர் இது நடந்தது. அதன் பின்னர் பேச்சுக்களை நடத்த எம்மை அணுக வேண்டும் என்பதே அவர்கள் நிலை.

கே: சிதம்பரம் குழு கொழும்பு சென்று திரும்பையோடு......

பதில்: ஆம். முக்கிய அம்சம் யுக்திதான். எமது முற்றுகையில் உள்ள முகாம்களில் இருந்தும் ஆனையிறவு முகாமில் இருந்தும் துருப்புக்களை ஒரே நேரத்தில் வெளியே அனுப்புவதுதான் அந்த யுக்தி. பெருந்தொகையாக வெளிவரும் துருப்புக்களின் மத்தியில் நாம் அகப்பட்டுக்கொள்வோம் என்பது அவர்கள் போட்ட கணக்கு. பல பக்கங்களாலும் இராணுவம் முன்னேறும்போது நாம் சமாளிக்க மாட்டோம்; சில இடங்களில் இருந்து வாபஸாகி விடுவோம் என்று அரசு எண்ணியது.

தாங்கள் முன்னேற முடியாத இடத்தில் நிலைமையில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்துவதே அவர்கள் எண்ணம்.

முன்னேறி வரும்போது சில பகுதிகளில் முகாம்களை அமைத்து இருக்கும் முகாம்களுடன் விநியோக, போக்குவரத்துத் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்வதும் அவர்களின் திட்டமாக இருந்தது.

இத்திட்டத்தில் இன்னொரு அம்சமும் காணப்பட்டது. தரைமார்க்கத் தாக்குதலின்போது கடலாலும் துருப்புக்களைக் கொண்டு வந்து கரை இறக்குவதே (இது சம்பந்தமான வீடியோபடம் எம்மிடம் உள்ளது) அதே தருணத்தில் ஆகாயத்தாக்குதலையும் நடத்தி (8ஆம் பக்கம் பார்க்க)

## அரசாங்க அலுவலகங்களில்.... 

"சிகதி"

### கோட்டைக்குச் சென்றுதான் ஒய்வூதியம் பெற வேண்டுமா?

திணைக்களங்களில், சில சமயங்களில் லீவு எடுப்பது இலகுவான காரியமல்ல. ஒரு சமயம் ஊழியர் ஒருவர் தனது மகளின் திருமணத்திற்காக லீவு கோரியிருந்தார். திருமணத்திற்கு இரண்டு நாட்களுக்கு முன்னரும் அவரது லீவு உயர் அதிகாரியினால் அங்கீகரிக்கப்படவில்லை. அதற்குக்காரணம் நாட்டில் ஏற்பட்ட அவசரகால நிலையின் அடிப்படையில் லீவுவழங்கும் முறையில் கட்டுப்பாடு இருந்ததேயாகும். லீவு கோரியவருக்கு என்ன செய்வதென்று தெரியாத நிலையில் தனது திணைக்கள உயர் அதிகாரியுடன் கொழும்பிற்கு தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டபொழுது லீவை தான் அங்கீகரிப்பதாகவும் விண்ணப்பத்தை தனக்கு அனுப்பி வைக்குமாறும் தெரிவித்திருந்தார் அந்த அதிகாரி.

இதுபோல அரசஅதிகாரிகள் பல விடயங்களில் தமக்கு ஏற்றாற்போல் கண்டிப்பாகவும், கண்டுபிடிக்காமலும் நடந்து கொள்கிறார்கள். இந்த தோஷத்தை திருத்திக் கொள்ள வேண்டும்.

★ ★

கல்வி சம்பந்தமான பொருள் காட்சிகள் இன்னமும் சில இடங்களில் நடைபெறுகின்றன. இந்த வேளையில் மாணவர்களுக்கும் கல்வி புகட்டப்பட வேண்டும். சில பாடசாலைகளில் பிரிவுகள் பக்கச் சார்புகள் இடம் பெறுவதால் கல்வி முன்னேற்றம் பின் தள்ளப்படுகிறது. பரிசளிப்பு விழாக்கள், விளையாட்டுப் போட்டிகள் தவறாது பாடசாலைகளில் நடைபெறுவது வரவேற்கத்தது. ஆனால் ஆசிரியர்கள் கடமை நேரங்களை முழுமையாக மாணவர்களுக்காகவே ஒதுக்க வேண்டும். இது மிகவும் அவசியமானதாகும்.

★ ★

ஓய்வூதியக்காரர் சிலர் கோட்டைக்கு சென்று தான் அதனைப் பெற விரும்புகிறார்கள் போலத் தெரிகிறது. அரச அதிகாரி ஓய்வூதியத்தைப் பெறுவதற்கு மாற்று நடவடிக்கைகளை அறிவித்திருந்த போதிலும் இதனை கருத்தில் கொள்ளாது கோட்டையில் பெற எண்ணும் நிலைமை இத்தருணத்திலாவது மாற்றிக் கொள்வது நல்லது.

★ ★

பணக்கட்டுப்பாடு இல்லாத அரசாங்க சபை மிகவும் காரசாரமான முறையில் நிதி மந்திரியினால் அண்மையில் விமர்சிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு தாக்குதலுக்குள்ளான சிமெந்து சபை திறைசேரியின் அங்கீகாரம் இன்றியே சில கொள்வனவுத் தொடர்புகளை உருவாக்கி இருக்கிறது. இறுதி நேரத்தில் அதுவும் காலங்கடந்த நிலையில்தான் தமது திணைக்களத்தை அணுகி சில அங்கீகாரங்களை பெற்றதாகவும், இதனால் பல இலட்சம் நஷ்டம் ஏற்பட்டதாகவும் மந்திரி நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார். அதுடன் சிமெந்தை உற்பத்தி செய்யவேண்டிய கூட்டுத்தாபனம் துறைமுகம் கட்டவும் ஆடம்பரமான ஹொட்டேல் கட்ட முனைந்தது அவர்களின் குறிக்கோளுக்கு அப்பாலுள்ள விடயங்கள் எனவும், திறைசேரிய கூட்டுத்தாபனத்தின் கடமைகளை செய்திருப்பின் மிகவும் நன்மை பயக்கக் கூடிய வகையில் அபிவிருத்தி செய்திருக்க முடியும் எனவும் மந்திரி விளக்கியுள்ளார். பொறுப்பு வாய்ந்த அரச ஸ்தாபனங்களே இப்படியான நடைமுறைகளை அதுவும்நிதி மந்திரி, திறைசேரி முதலியவற்றை மீறி நடக்க முடியுமானால், நாட்டின் பணம் எவ்வாறு கண்டபடி நிலையில் செலவு செய்யப்படுகின்றதென்பது தெளிவாகின்றது. நாட்டுக்கு அபிவிருத்தி இல்லாத நிலையில் கடன் உதவிகளை பெற்று இப்படி பெரும் நஷ்டங்கள் ஏற்படுமானால் மந்திரி தான் என்ன செய்ய முடியும்? இவை பணம் கட்டுப்பாடற்ற நிலையில் செலவு செய்யப்படுவதை மட்டும் தெளிவுபடுத்தவில்லை. அரசின் சகல அலுவலகங்களுமே கட்டுப்பாடற்ற நிலையில் தான் உள்ளன என்பதைத் தெளிவுபடுத்துகிறது. இவை அம்பலத்துக்கு வரும் காலம் நெருங்கிக் கொண்டிருக்கின்றது.

## எள்ளின் மகிமை

மலமிளக்கக் கூடியது; வரட்சியை அகற்றி உள் அழலை மாற்றக்கூடியது; சிறுநீரைப் பெருக்கக் கூடியது; போஷாக்குச் சக்தியைக் கொடுக்கக் கூடியது; தாய்ப்பாலைப் பெருக்கக் கூடியது; மன உற்சாகத்தை அளிக்க வல்லது.

எள்ளில் கறுப்பு, வெள்ளை என்ற இருவகையுண்டு சுமார் மூன்றரை அவுன்ஸ் எள்ளில் 10 5 கிராம் இரும்புச் சத்துண்டு இதனால் இரத்தம் சுத்தமடையும்.

உடம்பில் எப்பாகங்களிலாவது முள் தைத்து விட்டால் எள்ளையோ அல்லது சுத்தமான எண்ணெயையோ முள்தைத்த இடத்தில் வைத்து வந்தால் முள் மக்கி விடும், எள்ளை அரைத்துக் கட்டவேண்டும் எண்ணெயை மேலே தடவி வரலாம்.

சாதாரணமாகச் சில பெண்களுக்கு மாதாந்தரப் போக்கு மந்தமாக இருக்கும் நிறமும் கருமையாக இருக்கும். நாள் தள்ளித் தூரமாகும் நீண்ட நாட்களுக்குத் தூரம் சிறிது சிறிதாகப் பட்டுக் கொண்டேயிருக்கும் சூதகமந்தம் என்றும் இதனால் ஏற்படும் நோயை சூதகவாயு என்றும் சொல்வார்கள்.

சூதகமந்தம் நீடிக்குமானால் உடல் ஆயாசமும், இடுப்புவலி கீல்வலிகளும் ஏற்படும். எள்ளும், பனை வெல்லமும் சேர்த்துச் சில நாட்கள் சாப்பிட்டுவரத் தாராளமாக தூரம் ஆவதுடன் மேனி அழகும் பலமும் பெறும்.

நன்றி! மூலிகை

# சுயாட்சிக்கு அன்றே குரல் கொடுத்த
# கோப்பாய்க் கோமான் வன்னியசிங்கம்

## புதனன்று நினைவுதினம்

மனிதனை மனிதனாக மதிக்கும் மாண்பு; உள்ளத்தால் பொய்யா தொழுகும் உயரிய பண்பு; சிறந்த தமிழ்ப் புலமை; நகைச் சுவையோடு தனது கருத்தை ஆணித்தரமாக எடுத்துரைக்கும் ஆற்றல்; வாதத் திறமை; இறை பக்தி; இன உணர்வு; சிந்தனைத் திறன் — ஆகிய அனைத்தையும் தனது உடைமையாகக் கொண்டிருந்தவர் கோப்பாய்க் கோமான் அமரர் கு. வன்னியசிங்கம் அவர்கள்.

இந்திய வம்சாவளித் தமிழரின் குடியுரிமையும் வாக்குரிமையும் பறிக்கப்பட்டதை எதிர்த்து, அதன் காரணமாகத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியிலிருந்து பிரிந்து, தந்தை செல்வாவுடன் சேர்ந்து இலங்கைத் தமிழரசுக் கட்சியை அமைத்த வன்னியசிங்கம் தனது கட்சியின் இலட்சியத்துக்காக இறுதி வரை ஓயாது உழைத்தார்.

1955 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் திருகோணமலையில் நடைபெற்ற கட்சியின் மூன்றாவது தேசிய மாநாட்டில் திரு. வன்னியசிங்கம் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார். அங்கு அவர் ஆற்றிய தலைமையுரை கட்சியினதும் அவரதும் அரசியல் கருத்துக்களைத் தெட்டத் தெளி வாக எடுத்துரைக்க [illegible] அமைந்தது. தனதுரையில் இலங்கைவாழ் இந்திய வம்சாவளித் தமிழரின் பிரச்சினைக்கே அவர் முக்கியத்துவம் கொடுத்தார்.

குடியுரிமைக்கு அடுத்தபடியாக தமிழ்மணியைக் காக்க வேண்டும் என்பதையே அமரர் வற்புறுத்தினார். தமிழ் நாட்டில் சிங்களக் குடியேற்றம் நடைபெறவிட்டால் ஈற்றில் தமிழரசு பெறுவதே இயலாது போகலாம் என அவர் கூறினார்.

இன்றைய சூழ்நிலைக்குப் பொருத்தமான சில விடயங்கள் அமரரால் அன்றே தரப்பட்டிருக்கிறது.

இன்று தமிழீழக்கோரிக்கைக்குப் பதிலாகச் சில யோசனைகளும் எச்சரிக்கைகளும் முன்வைக்கப்பட்டிருக்கின்றன. அவற்றை அன்றே முன்வைத்தவர் அமரர் கு வன்னியசிங்கம் அவர்கள். அவற்றில் சில வருமாறு;

1. தமிழ்ப் பிரதேசங்களில் மாகாண சுய ஆட்சி ஏற்படவேண்டும். அல்லது நாம் முற்றாகப் பிரிந்து போக வேண்டும். எங்கள் குறைந்த பட்சக் கோரிக்கை சமஷ்டி அரசமைத்து சுயாட்சி பெற வேண்டுமென்பதே. இதன்மூலம் நாட்டைப் பிளவுபடுத்தி அதனால் ஏற்படும் சங்கடங்களைத் தவிர்க்கலாம் என்பது தமது எண்ணம்.

தமிழ் பேசும் மக்களின் குறைகள் நாளுக்கு நாள் அதிகரித்து மனக்கசப்பு வளர்ந்து கொண்டே வருகிறது. இந்த மனக்கசப்பு வளர்ந்தால், சமஷ்டியில் ஏற்படக் கூடிய ஒற்றுமை

ஆ.நடராசா

தானும் சாத்தியமாகாது போகலாம்....... (17.4.55 இல் நடைபெற்ற இ. த. அ கட்சி மாநாட்டுத் தலைமைப் பேருரை)

2. தமிழரசு சிங்கள அரசுடன் நல்லுறவு கொண்டு, அமைதி, அன்பு, நல்லெண்ணம் என்பவற்றை வளர்த்து, சமஷ்டியமைப்பில் தனியதிகாரங் கொண்டதாக விளங்குமா, அல்லது சம்பவங்களின் போக்குத் துக்ககரமானதும் கசப்பானதுமாக மாறி, சமஷ்டி இணைப்பில் ஒன்றாக இயங்குவதும் முடியாத தொன்றாகி தனிமையான தமிழரசு ஒன்று உதயமாகுமா என்பதைக் காலந்தான் தீர்மானிக்க வேண்டும்.... (13-6-56ல் சிங்களம் மாத்திரம் மசோதாவின் மீது நாடாளுமன்றத்தில் உரை)

3. சமஷ்டியமைப்பின் கீழும் மத்திய அரசாங்கத்தில் சிங்களமும் தமிழும் சம அந்தஸ்துடன் விளங்கவேண்டுமென நாம் கோருகிறோம்.

இக்கோரிக்கைகளை முன்வைத்த வன்னியசிங்கம் அவர்கள், அடக்கியொடுக்கப்படுவதை எதிர்க்கும் நாம், எம்மவரில் ஒரு பகுதியினரை அடக்கியொடுக்குவது அநீதியென எடுத்துரைத்தார். எமது சமூகத்தில் நிலவிய தீண்டாமையை ஒழிப்பதற்காக ஓயாது உழைத்தார்.

அவரது முயற்சியால் எம்மவரில் ஒரு பகுதியினருக்கு அடைக்கப்பட்டிருந்த நல்லூர்க் கந்தசுவாமி கோயிலின் வாயிற் கதவுகள் அவர்களுக்காக அகலத் திறந்தன. அதைத்தொடர்ந்து இறைவன் சந்நிதியில் இடம்பெற்ற சமூக ஏற்றத் தாழ்வு வலுவிழந்து அழிந்தது.

கடமையைச் செய்து கட்டுப்பாட்டோடு, கண்ணியத்தைக் கடைப்பிடித்து, வண்டமிழைப் போற்றி வாழ்விடத்தைக் காக்க இறுதிவரை உழைத்த உத்தமர் வன்னியசிங்கத்தின் வழிகாட்டலையும் சேவையையும், அன்னார் மறைந்த இந்நாளில் நினைவு கூருவோம்.

## நாணய மாற்று விவரம்

வாசகர்களின் நன்மை கருதி வெளிநாட்டு நாணயங்களுக்கு உரிய இலங்கை நாணய மதிப்பு விவரம் வாராந்தம் சஞ்சீவியில் பிரசுரமாகிறது.

(இது இலங்கை வங்கியின் 12 ஆம் திகதிய மாற்று விகிதமாகும்)

| வெளிநாட்டு நாணயம் | இலங்கையில் (ரூபா சதத்தில்) |
|---|---|
| ஸ்ரேலிங் பவுண் | 41. 06 |
| அமெ. டாலர் | 28. 06 |
| இந்திய ரூபா | 2. 22 |
| மார்க் (ஜெர்மனி) | 13. 44 |
| கனடா டாலர் | 20. 04 |
| பிராங் (பிரெஞ்சு) | 4. 11 |
| பிராங் (சுவிஸ்) | 16. 55 |
| [illegible] டாலர் | 17. [illegible] |

## படிக்கும், நடிக்கும் முயற்சிகளில் தோல்வி

டாக்டராகப் படிக்கும் முயற்சியில் தோல்வி கண்ட இளம் தமிழ்ப் பெண், டாக்டராக நடிக்கும் முயற்சியிலும் தோல்வி கண்டு இன்று சிறைக்கம்பிகளை எண்ணுகிறாள்.

சென்னையைச் சேர்ந்தவர் ஜெயந்தி தேவதாஸ் 23 வயது. பிரபல வர்த்தகர் ஒருவரின் மனைவி. 3 குழந்தைகளின் தாய்.

திருமணத்துக்கு முன்னர் சென்னை மருத்துவக் கல்லூரியில் சேர முயற்சித்தார். அவரால் முடியவில்லை.

பின்னர் திருமணஞ் செய்து கொண்டார்.

இருந்தும் டாக்டராக வேண்டும் என்ற ஆசை அவரை விட்டுப் போகவில்லை.

திருமணஞ் செய்த பின்னர் 'டாக்டராக' நடிக்க வேண்டும் என்று ஆசைப் பட்டார்.

அதனால் தினமும் காலையில் டாக்டர்கள் அணியும் உடுப்புடன் "ஸ்டெதஸ்கோப்"பை எடுத்துக் கொண்டு வீட்டை விட்டுப் புறப்படுவார்.

இதனிடையில் சென்னை ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி பேராசிரியர் ஒருவரிடமிருந்து வைத்தியத்துறை இறுதிவகுப்பு மாணவி என்ற அடையாளக் கார்ட்டையும் எப்படியோ பெற்றுக் கொண்டார்.

தினமும் பஸ்ஸில் எங்கோ புறப்பட்டுச் சென்று மாலையில் வீடு திரும்பும் இவர், பஸ் பயணிகள் மத்தியில் 'டாக்டரம்மா' என்ற பெயரையும் பெற்றுக் கொண்டார்.

இதனால் இவருக்கு என்று நோயாளர்கள் கூட்டம் ஒன்றும் உருவாகியது.

ஒரு நாள் பயணம் செய்கையில் பஸ்ஸின் கண்டக்டர் தனது மனைவி வயிற்றுநோய் ஒன்றில் கஷ்டப்படுவதாக 'டாக்டரம்மா' விடம் முறையிட்டார்.

திருவல்லிக்கேணியில் உள்ள கஸ்தூரிபா காந்தி ஆஸ்பத்திரியில் மனைவியை அனுமதிக்கும்படி 'டாக்டரம்மா' கண் (8ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பறங்கியருக்குப் பாடம் புகட்டி மண்ணைக் காக்கத் துடித்த சங்கிலி

## ம. க. அ. அந்தனிசில்

அதன் பின்னர் பன்னிரு வருடங்கழித்து அல்பர்கேறியா என்பவன் கி. பி 1517 இல் களனிக் கோட்டையிலிருந்து பதினேழு கப்பல்களுடனும் ஆளணிகளுடனும் கொழும்பையடைந்து முன்னர் லோறன்சோ செய்து கொண்ட பொருத்த சாதனப்படி ஓர் வர்த்தகசாலையை நிறுவி செயலாற்றி வரும் வேளையில் இங்கும் தமது வாணிகத்திற்கு இடர் நேரிட்டதென்று மனம் குழம்பிய துருக்கிய வியாபாரிகள் அதுபற்றி கோட்டைக்காட்டு மன்னன் தர்மபராக்கிரமபாகுவிடம் சென்று பெரிதும் வருந்தி முறையிட்டதற்கு செவிசாய்த்ததர்மபராக்கிரமபாகு பறங்கியருடன் யுத்தத்திற்குக் கிளம்பவே துருக்கிய வர்த்தகர்களும் மன்னனுக்கு ஆட்பலம் கொடுத்து உதவி புரியலாயினர். ஆயுதபாணியாய் தன் படை அணிகளுடன் கொழும்பையடைந்த (கோட்டைக்காடும் கொழும்பும் அருகருகே அமைந்த இடங்கள்) தர்மபராக்கிரமபாகு பறங்கியருடன் கடும்போர் புரிந்தபோதிலும் இறுதியில் தன் படைவீரர்களை இழந்து தோல்வியுற்று பறங்கியருக்குப் பணிந்து அவர்களுக்கு வருடமொரு முறை கறுவா, இரத்தினம், யானை ஆதியன திறையாய்க் கொடுக்க உடன்பாடு செய்து கொண்டான். அதன்பின் அல்பர்கேறியா ஜுவாண்டே சில்வா (சில்வா என்பது போர்த்துக்கீச பெயராகும்) என்பவனுடன் 200 பறங்கியரை கொழும்பில் விட்டு களனிக் கோட்டைக்கு மீண்டான்.

பின்னர் கி. பி. 1520

### தர்மபராக்கிரமபாகு திறை செலுத்த உடன்பட்டான்

இல் டேபிரிஸ்ரேூ என்பான் கொழும்பில் வர்த்தகசாலை அமைந்திருந்த இடத்தில் கல்லால் ஓர் கோட்டை கட்டுதற்கான சகல ஆயத்தங்களுடன் பல கப்பல்களில் ஆள் அணிகளுடன் களனிக் கோட்டையிலிருந்து கொழும்பையடைந்து கோட்டை கட்டி ஜுவாண்டே சில்வாவின் பொறுப்புகளைத் தான் கையேற்றுக் கொண்டான். போர்த்துக்கீசர் கற்கோட்டை கட்டிய ஏழாம் வருடம் தர்மபராக்கிரமபாகு இறக்க அவன் சகோதரன் விஜயபாகு கோட்டைக்காட்டுக்கு அரசனாகி பறங்கியருக்குத் திறை செலுத்தி வந்தான். இவன் ஐந்தாம் விஜயபாகு ஆகும்.

யாழ்ப்பாண இராச்சியத்தை சங்கிலி மன்னன் ஆட்சிபுரியத் தொடங்கிய காலத்தில் கோட்டைக்காட்டை ஏழாம் புவனேகபாகு (கி. பி. 1534 — 1542) ஆண்டு வந்தான். இவன் ஐந்தாம் விஜயபாகுவினது முதல் மனைவியின் மூன்று புதல்வர்களில் மூத்தவனாவான் மாயாதுன்னை. றைகம் பண்டார என்போர் மற்றிரு புதல்வராவர் விஜயபாகு தனக்குப் பின் அரசபதவியைத் தனது இரண்டாம் மனைவியின் சகோதரனிடம் ஒப்படைக்கவிருப்பதையறிந்த முதல் தாரத்து மூன்று புத்திரர்களும் ஆத்திரமுற்று அந்நாளில் கப்பலை அரசனை ஜெயவீர பண்டார என்பவனின் உதவியைப் பெற்று கோட்டைக் காட்டை முற்றுகையிட்டு சல்மா என்பவன் மூலம் தம் தந்தையைக் கொலை செய்த பின்னர் கோட்டைக்காட்டை புவனேகபாகுவும், சீதாவாக்கையை மாயாதுன்னையும், றைகமத்தை (ருகம) றைகம் பண்டாரவும் ஆட்சி புரிந்து வந்தனர்.

அதன் பின்னர் புவனேகபாகு தன் புத்திரன் தர்மபாலனுக்கு பட்டஞ் சூட்டிவைக்க எத்தனிப்பதைக் கேள்வியுற்ற மாயாதுன்னை அதை எதிர்த்து நின்று தன் அண்ணனுடன் போருக்கு ஆயத்தம் செய்கையில் அதையறிந்த புவனேகபாகு போர்த்துக்கீச பறங்கியரின் உதவியை நாடி அவர்களின் துணையோடு மிக எளிதாய் சீதாவாக்கையைக் கைப்பற்றி அதற்கு எரியூட்டினன் தப்பியோடிய மாயாதுன்னை தன் அண்ணன் பறங்கியரின் துணையைப் பெற்றிருப்பதால் தானும் மற்றையோரின் உதவியை நாடினுலென்னவெனக் கருதி துருக்கிய வியாபாரிகளின் துணையோடு இளையவன் றைகம் பண்டாரவின் உதவிகளையும் பெற்று மீண்டும் தமையனுடம் 1540ல் போருக்கு கிளம்பினன் இது கண்ட பறங்கியர் புவனேகபாகுவிற்கு ஆதரவாக குறுபவுல என்னுமிடத்தில் மாயாதுன்னையையும் அவனது

### பறங்கியரின் களிமண் கோட்டை மீது படைகொண்டு மோதிய நல்லூர் அரசு (ஐந்து-ஆ)

படையணிகளையும் புறமுதுகிட்டு ஓடச்செய்தனர். இப்படி புவனேகபாகுவிற்கும் பறங்கியருக்கும் நெருக்கமான நட்பு ஏற்பட்ட காலத்தில் பறங்கியர் தம் மதத்தையும் பரப்பத் தலைப்படலாயினர் புவனேகபாகுவும் அதற்குச் சம்மதித்துக் கொண்டான்.

### அண்ணன் தம்பி பிரச்சினை மூடு மந்திரமாக இருந்தது

அதன்பின் புவனேகபாகு இறந்த பின்னர் ஏலவே மதமாற்றம் பெற்றிருந்த அவனது மகன் தர்மபாலன் தொன் ஜுவான் என்ற பெயரில் பறங்கியரின் பொம்மையாக கோட்டைக்காட்டை ஆட்சிபுரிந்து வந்தான்

இவ்வாறாக கோட்டைக்காட்டில் அண்ணன் தம்பியின் தகராறில் பறங்கியர் முழுக்க முழுக்க ஈடுபாடு கொண்டு தமக்குச் சாதகமான சூழ்நிலையை உருவாக்கி வைத்திருந்ததை அரண்மனை வேவுகாரர் மூலம் சங்கிலி மன்னனும் அவன் அண்ணனும் மந்திரியுமான பரநிருபசிங்கனும், காக்கை வன்னியன் முதலான சகல பிரதானிகளும் அறிந்திருந்தனர். ஏலவே கோட்டைக்காடு பறங்கியருக்குத் திறைசெலுத்தி வந்ததையும் நல்லூர் இராஜதானி அறிந்திருந்தது.

அக்காரணங்களினாலேயே யாழ்ப்பாண இராச்சியத்தில் பறங்கியர் வியாபாரம் செய்யவும், தங்குவதற்கு வீடு கட்டவும் சங்கிலி மன்னன் முற்றாக மறுத்து நின்றான் ஆனால் மந்திரி பரநிருபசிங்கன் பறங்கியருக்காக பரிந்துரைத்த காரணமென்ன? இங்குள்ள அண்ணன் தம்பி பிரச்சினைகளை பறங்கியர் அறியாமலிருந்தார்களென்று சொல்லமுடியாது. எல்லாம் முழுமூடு மந்திரமாகவேஇருந்தது. மந்திரி நினைத்தால் தன்னை முழுக்க முழுக்க நம்பும் மன்னனிடம் எதையும் மறைத்துவிட முடியுமல்லவா? எது எப்படியிருந்தபோதிலும் பறங்கியரை வியாபாரத்துக்கு அனுமதித்ததால் தனது இராச்சியம் நெருக்கடிக்குள் சிக்கிக்கொண்டதை நினைத்து உள்ளூர மனம் வெதும்பிய சங்கிலி மன்னன் நம்பிக்கைத் துரோகம் செய்த பறங்கியருக்கு நல்ல பாடம் புகட்டித் தன் மண்ணைக் காக்கத் துடித்தான் அதனாலேயே கோட்டைக்காட்டு மன்னன் ஒன்பதாம் பராக்கிரமபாகுவைத் தோற்கடித்த பறங்கியரை, சீதாவாக்கை மன்னன் மாயாதுன்னையை இரு முறைகள் தோற்கடித்த பறங்கியரை அஞ்சாநெஞ்சத்துடன் நேரடிப் போருக்கு அழைத்திருந்தான். பறங்கியர் போர்க்களம் வராவிட்டால் அவர்களின் மண்கோட்டையை மறுநாள் முற்றுகையிட்டு சுக்குநூறாக்குவேன் எனவும் சங்கிலி மன்னன் கர்ஜித்திருந்தான். தாம் கண்ட கீழைத்தேச மன்னர்களில் சங்கிலி மன்னன் கடும் போக்குப் பேர்வழி என்பதையும் வெள்ளைப் பறங்கியர் அறியாமலில்லை. அது அவ்வாறிருக்க—

நாளைய சூரியோதயத்துக்காக பறங்கிப்படையும் நல்லூர் இராஜதானியும் காத்திருக்கிறது. நல்லூர் அரண்மனை ஏராளமான தீவட்டி ஏந்திய காவலரால் இரவு முழுமையும் காவல் புரியப்படுகிறது. அரண்மனை ஒற்றர் படை இரவு வேளையிலும் நகரில் நடமாடிக் கொண்டிருக்கிறது.

(தொடரும்)

# விதிவழி செல்லும் மதியை மாற்ற வழியே இல்லையா?

விதியென்பது நாம் சென்ற பிறவிகளிற் செய்த நல்வினை தீவினைகளின் பயனே ஓர் உயிரைப் பிறவி தோறும் பற்றித்தொடர்வது. 'பற்றித்தொடரும் இருவினைப் பாவபுண்ணியமே' என்றார் பட்டினத்தடிகள்.

இதனை 'ஊழ்' என்ற அதிகாரத்தில் அடக்குவர் வள்ளுவர் இந்த ஊழ் மிகவும் வலிமையுடையது என்பது அவர் கருத்தினால் அறியலாம்.

'ஊழிற் பெருவலியாவுள மற்றொன்று, சூழினும் தான் முந்துறும்' என்பது வள்ளுவர் வாக்கு.

'ஆவது விதியெனில் அனைத்து மாயிடும் போவது விதியெனில் அனைத்தும் போகுமால்' என்பது கந்தபுராணம்.

இந்த விதிக்கேற்பவே மனம் செயல்படும். பொருள்வரும் விதியிருந்தால் அதற்கேற்ற முயற்சி தானாக ஏற்படும் பொருள் அழியும் காலம் ஏற்பட்டால் அதற்கேற்பச் சோம்பல் ஏற்படும்'

### பௌராணிக வித்தகர்
### — வ. குகசர்மா —

இந்தச் சோம்பலுக்கும் முயற்சிக்கும் மனமே முதற்காரணம். ஒருவன் நுண்ணிய அறிவினைக் கொண்டு விளங்கினாலும் ஏற்றசமயத்திலே விதியின் அளவிலே மதிநிற்கும்.

இராமரைக் காட்டிற்குப் போகும்படியும் பரதன் நாடாளவேண்டும் என்றும் கைகேசி விரும்பினாள். வேறொரு வழியும் காணமுடியாத தசரதர் அந்த விருப்பத்திற்கு இசைகிறார். இதனைக் கேட்ட இராமருடைய தம்பி இலக்குவன் கோபம் கொள்கிறான். எதிர்ப்போர் யாவரையும் வென்று இராமருக்கே முடிசூட்டி வைப்பதாகச் சொல்கின்றான். இராமர் காட்டுக்குப் போவதற்கு காரணமாய் நின்ற சிறியதாயையும். பரதனையும், தந்தையையும் நிந்திக்கிறான். இராமர் சாந்த சொரூபமாக வருகிறார்' தம்பியின் கோபத்தை சாந்தமான ஆனால் உறுதியான வார்த்தைகளால் நீக்கி விடுகிறார்.

நதியினிடத்தில் நீர் வற்றிப்போனால் நதியைப் பிழை கூறலாமா? அதற்கு மழைபெய்யாத காலவேறுபாடாகிய வேறொரு பிழையுண்டல்லவா? என்று கேள்வி கேட்பதுபோல் கைகேசி. தசரதர், பரதன் மூவரும் பிழையானவரல்ல. விதியின் சதிதான் இது என்று கூறி இலக்குவன் சினத்தை மாற்றி விடுகிறார் இராமர்.

"நதியின் பிழையன்று நறும்புனலின்மையற்றே நதியின் பிழையன்று. பயந்துநமைப் புரந்தாள் மதியின் பிழையன்று மகன்பிழையன்றுமைந்த விதியின் பிழைநீ யிதற்

(7 ஆம் பக்கம் பார்க்க)

# கடற்கரையில் காட்சிதந்து கருணை மழை பொழிந்த அன்னை

புதிய ஏவாளே நாம் இன்று போற்றும் அன்னை வேளாங்கண்ணி. புதிய ஆதாமே அவளிடம் தேவவல்லமையால் உற்பவித்துப் பிறந்த தேவமகனாகிய யேசுக்கிறிஸ்து இந்த யேசுக்கிறிஸ்துவின் பிறப்பை முன்னிட்டு பழைய ஏவாளைப்போல் கடவுள் தமது அளவில்லா வல்லமையால் தம் இஷ்டப் பிரசாதங்களால் நிரப்பியருளும் பாத்திரமாக மரியாய் எனப் பெயருடைய அன்னை வேளாங்கண்ணியை அற்பமேனும் மாசு அணுகாத மாசில்லாமல் உற்பவித்துப் பிறக்கத் திருவுளங் கொண்டார்.

கிறிஸ்து மனுவுரு எடுக்க மரியாயை எல்லா அருள் வளங்களாலும் நிரப்பி இற்றைக்கு 2000 வருடங்களுக்கு முன்னர் நசரேத்தூரில் புனித சுவக்கீனுக்கும் புனித அன்னம்மாளுக்



கும் வயோதிபராயிருந்த போதே பிள்ளையாக உற்பவித்துப் பிறப்பித்தார்.

அச்சமழந்தை வளர்ந்து ஏறக்குறைய பதினலு வயதாயிருக்கும்போது பாதுகாப்பாளராக மாத்திரம் இருக்கத்தக்க 'ஒரு மகாநீதிமானும் பெரும் விரத்தத்துவம் பூண்டு வாழ்ந்தவருமான சூசை என்பவரைக் காக்கும் கணவனாக கடவுள் நியமித்தார்.

கன்னிகையும் தாயுமான மரியாய், மாசில்லாமல் உற்பவித்த மரியாய், ஆத்தும சரீரத்தோடு மோட்சலோகத்துக்கு எழுந்தருளிப் போன மரியாய், திரித்

### வித்துவான் அ. சந்தியாப்பிள்ளை

துவக் கடவுளால் பரலோக பூலோக இராக்கினியாய் மோட்சமுடி சூட்டப்பட்ட மரியாய் என்றெல்லாம் போற்றப்படும் பாக்கியம் பெற்றவளே நாம் இன்று விழா வெடுக்கும் அன்னை வேளாங்கண்ணி

மரியாய் கடந்த 2000 வருடங்களாக பல இடங்களில், பல முறைகளில் காட்சியளித்த வரலாறு

> வேளாங்கண்ணி திருவிழா நானை பல ஆலயங்களில் கொண்டாடப்படுகிறது

களினால் திருச்செபமாலை மாதா, லூர்து மாதா, மருதமடு மாதா, பாத்திமா மாதா எனவும் மக்கள் போற்றி வருகிறார்கள் கடைசியாக வேளாங்கண்ணியில் கடற்கரையில் சிறுவனுக்குக் காட்சியளித்துக் கருணைமழை பொழிந்த வரலாறே நாம் உலக இரட்சகியாம் வேளாங்கண்ணி அன்னைக்கு விழா வெடுக்கும் பெருநிகழ்ச்சியாகும்.

பகுதி I

# அரச பஸ் சேவை: வடக்கில் அதன் மந்த நிலை; கஷ்ட நஷ்டம்!

புகையை விட்டு விட்டு பயணிகளை ஏற்றிச் செல்லும் உள்ளூர் பஸ்கள்.

தபாலில் வரும் தந்தி போல் சாவகாசமாய் ... தாமதமாய் ... வரும் வெளியூர் கடுகதி பஸ்கள்.

குழந்தைகளை வைத்திருக்கும் தாய்மாரைச் சுற்றி அஞ்சலோட்டமாய் ஆள்மாறி வியாபாரம் செய்யும் இனிப்பு (ரொபி) வியாபாரிகள்-

கந்தல் கச்சையுடன் கொச்சை மொழியில் பிச்சை கேட்கும் பச்சைப் பாலகர்கள்—

பள்ளி விட்டதும்துள்ளி வரும் சீருடைச் சிறுசுகள் —

"கியூவில் வா!" "முன்னேபோ!!" என வாய் கிழியக்கத்தி பயணிகளை நடக்கப்பண்ணும் நடத்துனர் (கண்டக்டர்)

பிரயாணியாக ஏறியவர்களை வழியில் புரியாணியாக்காமல்; அவர்கள் உயிர்களைக்காக்கும் (இறைவர்) சாரதி -

இவர்களில் எவருமே இல்லாமல்,

—ஒரு காலத்தில் ஜாம் ஜாம் என்று கூட்டத்தால் நிரம்பி வழிந்த யாழ்ப்பாணம் பிரதம பஸ் நிலையம் அநாதரவாகத் தோற்றமளிக்கின்றது.

இ. போ. ச. என்றால் இதில் போவது சங்கடம் என இன்று புதிய கருத்து திரித்து சொல்லப்படுகிறது.

இவ்விதம் சொல்லடிக்கும் இடைக்கிடை 'ஷெல்' லடிக்கும் உள்ளாகிய யாழ்ப்பாணப் பிரதான பஸ் நிலையத்தை உற்று நோக்குகிறேன்.

அதன் முகத்தில் சோகத்தின் முகவரிகள்.

தன்னோடு கூடிக் கூவிக் களித்த குயில்களை இழந்த இலையுதிர் காலத்து இலுப்பை மரம்போல் உறவுகளை இழந்து, ஆங்காங்கே உதிர்ந்து களையிழந்து காணப்படுகின்றது.

### மக்களின் மனக்கோலங்கள்

சிலர் மட்டும் சிதறு தேங்காய் போல் ஆங்காங்கே நிற்கக் காணப்படுகின்றனர்.

இ. போ ச. பஸ் வரும் என காத்திருக்கின்றனர் போலும்!

764 பஸ் தரிப்பில் ஒருவர் மட்டும்

அவரை அணுகிக் கேட்கிறேன்.

"பஸ்ஸிற்கா நிற்கிறீங்க"

இல்லைத்தம்பி ஒருதர் வந்து சந்திக்கிறனென்றவர் அவரைப் பார்க்க நிற்கிறன் "

பருத்தித்துறை பஸ் தரிப்பை நோக்கி நகர்கிறேன் அங்கே ஓர் இளம் சோடி

என்னைக் கண்டதும் ஒன்றை ஒன்று பார்த்திருந்த கண்களும், கோர்த்திருந்த கைகளும் விலகுகின்றன. கொஞ்சம் வேர்த்திருக்கின்றது.

பஸ் இப்ப வருமோ— கேட்கிறேன்.

"தெரியாதுங்க; நாங்கள் சும்மா நிற்கிறம்."

- புரிகிறது பஸ் தரிப்பிடம் காதலர் தரிப்பிடமாகிவிட்டது.

பஸ் நிலையத்தில் ஒருவர் கூட பஸ்ஸிற்காக நிற்கவில்லைப் போலும். ஒரு யுவதி கையில் கொப்பிகளுடன் இளவாலை பஸ் தரிப்பில் நிற்பதைக் கண்டு அருகே செல்கிறேன்.

இதுவும் காதலனை வழிமேல் விழிவைத்து காத்திருக்கும் ரகமோ?

என்னங்க பஸ்ஸிற்கா நிற்கிறீங்க...

"ஓ!..."

விசித்திர [illegible] ணியை பார்ப்பது போல் பார்க்கும் என்னை ஒரு மாதிரிப் பார்க்கிறார்.

"பஸ் வரும் போலை தெரியேலை மினிபஸ்ஸில் போகலாமே"?

சீஸன் ரிக்கட் இருக்கு..."

புரிகிறது!! கட்டண உயர்வின் போதும் ஏழைகளை, மாணவர்களை பாதிக்காதது "ஸீஸன் ரிக்கெட்" ஒன்றுதான் இருக்கின்றது.

பஸ் நிலையத்தில் உள்ள பருவச்சீட்டு விற்பனையாளரை அணுகி பஸ்சேவை பற்றி விசாரிக்கின்றேன்"

"சீஸன் ரிக்கெட்" எடுத்தாலும் மினிபஸ்சில் போறது நட்டமில்லை 6 நாட்கள் இ. போ. ச. வில் பயணம் செய்தால் போதும் சீஸனுக்குரிய பணம் சரியாகிவிடும்.

முன்னர் மாதம் 5 லட்சம் ரூபா வட பிராந்திய போக்குவரத்து சபைக்கு "சீசன் ரிக்கெட்டால் சேரும். இப்போது ஐம்பதாயிரம் ரூபா கூட இல்லை...என்றார் அவர்.

அவரிடம் விடை பெற்று திரும்புகிறேன். [illegible] சில சாக்குப் பொதிகளை [illegible] தரிப்பில் நிற்கிறார்.

"ஆச்சி என்ன பஸ் சிற்கே?"

"ஓம் மேனை..."

"ஏனனை ஆச்சி மினி பஸ்ஸிலை வடிவாய் இருந்து போகலாமே!"

"இல்லை மேனை இதிலை போனால் காசு மிச்சம்..."

"ஒரு ரூபாய்க்கு மேலை மிஞ்சப் போகுதே? நேரமெல்லே பிந்தப் போகுது?..."

"பஸ்சிலை போனால் 10 ரூபாவுக்கு மேலை எனக்கு மிச்சமடா மேனை"

புரியாத புதிராக ஆச்சியை பார்க்கிறேன்.

"உண்மையிலை இந்த சாமானுக்கும் எனக்கும் சேர்த்து பஸ் காசு 15 ரூபா. ஆனால் நான் கொடுக்கிறது 5 ரூபா" மட்டும்... கண்டக்டர் பெடியன் ரிக்கெற் போடமாட்டான். தான் அந்த 5 ரூபாவையும் எடுத்துக் கொள்வான் நான் 10 ரூபாவை எடுத்துக் கொள்ளுவன்."

ஆச்சியின் கதை என்னை [illegible] யது.

[illegible] பஸ் நிலையத்தில் நின்ற ஒரு நடத்துவரை இது பற்றி விசாரித்தேன்.

### பேட்டி: எஸ். ஜே. பி. ரட்ணதுரை

பயணிகளிடம் பணத்தை வாங்கி ரிக்கெற் போடாமல், பொக்கற்றில் போடுவது நியாயமா?

இன்றைக் 13 ஆம் திகதி. 8 ஆம் திகதி தரவேண்டிய சம்பளம் இன்னும் எங்களுக்கு வந்து சேரவில்லை. எங்கடை வீட்டிலை அடுப்பெரிய வேண்டுமென்றால் நாங்கள் இப்படிச் செய்யத்தான்வேணும்"

இதுபற்றி அங்கேநின்ற ஒரு ரிக்கெற் பரிசோதகரை வினவினேன்.

'இப்படியான பொறுப்புணர்ச்சியற்றவர்களை கண்டு பிடிப்பதோ, கண்டிப்பதோ தண்டிப்பதோ இல்லையா?"

"நாங்கள் இப்போது ரிக்கற் பரிசோதனைக்கு போவதே அபூர்வம்."

"ஏன், என்ன காரணம்?

"முன்பு எமக்கென்று பிரத்தியேக ஜீப் ஒன்று

(6 ஆம் பக்கம் பார்க்க)

## கடல் கடந்த கடிதம்

### மினி வீடும் வேண்டுமா?

தம்பி,

எங்கும் மினி, எதிலும் மினி என்று அங்கலாய்த்து எழுதிய கடிதம் கிடைத்தது ஆள்பவர்களின் அன்பு குறைந்து அரக்கத்தனம் அதிகரித்ததும், அரச நிர்வாக இயந்திரத்தையே. தம்பி, அன்னியப்படுத்தி ஒதுக்கும் மனப்போக்கு வந்துவிட்டது! அவலை நினைத்து உரலை இடிக்கலாமா?

அரச நிறுவனங்களின் சேவைகள் குறைந்துவிட்டன; அதை நிறைவேற்ற மினி சேவைகள்! பாடசாலைகளின் சேவை போதாதென்று, கிராமம் தோறும் சிறிய வீடுகளில் டியூட்டரிகள்—கல்விநிலையங்கள்!

அரசாங்க ஆஸ்பத்திரிகளின் சேவை போதாதென்று சிறிய கட்டடங்களில் தனியார் மருத்துவ சேவை. இன்னும் இருக்கிறோம் என்று காட்டிக் கொள்ளும் இ போ ச ஒரு புறம்;மினி பஸ் சேவை இன்னொரு புறம்! சினிமாத் தியேட்டர்கள் ஒரு புறம் தூங்கி வழிகின்றன; இன்னொரு புறம் வீதிக்கு வீதி சிறிய வீடுகளில் மினி சினிமாக்கள்! மினி தொலைத் தொடர்பு நிலையங்கள்; மினி எரிபொருள் நிலையங்கள்—இப்படி எங்குபோய் முடியுமோ, தெரியவில்லை!

'கீரைக்கடைக்கும் எதிர்க்கடை வேண்டும்! அப்போதுதான் நல்ல கீரை கிடைக்கும்; விலையும் மலியும்!' இது முதலாளித்துவப் பொருளாதாரத் தத்துவம்! கழுத்து வெட்டுப் போட்டிகள் - பிரமாண்ட விளம்பரங்கள் - தரக் குறைவு - கலப்படம் - வீண் விரயம் - கட்டண உயர்வு—இவை பற்றிச் சிந்திக்க வேண்டாமா? அரச, தனியார் சேவைகளுக்கிடையேயான வரம்புகள், இணைப்புகள் சீராக்கப்படவேண்டாமா?

எமது பகுதியின் மூலப்பொருள்கள் எவை? எந்தெந்த நுகர்வுப் பொருள்களைத் தயாரிக்கலாம்? பொருத்தமான தொழில்நுட்பம் எது? இவைபற்றி, தம்பி, சிந்தித்து செயலாற்றவேண்டிய காலமிது! கிடைக்கும் மூலதனத்தைச் சிதறவிடலாமா?

பெரிய வீடுகளின் குறைகளைச் சீராக்கினால், தம்பி, மினி வீடுகள் அதிகம் தேவையில்லையே! மிச்சமாகும் மூலதனத்தைப் புதிய தொழில்கள், முயற்சிகளைப் பயன்படுத்த முடியாதா?

அன்புடன்
—சிவா—

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org




## அறிந்து கொள்ளுங்கள்

சவூதி அரேபியாவில் ஓகாயர் கடற்கரை உள்ளது. இந்தக் கடற்கரை மணலில் யார் நடந்தாலும் 'இனிய ஓசை' எழும்புகிறது. ஒவ்வொரு காலடியை எடுத்து வைக்கும்பொழுதும் இனிய ஓசையைக் கேட்கலாம் இந்தக் கடற்கரையில் உள்ள மணல் 'பாடும் மணல்' என்கிறார்கள்.

✶

ரஷ்யாவில் இருக்கும் பர்சா கெலம்ஸ் என்ற தீவில் 'மழை'யே பெய்வதில்லை. 180 சதுர கிலோ மீட்டர் சுற்றளவுள்ள இந்தத் தீவுக்கு அருகில் உள்ள 'ஆரல்' கடலில் மழை பொழிந்தாலும் இந்தத் தீவில் ஒரு துளி மழைகூடப் பெய்வதில்லை.

✶

அமெரிக்காவின் தந்தை ஜார்ஜ் வாஷிங்டன் சென்ற பதினெட்டாம் நூற்றாண்டின் 'கடைசி ஆண்டில், 'கடைசி மாதத்தில்'' 'கடைசிக் கிழமையில்', கடைசி நாளில், கடைசி மணியில் இறந்தாராம்!

✶

ஒரு 'கப்பல்' மேற்கு நோக்கிச் செல்லும் போது உள்ள எடையை விட, அக்'கப்பல்' கிழக்கு நோக்கிச் செல்லும் போது எடை குறைவாக இருக்குமாம். பூமி கிழக்கு முகமாக சுற்றுவதே இந்த எடைக் குறைவுக்குக் காரணமாகும்.

கு. லோகசிங்கம்

நாயன்மார்கட்டு, யாழ்ப்பாணம்.

# அன்னைக்கு இனிய அன்பு மகன்
## விருந்தில் இனிப்பு எடுத்து வந்த சந்திரன்

முற்காலத்தில் வாழ்ந்த அன்னையார் ஒருவருக்கு நான்கு புத்திரர்கள் இருந்தார்கள். அப்புதல்வர்களுக்கு சூரியன், சந்திரன், வாயு, வருணன் எனப் பெயரிட்டு மிக்க பாசத்துடனும், அன்புடனும் வளர்த்து வந்தார்.

ஒரு நாள் அந்நாட்டு அரசன் அவ்வன்னையாரின் புதல்வர்களை விருந்துபசாரத்திற்கு அழைத்திருந்தார். அப்புதல்வர்களும் விருந்து நடக்கும் இடத்திற்குச் செல்ல ஆயத்தமானார்கள். அப்பொழுது தாயார், "விருந்தில் ஏதாவது இனிப்புப் பண்டங்கள் தந்தால், எமக்கும் கொண்டு வந்து தருவீர்களா" எனச் சொன்னார். அவர்களும் அவ்வாறே செய்ய இணங்கிச் சென்றனர்.

அவ் விருந்தில் கொடுத்த இனிப்புப் பதார்த்தங்களை சூரியன், வாயு, வருணன ஆகியோர் சாப்பிட்டு விட்டார்கள். சந்திரன் மட்டும் தாயாருக்கெனக் கொண்டு வந்தார். தாயார் அவர்களை ஒவ்வொருவராகக் கேட்ட போது சூரியன் 'விருந்தில் இனிப்புப் பண்டம் தரவே இல்லை, அம்மா'' என்று சொன்னார். வாயு "மறந்தே போனேன்'' என்று சொன்னார். வருணன் "சாப்பிட்டு விட்டேன்'' என்று சொன்னார் சந்திரன் மட்டும் தாம் கொண்டு வந்த இனிப்புப்பண்டத்தைத் தாயிடம் கொடுத்தார். தாயார் மட்டற்ற மகிழ்ச்சி அடைந்தார். சந்திரனை அன்போடு அரவணைத்து "உமது புகழ் என்றும் குறையாது. உமது முகம் எந்நாளும் பிரகாசமாக ஒளி வீசி உலக மக்களால் போற்றப்படுவாய்'' என ஆசீர்வதித்தார்.

இதனால் தான் நாங்கள் சூரிய ஒளி கடுமையாக இருந்தால் சரியான வெயில் எனச் சினந்து கொள்கின்றோம். கடும் மழையானால் இதென்ன மழை என அலுத்துக் கொள்கின்றோம். பெருங் காற்றானால் சீ பேய்க்காற்றாக உள்ளதென கடிந்து கொள்கின்றோம் ஆனால், நல்ல சந்திர ஒளியைக் காணும் போது நிலவு இன்னும் வராதா? நல்ல நிலவாக உள்ளதேயென எண்ணி மகிழ்ந்து உலாவுகின்றோம்.

பிள்ளைகளாகிய நாங்கள் தாயாரைப் போற்றி வாழ்வோமாக.

செல்வி. நிவேதிதா கணேசன்

(சிறியபுஷ்ப மகளிர் மகா வித்தியாலயம். கரம்பொன் ஊர்காவற்றுறை.)

## விண்மீன்களின் அணிவகுப்பு

ஆகாயப் பந்தலில் அழகாகப் பூத்திருக்கும்
அலங்காரப் பூக்களின் அலங்கார அணிவகுப்பு
ஆகாய தேவதைகள் உலகத்து மானிடரை
மையலுடன் நோக்கிச் சிமிட்டும் மணிவிழிகள்

ஆகாய மெனும் வாசலில் வரவேற்புக் கோலங்கள்

மண்ணுலக மாந்தரெல்லாம் மன மகிழ்ந்து நோக்கும்

விண்ணுலகின் கார்த்திகைத் தீபவரிசைகள்
வரைந்திட வைத்துள்ள வண்ணக்கோலங்கள்

வானமெனும் வீதியில் வரிசைகள் ஏதுமின்றி
வாரியிறைத்திருக்கும் வண்ணஒளி விளக்குகள்
வானமே கூரையாய் வாழ்கின்ற வறியவர்க்கு
இறைவன் அமைத்துள்ள இலவச விளக்குகள்

இ ரகுராம்

(யாழ். மத்திய கல்லூரி)

## இவன் யார் தெரியுமா?

இவன் நம்பத் தக்கவன்
இவன் உறுதி உடையவன்
இவன் நேசம், மரியாதை உடையவன்
இவன் மற்றொருவனுக்குச் சகோதரன்
இவன் வீரம் செறிந்தவன்
இவன் பிராணிகளின் தோழன்
இவன் ஒத்துழைப்பவன்
இவன் மகிழ்ச்சி உடையவன்
இவன் சிக்கனம் உடையவன்
இவன் தூய்மையானவன்

இவன் யார் தெரியுமா?
இவன் தான் ஒரு சிறந்த சாரணன்

• ரூபன்

(பளை மகாவித்தியாலயம்)

## நீங்களும் சிரிக்கிறீர்களா?

எங்கள் வகுப்பு ஆசிரியர் எல்லோரையும் பரீட்சைக்கு ஆயத்தப் படுத்தும்படி எமக்குச் சொன்னார் அப்படிச் சொல்லும்போது, நாளைக்குக் கணக்குப் பாடம் எல்லோரும் "கரைத்துக் குடித்துக்'' கொண்டு வாருங்கள் என்றார்

நாங்கள் அப்படியே செய்துகொண்டு போய் நல்ல புள்ளிகளைப் பெற்றோம் ஒரு பையன் மாத்திரம் ஒரு புள்ளியும் எடுக்கவில்லை ஆசிரியருக்குச் சரியான கோபம் வந்து விட்டது நேற்று எல்லோரையும் கரைத்துக் குடித்துக்கொண்டு வரும்படி சொன்னேன்; 'மடப்பயலே நீ ஏன் அப்படிச் செய்யவில்லை' எனக் கேட்டார்.

அந்தப் பையன் உடனே சேர்... அம்மா கரைத்துத் தரவில்லை, என்று அழுதபடி சொன்னான். இதைக் கேட்டு ஆசிரியரும் நாங்களும் விழுந்து விழுந்து சிரித்தோம். "நீங்களும் சிரித்திறீர்களா!

அனுப்பியவர்:-

இரட்ணசிங்கம் கிரிசாந்தி

சாவகச்சேரி.

# வேலைக்குச் செல்லும் பெண் வாழ்வில் நிறைவு பெறுகின்றாள்

திருமணமாகி குடும்பத் தலைவியாய் இருக்கும் ஒரு பெண், வெளியில் வேலை தேடிச் செல்வது அவசியமா? வீட்டு வேலைகளை மட்டுமே செய்து கொண்டு நிறைவை அடைய முயல வேண்டுமா?

இன்று பெண்கள் பல வேறு துறைகளில் பயின்று பயிற்சி பெற்றுத் தேறி வருகின்றார்கள். உயர்கல்வி கற்க வெளியில் அனுப்பத் தயங்கிய குடும்பங்களில் கூட பெண்களை விடுதிகளில் விட்டுப் படிக்க வைக்கிறார்கள். வெளிநாட்டுக்கு அனுப்புகிறார்கள்.

பெண் வேலைக்குப் போய் சம்பாதிக்கிறாள் என்பதோ, மனைவி வேலை பார்க்கிறாள் என்பதோ தன் கையாலாகாத்தனத்தைச் சுட்டிக்காட்டுவதாக இப்போது எந்தத் தந்தையோ, கணவனோ நினைப்பதில்லை. ஒரு பெருமைக்குரிய விஷயமாகவே இன்று இது மாறிவிட்டது!

இப்படி வேலைக்குப் போக வாய்ப்பு இருக்கும் போது, அது குடும்ப கௌரவத்தை எந்த வகையிலும் பாதிக்காது என்று கருதும்போது வேலைக்குப் போவதா வேண்டாமா என்ற குழப்பம் சில சமயங்களில் ஏற்படுகின்றது.

வேலைக்குப் போவதா, வேண்டாமா என்ற கேள்விக்கு அவ்வளவு சுலபமாகப் பதிலளிக்க முடியாது அவரவரது தனிப்பட்ட காரண காரியங்களை ஆராய்ந்துதான் ஒரு முடிவிற்கு வர முடியும்.

கல்யாணத்துக்குமுன்பு வேலை செய்து கொண்டிருந்த பெண்களுக்கு திருமணமாகிக் குழந்தை இல்லை என்றாலோ, அல்லது கணவனின் வியாபாரத்தில் தானும் சேர்ந்து கொண்டாலோ இந்தக் கேள்வியே வராது.

ஆனால் ஒரு நடுத்தரக் குடும்பத் தலைவி - அவள் தாயாகவும் இருக்கும் போது வேலைக்குப் போகும் அவசியமும், வீட்டைக் கவனித்துக் கொள்ள வேண்டிய பொறுப்பும், ஒன்றாக இணைய உடனே ஒரு முடிவை எடுக்க முடியாமல் தடுக்கின்றன.

அவர்கள் வேலைக்குப் போவதனால், என்ன லாபம்? எந்த விதத்தில் அவர்கள் வாழ்க்கையில் மாறுதலை உண்டாக்கும்? அதை எப்படிச் சமாளிக்கலாம்? முன் கூட்டியே இதை எல்லாம் யோசனை செய்து தீர்மானத்திற்கு வருவது நல்லது

பொருளாதார நிலை

குடும்பத்தில் பொருளாதார நிலைமையில் முன்னேற்றம் காண நீங்கள் வேலைக்குப் போவது அவசியமானதெனின் அதிகம் யோசிக்க வேண்டிய தேவையில்லை,

வாங்கிய கடனை அடைக்க வேண்டும். குழந்தைகளின் படிப்பிற்கான செலவை சமாளிக்க வேண்டும். தொலைக்காட்சிப்பெட்டி குளிர்சாதனப் பெட்டி போன்ற சதாரண சௌகரியங்களை அடைய இன்னொரு சம்பளத் தொகை வந்தால் நன்று இருக்கும் என்ற நிலை இருக்குமானால் நிச்சயமாக ஒரு வேலை தேடிக்கொள்ள வேண்டியது தான்.

ஆனால் அவ்வாறு வெளியில் வேலைக்குச் செல்லும்போது குடும்பத் தலைவியான நீங்கள் உங்கள் அன்றாட வீட்டு வேலைகளை எவ்வாறு கவனிக்கப் போகிறீர்கள்? காய்கறி, மளிகைச் சாமான்கள் வாங்க யார் போவது? குழந்தைகளை யார் பொறுப்பாகக் கவனித்துக் கொள்வார்கள்? வீட்டு வேலைகளைப் பொறுப்பாகச் செய்ய நம்பகமான ஆள் கிடைக்குமா? அவருக்கு சம்பளம் கொடுக்க உங்கள் ஊதியம் போதுமானதா?

அனேகமாக பெண்களின் சம்பாத்தியத்தில் பிடிப்புகள் எல்லாம் போன பிறகு, போக்குவரத்து செலவு, வேலைக்கு செல்ல ஆடை அணிகலன்கள் வாங்க செலவு, உதவிக்கு ஆள்வைத்துக் கொண்டு,வீட்டில் செய்ய நேரமில்லாத - முடியாத

(6 ஆம் பக்கம் பார்க்க)

## சுக வாழ்விற்கு சில வழிகள்

✶ சீரான இரத்த ஓட்டத்திற்குப் பச்சை வெங்காயம் மிகவும் உதவும். வழக்கமாக வெங்காயத்தை உணவில் சேர்த்து வருபவர்களை முடக்கு வாத நரம்பு நோய்கள் தாக்குவதில்லை என்று மருத்துவ ஆராய்ச்சியாளர்கள் நம்புகிறார்கள்

✶ இளம் நரை உள்ளவர்களுக்கு மருதாணி இலையை நன்றாக மை போல அரைத்துப் பிறகு வடைபோல தட்டி வெய்யிலில் காய வைத்துப் பிறகு தேவையான அளவு தேங்காய் எண்ணெயில் போட்டு அடுப்பில் வைத்துக் காய்ச்ச வேண்டும். வடிகட்டி ஒரு போத்தலில் வைத்துக் கொண்டு தினமும் தலைக்குத் தேய்த்து வந்தால் இளம் நரை போகும்.

✶ சாதாரண ஏப்பம் வந்தால் ஒரு கெடுதலும் இல்லை. புளி ஏப்பம் வந்தால்; சாப்பிட்ட பிறகு பெருங்காயத்தை சிறிதளவு இடித்து ஒரு டம்ளர் மோரில் கலக்கிக் குடித்தால் புளி ஏப்பம் வருவது நின்று விடும். நல்ல செரிமானம் ஏற்படும்.

✶ 'பெங்கால் கிராம்' என்று ஆங்கிலத்தில் குறிப்பிடப்படும் உழுந்தம் பருப்புக்கு இதய அடைப்பை தடுக்கும் சக்தி இருக்கிறது. இந்திய மருத்துவ ஆராய்ச்சியாளர்கள் உழுந்தை சிறுவயதிலிருந்து உணவில் சேர்த்து வருகின்றவர்களுக்கு ஹார்ட் அட்டாக்கே வருவது அபூர்வம் என்கிறார்கள்.

✶ உங்கள் வாயில் வெங்காய வாசனை, பூண்டு வாசனை வீசுகிறதா? அதை உடனே போக்க விரும்புகிறீர்களா? இருக்கவே இருக்கிறது எலுமிச்சை. ஒரு சிறு துண்டை வாயில் வைத்துக் கொள்ளுங்கள். வெங்காய வாசனை அற்றுவிடும்.

சியாமளா தியாகராஜா

## மனையாள் மறக்கக் கூடாதவை

✶ கணவனோடு தனித்திருக்கும் எந்த வேளையிலும் மனைவி பளிச்சென தன்னை அலங்கரித்து இருக்க வேண்டும்.

✶ எக்காரணத்தைக் கொண்டும், வேலைக்காரப் பெண்ணை தன் கணவனுக்குப் பணிவிடை செய்ய ஒரு மனைவி அனுமதிக்கக் கூடாது.

✶ மங்கள நிகழ்ச்சி, பண்டிகை, துக்கம், பிரசவம் தவிர எக்காரணம் கொண்டும் ஒரு பெண் தன் பிறந்த வீட்டிற்குப் போகக் கூடாது.

✶ ஒரு வயதாகும் வரையில், குழந்தைக்கு தலையில் பூ வைக்கக் கூடாது.

✶ ஒரு குடும்பத்தில் "எத்தனை குழந்தைகள்?'' என்று கேட்கா தீர்கள்.

தொகுப்பு: இன்பநாயகி




# ரேவதி திருமணம் தடைபடாது தவறுது நடக்கும் என ஊகம்

ரேவதி — சுரேஷ் மேனன் திருமணம்



நின்று போய்விடும்— ரேவதி திருமணத்திற்கு மணமகன் வீட்டில் எதிர்ப்பு—

ரேவதி— சுரேஷ்மேனனுக்கும் இடையே பிணக்கு—

இப்படி பலவித செய்திகள்

ஒளிப்பதிவாளர் சுரேஷ் மேனன் மிகவும் ஒதுங்கி இருக்கும் சுபாவம் உள்ளவர். பத்திரிகைகளுக்கு பேட்டி கொடுப்பதை தவிர்த்துக்கொள்பவர்.

இதனால்தான் இப்படியான செய்திகளைச் சில பத்திரிகைகள் வெளியிடுகின்றன என்று சினிமா வட்டாரங்கள் கூறுகின்றன.

'பிரேம பாசம்' படப்பிடிப்பின்போது அரும்பிய காதல், மிகவிரைவில் கல்யாணம் வரை சென்று இரு வீட்டாரின் முழுச் சம்மதத்துடன் நிச்சயதார்த்தம் நடந்தது.

இப்படி இவர்கள் காதல் வளர்ந்து, வெகு விரைவில் கல்யாணப் பேச்சுவார்த்தைவரை செல்லும் என்று யாரும் எதிர்பார்க்கவில்லை.

இருவரும் ஒருவர்மீது ஒருவர் கொண்ட காதலில் மிகவும் உறுதியாக இருப்பதாகவும்—

நிச்சயம் ஏற்கனவே நிச்சயித்தபடி திருமணம் நடந்தேதீரும் என்றும் அனைவரும் எதிர்பார்க்கிறார்கள்.

என்ன நடக்கும் என்பதை பொறுத்து இருந்து பார்ப்போம்

## இந்தியில் பேசுகிறார் ஜெயப்பிரதா

இந்தி பேசத் தெரியாதிருந்த ஜெயப்பிரதா; இப்பொழுது பிரமாதப் பேசுகிறார்.

இந்திப் படங்களில் இவருக்காக வேறொருவரின் குரலே "டப்'' செய்யப்பட்டு வந்தது. இப்பொழுது அவரே படங்களில் பேசி நடிக்கிறார்.

## திரை உலகில்

"மீண்டும் நீ'' படத்தின் மூலம் கதாநாயகியாக அறிமுகமாகிறார் தேவி. இப்படத்தின் கதாநாயகன் மனோரமாவின் மகன் பூபதி.

✶ ✶ ✶

நீண்ட இடைவெளிக்குப் பிறகு 'சின்ன மயில்' படத்தில் சுரேஷும் ராதாவும் இணைந்து நடிக்கிறார்கள்.

✶ ✶ ✶

இந்திப்படம் ஒன்றில் பழம்பெரும் நடிகர் திலீப்குமாருடன் இளம் நடிகை ஜெயப்பிரதா ஜோடி சேர்ந்து நடிக்கிறார்.

● தயாரிப்பு: பேரின்பம் ●




## திருப்தி தரும் நல்ல பாத்திரங்கள் கிடைத்தால் மட்டுமே நடிக்கிறேன்

### ஸ்ரீப்பிரியா கூறுகிறார்

நடிகை ஸ்ரீப்பிரியா இப்பொழுது நடிப்பதை குறைத்துக் கொண்டுள்ளாரா? அல்லது "மார்க்கட்'' சரிந்து விட்டதா?

இதற்கு அவரே பதில் கூறுகிறார்:-

எனது "மார்க்கட்'' அப்படி ஒன்றும் குறையவில்லை. நானே படங்களில் நடிப்பதைக் குறைத்துக் கொண்டுள்ளேன்.

எனக்கு மிகவும் பிடித்தமான — திருப்தி தரும் நல்ல பாத்திரங்கள் கிடைத்தால் மட்டும் ஏற்றுக் கொள்கிறேன்.

கதாநாயகியாகத்தான் நடிப்பேன் — டூயட் பாடல் இருக்க வேண்டும் என்றெல்லாம் நான் எதிர்பார்க்கவில்லை. ஆனால் என் பாத்திரப் படைப்பு நன்றாக இருக்க வேண்டும்.

இப்போது வெளியான "நட்பு'' படத்தில் கூட எனக்கு கதாநாயகி வேடம் அல்ல. ஆனால் படம் பார்த்து விட்டு வெளியே வருபவர்கள் என் பாத்திரத்தைப் பற்றி நிச்சயம் பேசுவார்கள்.

நான் படங்களில் நடிப்பதைக் குறைத்ததற்கு இன்னொரு முக்கிய காரணமும் உண்டு.

அது ஊதியம் சம்பந்தப்பட்டது. படம் துவங்குவதற்கு முன்பு நான் சொல்லும் ஊதியத்தை தருவதாக ஒப்புக்கொள்ளும் தயாரிப்பாளர்கள் பலர் படம் முடிந்த பிறகு, பாதிக்கும் குறைவாகத் தான் கொடுக்கிறார்கள். [illegible] தில்லை'' என்றார்

## விஜயகாந்தின் தனித்துவம்

தான் நடிக்கும் படங்களில் மக்களுக்கு பயன்படும்படியான ஏதாவது ஒரு கருத்து சொல்லப் பட்டிருக்க வேண்டும் என்பதில் விஜயகாந்த் கவனமாக இருக்கிறார்.

இதை முடிந்தவரை அவர் நடிக்கும் படங்களை இயக்கும் இயக்குனர்களிடம் நாசுக்காகவும் கூறி வருகிறார்.

அண்மையில் வெளியான இவரது படங்களில் நல்ல பல கருத்துகள் சொல்லப்பட்டு இருப்பதாக சினிமா விநியோகஸ்தர்கள் கூறுகிறார்கள்.

## சுஹாசினி எதற்காக நடிக்கிறார் தெரியுமா?

எல்லா நடிக, நடிகையருமே பணத்திற்காகவே நடிக்கிறார்கள். ஆனால் நடிகை சுஹாசினி பணத்திற்காக நடிப்பதில்லையாம்

சுஹாசினி சொல்கிறார்;-

"தமிழ் ரசிகர்கள் எப்பொழுதும் வேற்று மொழிக்காரர்களுக்கு ஆதரவு தருகிறார்கள். நம்மவர்களின் திறமையை மதிப்பதில்லை.

அதனால் என்னைப் போன்ற திறமை வாய்ந்த நடிகைகளான ஸ்ரீதேவி, ஸ்ரீப்பிரியா, ஸ்ரீவித்யா, ராதிகா போன்றோர் வேற்று மொழிப்படங்களில்தான் நன்கு சோபிக்கிறார்கள்.

எனவே நான் கூட ஆரம்பத்தில் எனக்கு பரிசு கிடைத்தால் மற்ற மொழிப் படங்கள் மூலம் தான் கிடைக்கும் என்று எதிர்பார்த்தேன். ஆனால் நடந்ததோ வேறு. இப்பொழுது நான்



பணத்திற்காக நடிப்பதில்லை. நல்ல கேரக்டர்கள் என்னைத் தேடி வரும் பொழுது அவற்றை நானே தேர்ந்தெடுத்து நடிக்கிறேன்''என்றார்.

## தெலுங்கில் பேசி நடிக்கிறார் சசிகலா

"தெலுங்கில் பேசி நடிப்பது ஆரம்பத்தில் கொஞ்சம் கஷ்டமாக இருந்தது. இப்பொழுது தெலுங்கு பேசக் கற்றுக் கொண்டுவிட்டதால் சுலபமாக பேசி நடிக்கிறேன்'' என்று சொல்கிறார் சசிகலா.

தமிழில் படவாய்ப்புக் குறைந்து கொண்டிருந்த சமயம் டைரக்டர் தாசரி நாராயணராவ் "பிரம்ம முடி'' என்ற தெலுங்குப் படத்தில் நடிக்கும் வாய்ப்பை உருவாக்கிக் கொடுத்தார்.

அதைத் தொடர்ந்து "நாகதேவதா'' "ரெண்டு ரெள்ளு ஆறு'' படங்களிலும்நடித்தேன். மூன்று படங்களும் வெற்றி பெற்றன என்றும்சொல்கிறார் சசிகலா.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# அயோத்தி ஆதி நிலைக்கு விரைவில் மீள வேண்டும்

## இந்துக்களின் பெரும் ஆவல் இது

(சென்றவாரத் தொடர்)

அழிக்கப்பட்ட ஆலயம் சாதாரண ஒரு கோவிலாக இருக்கவில்லை. கலைவண்ண வேலைப்பாடுகள் விளங்க 84 சற்றூண்களில் உறுதியாக எழுப்பப்பட்ட பிரமாண்டமான பெருங் கோவில். உஜ்ஜயனிலிருந்து ஆட்சிசெய்த மன்னன் விக்கிரமாதித்தனே முன்நின்று இந்த ஆலயத்தை எழுப்பினான் என்று பேசப்படுகிறது.

மரியாட புருஷோத்தம் என்று அன்றுகொண்டாடப்பட்ட இந்தப் புண்ணிய பூமிக்கு புகழ் மிகுந்த பல புனிதர்கள் யாத்திரை போயிருக்கிறார்கள்.

ஞானி தீர்த்தங்காரும் சீலயாத்திரிகன் ஹூவான் சுவாங்கும் சீக்கியமத தத்துவர் ஞானகுரு நானக், கோவிந்த சிங் போன்றோரும் அவர்களில் குறிப்பிடக்கூடியவர்களாக விளங்குகிறார்கள்.

இவற்றையெல்லாம் விஸ்வஹிந்து பர்ஷத் ஆராய்ந்து தனது அறிக்கை வெளியீடுகளில் விளக்கியுள்ளது. பாபறி மஸ்ஜித் தொடர்பான இந்துக்களின் கோபக் கொதிப்பு தொடர்ந்து பல ஆண்டுகளாகவே நீறுபூத்த நெருப்பாக இருந்துவந்திருக்கிறது.

### நீதிமன்றில் வழக்கு தாக்கல்

பாபறி மஸ்ஜித்தை அடுத்த ஜனம்ஸதான் பகுதியில் இராம பக்தர்கள் பலகாலங்களாக தெருவோர மேடையில் நின்றுகொண்டே தமது நேர்த்திக் கடன்களை நிறைவேற்றி வந்தனர்.

இந்த நிலையில் 1885 ஆம்ஆண்டு பெய்ஸபாட் நீதிமன்றத்தில் ஜனம்ஸ்தான் பரிபாலகர் ஒருவரால் வழக்கொன்று தொடரப்பட்டது.

அடியார்கள் வழிபாடு இயற்றிவந்த அந்தஇடத்தில் ஆலயம் ஒன்றை அமைப்பதற்கு அனுமதி வழங்குமாறு அந்த வழக்கு விண்ணப்பத்தில் அவர் கோரியிருந்தார்.

சாபுத்ரா என்ற அந்த வழிபடு இடத்தில் ஆலயம் ஒன்று அமைக்கப் பட்டால் அங்கு எழக் கூடிய மணி ஓசையும் சங்குகளின் சப்த நாதமும் பள்ளிவாசலுக்குச் செல்லும் முஸ்லிம் பக்தர்களுக்கு ஆத்திரத்தை மூட்டலாம்; அதனால் அனர்த்தங்களும் அர்த்த மற்ற விபரீதங்களும் விளையலாம் என்று காரணம்காட்டி அந்த விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டது.

எனினும் சாபுத்ராவுக்கும் பள்ளிவாசலுக்கும் இடையே குறுக்குமதில் ஒன்று இருப்பது நீதிமன்றப் பதிவேட்டில் பதியப்பட்டது எதிர் பார்த்த தீர்ப்புக் கிடைக்காததால் இந்துக்கள் மேலும் ஆத்திரமும் ஆவேசமும் கொண்டனர்.

### மூண்டது கலகம்

ஆத்திரத்தால் வெகுண்டெழுந்த இந்துத் தீவிரவாதிகள் 1937ஆம் ஆண்டு பாபறி

**37 ஆண்டுகள் அடைபட்டுக் கிடந்த அயோத்தியின் கபாடம் திறந்த கதை**

மஸ்ஜித்துக்கு சேதம் விளைத்தனர் பல இடங்களிலும் கலகங்கள் மூண்டன.

இதன்பிறகு 1949ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 22ஆம் திகதி தீவிரவாத இந்துக்கள் 50க்கும் மேற்பட்ட தொகையினர் பாபறி மஸ்ஜித்தின் மதிலால் ஏறிப் பாய்ந்து இந்துக் கடவுளர்களின் விக்கிரகங்களை உள்ளே பல இடங்களிலும் நிறுவினார்கள்.

இந்த நடவடிக்கையால் மசூதியின் புனிதம் கெட்டுவிட்டதாகக் கூறிய முஸ்லிம்கள் தமது

**முத்து - சிவன்**

அந்த பள்ளிவாசல் தொழுகையை அன்றுடன் நிறுத்திக்கொண்டனர்.

அதே தினம் பெய்ஸபாட் மாவட்ட நிர்வாக அதிகாரிகள் மசூதி, சாபுத்ரா பகுதியின் வெளிமதில் கதவைத் தாளிட்டு அதைப் பார்வையிடும் பொறுப்பை தனியாள் ஒருவரிடம் ஒப்படைத்தனர்

இவ்வாறு தாளிடப்பட்டதும் தனியாள் ஒருவரிடம் பொறுப்பு ஒப்படைக்கப் பட்டதும் சட்டமுறைப்படி செல்லுபடியற்றது எனத் தெரிவித்தே பெய்ஸபாட் நீதிமன்றம் தாளிட்ட கதவைத் திறந்துவிடுமாறு உத்தரவிட்டது.

நியாயங்கள் எப்படி இருப்பினும் பாபறி மஜ்ஜித் உள்ள அயோத்தியின் கதை இன்னும் தொடரலாம் என்றே பலரும் பயப்படுகின்றனர்.

### கருத்துகளும் மறுப்புகளும்

சமாதானத் தீர்வை விரும்பும் மூத்த முஸ்லிம் தலைவர்கள் இருந்தாலும் தீவிரவாத இளம் முஸ்லிம் தலைவர்கள் நிலைமையை மேலும் மோசமாக்கி விடலாம் எனவும் அச்சம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முஸ்லிம் தலைவர்கள் கி பி 1528 ஆம் ஆண்டு பாபறி மஜ்ஜித் மிர்பாகிகானால் கட்டப்பட்டதை ஒப்புக்கொள்கிறார்கள்.

அயோத்தியின் கோயில் இடித்துத்தான் மஸ்ஜித் கட்டப்பட்டது என்பது ஆதாரமற்ற கூற்று என்றும் தரிசாகக் கிடந்த நிலத்திலேயே மஸ்ஜித் கட்டப் பட்டதாகவும் அவர்கள் வலிந்து வாதிடுகின்றனர்.

பழம்பெருமைமிக்க இந்த ஆலயத்தை பாபரின் படைகளே இடித்துக் கொள்ளையடித்தன; இந்துக்கள் பலரையும் கொன்று குவித்தன. இதற்குச் சரித்திரம் சான்றுபகர்கிறது என்று விஸ்வஹிந்து பரிஷத் ஆதாரம் காட்டி அடித்துக் கூறுகிறது. அழகிய திருக்கோயில் ஒன்று அங்கு மீண்டும் எழுப்பப் படும். இது நிச்சயம் என்றும் அந்த அமைப்பு பகர்ந்துள்ளது. அவலங்களுக்கு இடமளிக்காத நல்ல சூழ்நிலையில் அயோத்தியின் இராமர் ஆலயம் எழவேண்டும் என்றே நல்லவர் மனங்கள் நாடுகின்றன.

[தகவல்:'இலஸ்ரேட்டட் வீக்லி ஒப் இந்தியா']

### மலையுடன் மோதிய அணில்!

மலையும் அணிலும் மோதின ஒருநாள்
மலையோ அணிலை நோக்கிநீ சிறுபயல்
நானோ வானுற வளர்ந்த வளவன்
என்றலும் அணிலோ ஏளன மாக
அண்ணா உண்மை உன்பேர் உடலால்
உறுமும் முகிலை உன்தோள் மீதும்
வளமிகும் வனத்தை வலிய நெஞ்சிலும்
நீசுமந் திடினும் உன்னால் எம்போல்
சிறுவிதை தன்னைக் கொறிக்க ஏலுமோ?
சிறிது தூரமும் நடக்க ஏலுமோ?
சிறியேம் எமக்கும் சிலசில செய்கை
செய்ய இயலும் உன்தன் நிலைபோல்
வானை வனத்தைத் தாங்குவாய் எனினும்
வானவன் படைத்த வளம்பெறு வாழ்வில்
அணில் செய்வதையோர் அசலம் செய்யுமோ?
எல்லோர்க்கு மொவ்வொன் றெளிதென
ஔவை
சொன்னதை உணர்வேன் சோடை போகேன்
என்றதும் மலையோ நிலை குலைந்தது.

"ஹெலன் பேர்ண்ஸ்"

(R. W. Emerson எழுதிய The Mountain and the Squirrel என்ற ஆங்கிலக் கவிதையைத் தழுவியது)

# ஆலயத்தில் சைவப் பேருரைகள் நிகழ்த்திய செய்குத்தம்பி பாவலர்

தமிழ்மக்களும் முஸ்லிம் மக்களும் இன்று பல மாவட்டங்களில் இணைந்து வாழ்கிறோம். மட்டக்களப்பு மாவட்டத்தைப் பொறுத்த மட்டில் பிட்டும் தேங்காய்ப் பூவும் போல தமிழ் முஸ்லிம்கள் சேர்ந்து வாழ்கிறார்கள். இன விடுதலைக்காக தமிழ்மக்களும் முஸ்லிம் மக்களும் இணைந்து வாழவேண்டும் இணைந்து போக வேண்டும் என்பதற்குப் பல உதாரணங்களை எடுத்துக் காட்டலாம்.

தமிழ் தென்றல் வி. கலியாணசுந்தரம் முதலியாரும் செய்குத்தம்பிப் பாவலரும் இணைபிரியாது தமிழையும் சைவத்தையும் வளர்த்த பாங்கை இக்கட்டுரையில் பார்ப்போம்.

சைவம் பேசிய தமிழ்ப் பெரும் புலவராகவும் சதாவதானியாகவும் வாழ்ந்தவர் முஸ்லிம் குடியில் பிறந்த செய்குத்தம்பிப் பாவலர். மதுரைத் தமிழ்ச்சங்கப் புலவராக விளங்கியவர். இஸ்லாமிய ஆசாரங்களில் சிறிதும் வழுவாது வாழ்ந்தவர். கதருடை அணிந்தவர். காந்தீயத்தில் தணியாத தாகம் கொண்டவர்.

காஞ்சிபுரம் ஆலயத்தில் பூரண கும்ப மரியாதைகளுடன் வரவேற்புக் கொடுக்கும் அளவுக்

## அவர் கோவிலுக்குள் வந்ததை விரும்பாதவர்கள் பின்னர் வருந்தினர்

குச் சைவத்தின் பெருமையை விரித்துரைத்தவர் தமிழ் அறிஞர்கள் பால் இவருக்கு நெருங்கிய தொடர்பிருந்தது.

ஒரு முறை திருநெல்வேலிக்குக்காரில் சென்று கொண்டிருந்தார் பாவலர். வழியில் திரு. வி. க. தலைமையில் ஆலயமொன்றில் கூட்டம் நடைபெற்றது. இதை அறிந்த பாவலர் தனது மாணாக்கர் வி. க. வின் பேச்சைக் கேட்பதற்காக மண்டபத்தை நோக்கிச் சென்றார். பாவலர் அடக்கத்துடனும் அமைதியுடனும் கடைசி வரிசையில் இருந்த வாங்கொன்றில் இருந்தார்.

அப்போது வி க அவர்களின் சொற்பொழிவு நடந்து கொண்டிருந்தது. பாவலரின் உடையைக் கண்ட கூட்டத்தினர் பரபரப் படைந்தனர். ஆலயத்தில் முஸ்லிம் ஒருவர் வந்துவிட்டாரே என்ற ஆதங்கம். இதனை அவதானித்த வி. க தமது பேச்சை நிறுத்தி வந்தவரைக் கூர்ந்து அவதானித்தார். அவருக்கு அங்கு வந்தவர் தமது குருவெனத் தெரிந்துவிட்டது.

'ஐயா அவர்கள் அங்கே இருக்கக்கூடாது.

**- புத்தொளி -**

தயவு செய்து மேடைக்கு வரவேண்டும்' என்று பாவலரை வணங்கி அழைத்தார் கூட்டத்தினருக்கு ஒன்றுமே புரியவில்லை.

'பாவலர் ஐயா' 'பாவலர் ஐயா' எனப் பலர் குரலெழுப்பினர். பேராசிரியர் சீனிவாசராகவன், சக்ரபாணி நம்பியார் மற்றும் அறிஞர்கள் பாவலரை மேடைக்கு வருமாறு அழைத்தனர்.

பாவலர் 'சும்மா பார்த்துவிட்டுப் போகலாமென்று வந்தேன். மன்னித்துக் கொள்ளுங்கள். நான் இங்கேயே இருக்கிறேன்' என்று கூறினார் ஆனால் திரு. வி. க. வோ ஐயா அவர்கள் இங்கு இருக்கும்போது இக்கூட்டத்திற்கு நான் தலைமை வகிப்பது மரியாதைக் குறைவு. தாங்கள் மேடைக்கு வர வேண்டும் என்று மீண்டும் அன்புடன் அழைத்தார்.

பலரது வற்புறுத்தலில் பாவலர் மேடைக்கு வந்தார். திரு வி. க சொற்பொழிவைத் தொடர்ந்தார். ஆனால் சிவபக்தர்கள் சிலர் ஆலயத்துள் முஸ்லிமா எனச் சலசலத்தனர்.

இதனைச் செவிமடுத்த

(6 ஆம் பக்கம் பார்க்க)

# காலத்தால் அழியாத வரலாற்றுக் கடிதங்கள்

## ரோமக் குடியரசு சாம்ராஜ்யமாக மாறுகிறது

ஏப்ரல் 9, 1932

கார்தேஜ் முடிவாகத் தோல்வியுற்று அழிந்த பிறகு மேற்கு உலகத்தில் ரோமாபுரிஒப் புயர்வற்று விளங்கியது. இதற்கு முன்பே அது கிரேக்க நாடுகளை ஜெயித்து விட்டது. இப்போது கார்தேஜுக்குச் சொந்தமான நாடுகளும் அதன் வசமாயின.

இரண்டாவது 'பியூனிக்' யுத்தம் முடிந்தவுடனே ஸ்பெயின் தேசம் ரோமராஜ்யத்தில் சேர்ந்து விட்டது. ஆயினும் ரோமராஜ்யத்தில் அடங்கியிருந்தவை மத்தியதரைக்கடல் நாடுகளேயாகும். வட, மத்திய ஐரோப்பா முழுவதும் ரோமரின் ஆதிக்கத்துக்கு உட்படாமல் சுதந்திரமாகவே இருந்து வந்தன.

ரோமாபுரி அடைந்த வெற்றி காரணமாக அந் நகரில் செல்வமும் ஆடம்பரமும் மலிந்திருந்தன. வெல்லப்பட்ட நாடுகளிலிருந்த திரவியங்களெல்லாம் ரோம் நகரில் வந்து குவிந்தன. அவை மட்டுமா. அடிமைகளும் வந்து குவிந்தார்கள். ஆனால் இவைகளையெல்லாம் அனுபவித்தவர்கள் யார்?

பிரபு வமிசத்தைச் சேர்ந்தவர்கள் அடங்கிய செனட் சபை ரோம

### நேருவிடமிருந்து இந்திராவுக்கு

ராஜ்யத்தை ஆண்டு வந்தது என்று முன்பே கூறியுள்ளேன்.

ரோம ராஜ்யத்தின் விஸ்தீரணமும் வல்லமையும் பெருகப் பெருக அதை ஆண்டு வந்த இப் பணக்காரக் கூட்டத்தாரின் செல்வமும் ஓங்கி வந்தது. ஆகவே பணக்காரர்கள் மேலும் பணக்காரர்கள் ஆனார்கள். ஏழைகள் ஏழைகளாகவே இருந்தார்கள் அல்லது இன்னும் அதிக ஏழையானார்கள். அடிமைகளின் தொகை அதிகமாயிற்று இவ்வாறு ஒரு பக்கத்தில் செல்வமும் இன்னொரு பக்கத்தில் வறுமையும் ஒரே காலத்தில் வளர்ந்து வந்தன.

இத்தகைய சந்தர்ப்பங்களில் பூசல் நிகழ்வதை நாம் வழக்கமாகக் காண்கிறோம் மனிதர்கள் எவ்வளவு தூரம் கொடுமைகளைப் பொறுத்துக் கொண்டு போகிறார்கள் என்பதை நினைக்கும் போது நமக்கு ஆச்சரியம் உண்டாகிறது ஆனால் அந்தப் பொறுமைக்கும் ஒரு எல்லை உண்டு அந்த எல்லை கடந்து விட்டால் பிரளயம் தான்.

பணக்காரர்கள் பலவித விளையாட்டுக்களையும் சர்க்கஸ் பந்தயங்களையும் ஏற்படுத்தி ஏழைகளை

(6 ஆம் பக்கம் பார்க்க)

## வேர்கள் தரும் மருத்துவப் பயன்

நெருஞ்சியின் வேரைக் காய வைத்துப் பொடி செய்து கல்கண்டு சேர்த்துச் சாப்பிட்டால் சளி, சொறி, சிரங்குகள் போகும் மூத்திரக் காயில் கல் அடைப்பும் நீங்கும்.

அமுக்காரக்கிழங்கின் சிறு துண்டை பசுப்பால் விட்டு அரைத்துக் காய வைத்துப் பொடி செய்து தேன் சேர்த்து சாப்பிடுவோர்க்கு இருதய பலமும் நரம்புப் பலமும் பெருகும்

தென்னை வேரைக் குடிநீர் செய்து அருந்தலாம் இது பெரும்பாடு உதிரப்போக்கை நிறுத்தும் பல்வலிக்கும் கொப்பளிக்கலாம்.

நன்னாரிவேர் இரும்புச் சத்து உடையது இரத்த சுத்தி செய்யக்கூடியது. மேகநீர், பித்தம், வியர்வைநாற்றம் முதலியவற்றைப் போக்கக் கூடியது சுக்கு, மல்லி முதலியவற்றுடன் நன்னாரி வேரையும் இடித்துப் பொடி செய்து வைத்துக்கொண்டு காப்பி தயார் செய்து அருந்தலாம்.

தொகுப்பு - க. கனகராசா

# பண்டிதமணி: வரலாறும் காலமும்

**★ க. சி. குலரத்தினம் ★**

கோப்பாய் ஆசிரியர் 'பயிற்சிக்கலாசலை ஆரம்பிக்கப் பெற்ற காலத்தில் யாழ்ப்பாணத்துச் சைவப்பெருமக்கள் சிவர் சேர் இராமநாதன் அவர்களை அணுகி, அன்னார் முன்னொரு சமயம் சைவத் தமிழர் கல்வி வளர்ச்சியைக் கருதும் அபிவிருத்திச் சங்கம் ஒன்று கட்டாயமாக அமைதல் வேண்டும் எனக் கூறிய கருத்தினை நினைவுபடுத்தி, அத்தகையதொரு சங்கத்தை ஆரம்பிப்பதற்கு ஆவன செய்தார்கள்.

அவர்களின் முயற்சியால் சேர். இராமநாதன் தலைமையில் 9-12-1923 ஆம் நாளில் உதயமான நிறுவனமே சைவ வித்தியா விருத்திச் சங்கம். இச்சங்கத்தில் ஈடுபட்டிருந்த பெரியவர்கள் பலருள் வைத்திலிங்கம் விஜரத்தினம், சுப்பிரமணியம் இராசரத்தினம், வட்டுக் கோட்டை மு சி இராசரத்தினம் முதலானோர் சிறப்பிடம் வகித்தனர்.

பெரியவர்கள் பலரின் கூட்டுமுயற்சியால் ஆரம்பிக்கப்பெற்ற சைவவித்தியா விருத்திச்சங்கம், வட்டுக்கோட்டை மு சி. இராசரத்தினம் அவர்களின் துணிவும் உபகரிப்பும் உடலுழைப்பும் காரணமாக நன்றாகச் செயற்பட்டு, ஊர்கள் தோறும் சைவப்பாடசாலைகள் உண்டாவதற்கு வசதியும் வாய்ப்பும் செய்துவந்தது.

அக்காலத்தில் சுப்பிரமணியம் இராசரத்தினம் அவர்கள் 1924ஆம் ஆண்டு முதல் இலங்கைச் சட்ட சபையின் பிரதிநிதியாகத் தெரியப் பெற்று, அரசாங்கமறிய அதிகாரம் பெற்றிருந்த வகையில் அலுவல்களை விரைவில் நடைமுறைக்குக் கொண்டுவரக்கூடியவராயிருந்தார் அன்றிச் சட்டத்துறையில் மெத்தப் புகுந்தவராயிருந்தமையால் நீதிநியாயமின்றிப் பிறப்பிக்கப்பட்டிருந்த தடையுத்தரவுகளை எல்லாம் புறங்கண்டு தவிடு பொடியாக்கி நீதி வழுவாநெறி முறைநிலைக்கச்செய்துவந்தார்.

இந்நிலையில் ஊர்கள் தோறும் சைவப்பாடசாலைகள் பெருகி வந்த அமைப்பில், ஆங்காங்கே கற்பிப்பதற்குப் போதியளவு சைவாசிரியர்கள் கிடையாமல் இருந்ததைக்கண்டு, இலங்கை முழுவதற்கும் கல்விப் பணிப்பாளராயிருந்த வென்னைக்காரனை வெகு வாக வேண்டி நின்றார்.

"ஐயா முன்னர் கோப்பாயில் நீங்கள் ஆரம்பித்த ஐக்கிய போதனசாலை பரீட்சார்த்தமாக நடைபெற்றதேயன்றி பரிகாரமாக நடைபெறவில்லை. அதுநிலைகொள்ளாமற் போனபின், தாங்கள் பரிகாரமாக இன்று

## பயிற்சியை எப்போது முடிப்பார் எனப் பார்த்து கார் கொண்டு திரிந்த இரு சாரார்

நடத்திவருகின்ற பயிற்சிக் கலாசாலையின் செயற்றிறனையும் பங்களிப்பையும் பாராட்டுகின்றேன். தாங்கள் 1926ஆம் ஆண்டில் பயிற்சியளித்து வெளியே தந்த ஆசிரியர்களில், எங்கள் பாடசாலைகளுக்குக் கிடைத்தவர் தொகை பற்றாக் குறையாக உள்ளது. தாங்கள் பெரு முயற்சி எடுத்துப் பலரைப் பயிற்றிவிட்டதற்குத் தங்களைப் பாராட்டுகிறேன். தங்கள் பணியைப் பாராட்டும் வேளையில் இன்னும் தங்களை வேண்டிநின்று விண்ணப்பஞ்செய்வது, எங்களுக்கு இந்த ஆண்டுக்கு மேலதிக ஆசிரியர்களைப் பயிற்சி அளித்துத்தருதல் வேண்டுமென்பதே யாகும்.

இவ்வாறு வேண்டுகோள் விடுத்த இராசரத்தினம் அவர்கள் அந்நாளில் சட்டசபை அங்கத்தவராய்க் கௌரவத்துக்குரிய புருடராய், சைவவித்தியா விருத்திச் சங்கத்தின் செயலாளராயும், சங்கப்பாடசாலைகளின் முகாமையாளராயும் இருந்தார். இத்தகைய அதிகாரபுருடர் கல்விப் பணிப்பாளருக்கு விண்ணப்பஞ் செய்ததோடு விட்டுவிடாமல் அவரை நேரிற் கண்டு உரையாடியும் தம் வேண்டுகோளை வற்புறுத்தி வந்தார்.

இவற்றையெல்லாம் [illegible] கொண்ட வித்தியா [illegible] நிலைமையிலும். இட வசதியிலும் மேலதிக ஆசிரியர்களைப் பயிற்றுவது இயலாத கருமம் எனப் பதில் எழுதினார்.

கல்விப்பணிப்பாளரின் பதிலைப் படித்த இராசரத்தினம் அவர்களின் கவலை பெரிதாயிற்று. தாங்களே தங்களுக்கு வேண்டிய சைவாசிரியர்களைப் பயிற்றுவதற்கு ஒரு சைவாசிரிய கலாசாலையை உண்டாக்கி நடத்துவது நல்லது என்று சிந்தித்தார்.

பண்டிதமணி அவர்கள் கோப்பாய் ஆசிரிய கலாசாலைப் பயிற்சியை நிறைவு செய்துகொண்டு எப்போது வெளியே வருவார் என்று நாள்களைக் கணக்கிட்டுக் கொண்டிருந்தவர்கள் பலர்.

[illegible] அவர்களே நகைச்சுவை [illegible].

அந்தக் காலத்தில் ஒருவர் எப்போது பயிற்சி முடித்து வருவார் என்று எதிர்பார்க்கும் இரு பகுதியார் கார் கொண்டு திரிவார்களாம். ஒரு பகுதியார் பாடசாலை முகாமையாளர். மற்றப் பகுதியார் பெண் கொடுக்க முற்படும் மாமன்மார்.

இத்தகையில் பண்டிதமணி அவர்களின் வருகையை எதிர்பார்த்தவர்களுள் அவரின் தந்தையார் சின்னத்தம்பி அவர்களின் ஆவல் பெரிது. அவர் தாம் அருமையாக வளர்த்து வந்த தம் மனைவியாரின் சகோதரன் புதல்வியை இவருக்கு மணஞ்செய்து வைத்து, இருபகுதியாலும் மட்டுவில், தனங்கிளப்பு ஆகிய இடங்களின் மருதநிலவளத்தைப்பரிபாலிக்கச் செய்வது என திட்டமிட்டிருந்தார்.

திருமணத்தைப் பற்றிய சிந்தனையே இல்லாத மைந்தர் தந்தையாரின் விருப்பத்துக்கு மாறாக மரியாதையோடு மறுப்புத் தெரிவித்தபோது, கோபங்கொண்ட தந்தை மைந்தனை நோக்கி, 'நீ கனக்கப் படித்துக் கனக்கப் பேசப் பழகி விட்டாய் அப்படியானால் உன்தாய் வழியாக வந்த நிலத்தை இந்தப் பெண்ணுக்கு எழுதிக்கொடு, நான் இவளை வேறெங்காவது மணஞ்செய்து வைக்கப் போகிறேன்' என்றார்.

தாராளமாக எழுதிக் கொடுக்கலாம் என்று எழுதிக் கொடுத்த மைந்தர், பிற்காலத்தில் அந்தப் பெண்ணைப் பற்றி நாங்கள் கேட்டபோது, 'நல்ல குணமான பெண், நன்றாகச் சமையல் வேலையும் பழகிய கெட்டிக்காரி' என்றார்.

பண்டிதமணி அவர்கள் மீது பெருமதிப்பு வைத்திருந்த மனேச்சர் கைலாசபிள்ளை அவர்கள், நாவலர் பாடசாலையையும். அன்னாரின் தர்மச் சொத்தையும் இவரிடம் ஒப்படைப்பதோடு, தமது புதல்வியருள் ஒருத்தியையும் தத்தம் செய்து கொடுப்பதற்கு விருப்பங் கொண்டதும் உண்டு ஆனால் பண்டிதமணி அவர்கள் பெரியவர் ஒருவரிடம் தமக்கு அவை யாவும் பெரிய தலைச்சுமையாய் விடும் என்று சூசகமாகக் கூறி மறுத்திருந்தார். அந்தப் பெரியவர் இந்த மறுப்புச் செய்தியை மனேச்சர் அவர்களிடம் இதமாகத் தெரிவித்ததும், மனேச்சர் அவர்கள் பண்டிதமணி அவர்களை நாவலர் பாடசாலையின் தலைமை ஆசிரியராக்குவதை வற்புறுத்தியே வந்தார்.

இவருக்கு என மனேச்சர் கருதிய பெண்ணைப் பற்றிக் கேட்டபோது, பண்டிதமணி அவர்கள் நகைச்சுவையோடு ஒரு சம்பவத்தைக் கூறினார். தாம் ஒரு சமயம் கண்டியில் பிரசங்கஞ் செய்த பின், அன்றிரவு பெரியவர் ஒருவரின் இல்லத்தில் உணவு கொள்வதற்கு ஒழுங்கு செய்யப் பெற்றதாம் தமக்கு உணவு பரிமாறிய இல்லத்தாசி, தம்மைநோக்கி 'என்னைத் தெரிகிறதா?' என்று கேட்டாராம். தாம் 'தெரியவில்லை' என்றதும் அவர், 'நான் தான்......' என்றாராம். தம் நாணிக்கோணித் தலையைத் தொங்கவிட்டதாகக் கூறினார்.

பண்டிதமணி அவர்களின்பயிற்சிக்காலம்நிறைவேறுவதற்கு முன்பே இடையிடையே பயிற்சிக் கல்லூரிக்குக் காரில் சென்று சுகம் விசாரித்து வந்தவர் சைவ வித்தியா விருத்திச்சங்கச் செயலாளரும் பொதுமுகாமையாளருமான கௌரவ சு. இராசரத்தினம் அவர்களாவர். இராசா அவர்கள் என்று செல்லமாக வழங்கி வந்த அந்தப் பெரியவரைப் பண்டிதமணி அவர்கள் சைவத்தின் மூன்றும் கண் என வெகுவாக மதித்திருந்தார்.

(வளரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிச்சிலியின் விளைச்சலை மூலகக் குறைவு பாதிக்கும்

சாதாரணமாக ஓர் கிச்சிலிப்பயிர் சில மூலகங்களைத்தான் கூடுதலாக தரையில் இருந்து பெறுகின்றது; நைதரசன், பொஸ்பரஸ், பொட்டாசியம், கல்சியம், மக்னிசியம் ஆகிய ஐந்து மூலகங்களும் இவற்றில் முக்கியமானவையாக கருதப்படுகின்றன.

மற்றய சுவட்டு மூலகங்கள் ஓர் சிறிய அளவே பயிர் உற்பத்திக்கு தேவைப்படுகின்றன. அவையாவன இரும்பு, கெந்தகம், நாகம், மன்கனீஸ், செம்பு, போறுன், மொலிக்டினம் போன்றவையாகும்.

கிச்சிலிப் பயிரைப் பொறுத்தமட்டில் மூலகங்களின் குறைபாட்டினால் ஏற்படும் அறிகுறிகள் உடனடியாக தென்படக்கூடியன. இவை தனித்தனி மூலகங்களில் குறைபாட்டினை வெளியில் தென்படுத்துவது மிகவும் குறைவு. அதிகமாக பல மூலகங்களில் குறைபாடுகள் ஒன்று சேர்ந்தவையாகவே தென்படுகின்றன. இவை யாவும் அதிகமாக கூடுதலாக கழுவுப் பட்டுச் செல்லக்கூடிய மென் மண்ணிலும் (Light Soil) அமிலத்தன்மையுள்ள தரையிலுமே தென்படுகின்றன.

1. நைதரசன்

கிச்சிலிப் பயிருக்கு நைதரசன் கூடுதலாகத் தேவைப்படுகின்றது. மற்றய மூலகங்களை விட, இம் மூலகம் இல்லையேல் அல்லது பற்றாக்குறை ஏற்படின் பயிரின் புதிய வளர்ச்சி தடைப்படுகின்றது., இலைகள் மஞ்சலாகவும் பச்சையம் குறைந்த நிறமாகவும் ஒரே சீராக தென்படும். இதைத் தொடர்ந்து சிறிய கொப்புக்கள் பின்நோக்கிப் பட்டுக் கொண்டு (Die back) வருவதை அவதானிக்கக் கூடியதாக இருக்கும்.

2. பொஸ்பரஸ்

கிச்சிலிப் பயிருக்கு பொஸ்பரஸ் குறைபாடு காணப்படின் இலைகள் மென்மையாகவும், ஒரு பகுதி பூர்தலும் (Sparce bloom) இலைகள் முதிர்ச்சியடையாது கொட்டுதல் (Premature-defoiation) சாதாரண புறெருஞ்சின் (Bronzing) முதிர்ந்த கனிகள் மென்

(V) வடிவத்தில் மஞ்சல் அடைந்து காணப்படும் இவ் அறிகுறிகள் கூடுதலாக முதிர்ந்த இலைகளில் தான் தென்படும். ஏன் எனில் முதிர்ந்த இலைகளில் இருந்து தான் மூலகங்கள் இளம் தளிர்களுக்கு கடத்தப்படுகின்றபடியால் இம் மூல

காணப்படும்.

நாகம்

நைதரச மூலகத்தின் குறைபாட்டுக்கு அடுத்தபடியாகக்கூடுதலாக அறிகுறி தென்படுவது. இம் மூலகக் குறைபாட்டினால் தான். இலை நரம்புகளுக்கிடையில் புள்ளிகளும் (Chlorotic leaf sloots)

## அறிகுறிகள் உடன் தென்படும்

மையாகவும் ஸ்பொஞ் போல(Softaud Spongy) காணப்படும். சில வேளைகளில் கனிகளின் உருவம் மாறுபட்டுக்காணப்படும் அத்துடன் கனியின் உட்புறத்தில் கோறையாக தென்படும். (hallow-Centre)

3. பொட்டாசியம்

இம் மூலகத்திற் குறைபாடு இருப்பின் இலைகள் வளைந்தும் சுருண்டும்

கத்தின் குறைபாடு அமிலத்தன்மையுடைய தரைகளில் கூடுதலாக தென்படும்.

இரும்பு

இவ் மூலகக் குறைபாட்டினால் கண்ணால் காணக்கூடிய அறிகுறி இலைகள் பச்சையும் மஞ்சலும் கலந்து (Chloros is Pettern) வடிவத்தில் காணப்படும். மஞ்சள் நிறமாக உள்ள இலைப்

இலைப் பருமன் மெலிந்தும் சிறுத்தும் காணப்படும். கொப்புக்கள் பின் நோக்கிப் பட்டும் காணப்படும். கூடிய குறைபாடு ஏற்படின் பழங்களின் வடிவம் மாறுபட்டுக் காணப்படும். இம் மூலகத்தின் குறைபாடு கூடுதலாக மணல் தரைகளில் ஏற்படும், இம் மண்ணில் நாகம் குறைவாக இருக்



காணப்படும். (Curling aud Twisting of Leaves) இலை நரம்புகள் தெளிவாகக் காணப்படும் Veine Clearing) பழங்களின் பருமன் சிறிதாக காணப்படும்.

4. கல்சியம்

கிச்சிலிப்பயிரின் இலைகளின் நடுநரம்பு, மற்றய நரம்புகள் பச்சையம் குறைந்து மென் பச்சை நிறமாக காணப்படும். (Lighter Colour) இலைகளின் பருமன் சிறுத்தும் அத்துடன் இலைக் கரையோரங்கள் மஞ்சல் நிறமடைந்தும் காணப்படும்.

5. மக்னீசியம்

கிச்சிலிப் பயிரின் இலை நடு நரம்புக்கு இருபக்கத்திலும் மஞ்சல் பச்சையம் அற்று மஞ்சல் நிறமடைந்து காணப்படும் இப் பகுதியை பார்க்கும் போது தலை கீழ் "வி"

பகுதியில் நரம்புகள் பச்சை நிறமாக காணப்படும். அத்துடன் கொப்புகள் (Branches) பின் நோக்கி படுவதைக் காணக்கூடியதாக இருக்கும் கூடிய மூலகக் குறைபாடு ஏற்படின் இலைகள் சடுதியாக உதிர்ந்து விடும்.

கந்தகம்

சிச்சிலிப்பயிரில் இவ் மூலகக் குறைபாட்டால் புதிதாக உண்டாகும் தளிர் இலைகள் மஞ்சல் நிறமடைந்து காணப்படும். அரும்புகள், மொட்டுகள் கூடுதலாகத் தோன்றும் பழங்கள் மஞ்சல் நிறமடைந்து முதிர்ச்சியடையாது காணப்படும். அத்துடன் பழங்களின் உட்பகுதி சுருங்கி அல்லது காய்ந்து

கின்றபடியால்.

மங்கனீஸ்

கிச்சிலிப் பயிரில் இம் மூலகத்தின் பிரசித்தமான அறிகுறி இலைகள் கொத்துக் கொத்தாகக் காணப்படும் (Leaf moltling) இளம் இலைகளின் நரம்புகள் பச்சை நிறமாக பின்னல் வடிவமாகவும் இலைப் பரப்பு இளம் பச்சை நிறமாகவும் காணப்படும் இவ் அறிகுறி அமில. காரத் தன்மையான தரைகளில் தென்படும்

செப்பு

இக் குறைபாட்டினால் பழங்களில் (Gum pockets) ஏற்படுவதனால் அடிக்கடி பழங்களின் உருவம் மாறுபட்டுக் காணப்படும். கொப்புக்

(7 ஆம் பக்கம் பார்க்க)

**க. ப. பத்மநாதன்**
(பயிர்ச்செய்கை உத்தியோகஸ்தர்)

# அரவிந்தர் ஆத்ம ஞானத்துக்கு உலக அரங்கில் சிறப்பான இடம்

(பகுதி II)

வாழ்க்கையின் குறிக்கோள் முன்னேற்றம் ஆகியன பற்றிய அரவிந்தரது கூற்றுகள் கவனத்திற்குரியவை. மனித இனத்தின் தொடர்ந்த முன்னேற்றத்தில் தமக்கு நம்பிக்கையுண்டு என்றும், இம்முன்னேற்றம் வாழ்க்கைச் சிந்தனையின் வெளிப்பாடாகுமென்றும் இவ்வடிப்படைச் சிந்தனை சிலபோது புறக்காரணிகள், ஆர்வங்கள் ஆகியவற்றின் பின் மறைந்தும் செயல்படுகின்றது என அரவிந்தர் குறிப்பிட்டுள்ளார்.

இச்சிந்தனை அமிழ்ந்து மறைந்துள்ள போது மனிதவினம் இருள் சூழ்ந்த காலத்தில் காணப்படுமெனவும் இது மேலோங்கித் தெளிவாகக் காணப்படும்பொழுது மனிதவினத்தின் காலம் சிறந்து காணப்படுகின்றதெனவும் இச்சிந்தனையின் பின்பு மனிதவினத்தின் சிறப்பின்தரம் காணப்படும் என்று அரவிந்தர் கூறுகிறார்.

மேலைநாடுகள் நடைமுறை விளைவுகளுள்ள விஞ்ஞானத்துறையில் கவனம் செலுத்தினர். பாரதம் போன்ற ஆசிய நாடுகள் ஆன்மீகத்துறையில் கவனம் செலுத்தினர். மனித இனத்தின் இறுதி மேம்பாடு இவ்விரண்டும்இணைந்த முன்னேற்றத்தில் அடங்கியுள்ளது என்கிறார் மகான் அரவிந்தர்.

இத்தகைய கல்வி இயக்குநர் டாக்டர் கொத்தாரிக் குழுவினரின் கருத்துக்களுக்கு முன்னோடியாகக் காணப்படுகின்றது. மனித இனத்தின் ஒருமைப்பாடு நமது முயற்சியின் இலக்காக இருக்க வேண்டும். இவ் ஒற்றுமை சிலவேளை கவர்ச்சியின் புற இணைப்பினால் தோன்றுவதாக இருத்தல் பயனற்றது. இது உள்ளங்களின் ஒற்றுமையின் அடிப்படையில் உருவாதல் வேண்டும் என்று அரவிந்தர் குறிப்பிடுகின்றார்.

இவரது கல்விச் சிந்தனை மேலும் அவரது தெய்வீக வாழ்க்கை என்கின்ற நூலில் இருந்து பெறப்படுகின்றது. அங்கு நாம் காண்கின்ற கருத்து கல்வியென்பது ஞானம், தியானம், பக்தி, செயல் முறை. எனவே இக்கல்வித் தத்துவம் இந்நூற்றுண்டில் புதிய கருத்துக்களை புறக்கணிக்காது பழைமைக்கும் புதுமைக்கும் ஒற்றுமை காண்கின்றது.

இவர் கல்விக் கருத்துக்கள் அண்ணல் காந்தியடிகளின் கருத்தைப் போன்று மக்கள் கல்வி, அரசியல் விடுதலை பெறுவதன் மூலமும் மக்கள் உளவியல் விடுதலை பெறுவதன் மூலமும் பாரத நாடு விடுதலை பெறுமெனக் கருத்துக்கொண்டிருந்தார்.

ஆன்மீக அரசியல் துறைகளில் வழிகாட்டிய

**- எஸ். கே. தர்மலிங்கம் -**

அரவிந்தர் இவற்றுக்கு ஆதாரமாக கல்வி முறைகளையும் கருத்துக்களையும் அறிந்தார்.

அவரது கல்வி ஆன்மீக சிந்தனை உடையதாக இருந்தமையால்தான் கல்வி கருத்தற்ற பொருளறிவு மட்டுமல்ல கல்வியின் இலட்சியம் தனிமனிதனுக்கும் சமுதாயத்திற்கும் நாட்டிற்கும் உயர் வளிப்பதாக அமைய வேண்டும் எனப்படுகின்றது. இங்கு சிந்தனையாளர் ரூசோவிற்கும் அரவிந்தருக்கும் இடையில் ஒற்றுமை காணப்படுகின்றது.

கல்வியின் நோக்கம் ஆக்குதல், தொகுத்தல், பகுத்தாய்தல் முக்கிய நோக்கங்களாக விளங்க வேண்டும் என்பது அரவிந்தர் தருகின்ற உயர்ந்த கருத்தாகும். கல்வியின் முதன்மை நோக்கங்களில் ஒன்று கல்விக்கும் யோகப்பயிற்சிக்கும் இடையில் ஒற்றுமை காண்பதாகும். ஆனால் இவர் யோகம் என்று கூறும்பொழுது ஒரு மனிதன் தன்நிறைவு செய்து தானே உண்மை பெற எத்தனி பது யோகம் எனக் கூறுவார். இக்கருத்தை கிரேக்க அறிஞர்களும் திருமூலர் போன்ற தமிழ் அறிஞர்களும் கூறியுள்ளார்கள்.

ஓர் ஆசிரியன் மாணவனுக்குத் துணைவனாகவும் நண்பனாகவும் வழிகாட்டியாகவும் இருக்க வேண்டும் அவன் அனுபவங்களில் இருந்து கற்பிக்க வேண்டும் பின்னரே தொலைவான அனுபவங்களுக்குச் செல்ல வேண்டும் என்ற கருத்துகள் ஹேபர்ட் பென்சர் என்பவரின் கருத்தினை நமக்கு நினைவூட்டுகின்றன. இவர் வாழ்க்கைத் தத்துவங்களை நடைமுறைப்படுத்தி செயலாற்றும் வகையில் புதுவையில் அகில உலகக் கல்லூரியும் அரவிந்த ஆச்சிரமும் விளங்குகின்றன. இவர் வலியுறுத்திய கல்வி அனைத்துலக ஆன்மீக ஒருமைப்பாட்டுக் கல்வி நெறியாகும்.

அனைத்துலக ஆன்மீக ஒருமைப்பாட்டு நெறி காணும் அரவிந்தரது கல்விக் கொள்கை அன்று செக்கோசிலவாக்கியா தந்த ஆண்டகை அமெஸ் கொமினியஸ் என்ற அனைத்துலக கொள்கை வாதியின் சிந்தனையுடன் இணைத்துச் சிந்திக்க வைக்கின்றது. உலக மக்கள் ஒரு குடும்பம்; ஓர் உலகம் என்ற தத்துவம் இதன் அடிப்படை அம்சங்களாகும். மனித இனம் முழுவதையும் ஆன்மீக ஒழுங்கில் அரவிந்தர் சிந்தித்து அதன் மூலம் ஆன்மீக ஒருமைப்பாட்டுக் கல்வியை இவ் இலக்குகளை அடையமுன் வைக்கின்றார். ஆன்மீக ஒருமைப்பாட்டுக் கொள்கை அனைத்தறிவுக் கொள்கைக்கும் விளக்கம் தருகின்றது. கால, தேச வேறுபாடுகளைக் கடந்து ஆன்மீக ரீதியில் உலகைப் பிணைக்கும் கல்வி ஆன்மீக ஒருமைப்பாட்டுக் கல்வியாகும்.

மக்கள் கல்வியைச் சிந்தித்த விவேகானந்தர் தேசிய ஒருமைப்பாட்டிற்கு கல்வியின் பணியை பெரும்பணியாகக் கருதியதுபோல் பாரதம் என்ற வேற்றுமை நிறைந்த நாட்டை ஆன்மீக என்ற அடிநாதத்தினால் தேசிய உணர்வை வளர்க்க கல்வியை உயர் சாதனமாகக் கருதி, உலகம் முழுவதையும் தமது உயர் சிந்தனையால் ஒன்றுபடுத்திக் காண்கின்றார்.

மேற்கும் கிழக்கும் அங்கீகரிக்கும் ஓர் ஆன்மீக ஒருமைப்பாட்டுக் கல்வியை அரவிந்தர் சிந்தித்ததன் மூலம் அவர் சிறந்த தத்துவ மேதையாகிவிட்டார்.

ஐக்கிய நாடுகள் கல்வி கலாசார விஞ்ஞானப் பிரிவில் கல்வியின் இறுதி இலக்குகள் வகுக்கப்படும் பொழுது அரவிந்தரின் கல்விச் சிந்தனையில் பிறந்த இறுதி இலக்காகிய 'ஓர் உலக தத்துவக் கல்வி இலக்கு' சேர்க்கப் பட்டிருக்கின்றது. ஆண்டகை அமெஸ் கொமனியஸ் வழியில் அரவிந்தர் சிந்தித்து உலகப் பொதுக் கல்விச் சிந்தனையாளர் வரிசையில் இடம் பெறுகின்றார்.

அரவிந்தரின் ஆன்மீக நெறியிலும் அதன் அடிப்படையான சிந்தனைத் தெளிவும் இதன் மொத்த வடிவமான அவர் அளித்த கல்விச் சிந்தனையைப் பற்றி டாக்டர் ராதா கிருஷ்ணன் கூறும் பொழுது 'நம் காலத்தில் மிகவும் உயர்ந்து விளங்கிய பேரறிஞர்' என அரவிந்தரைப் பாராட்டுகின்றார்.

அரவிந்தரின் அறிவார்ந்த ஆத்மஞான வெளிப்பாடான கல்விக் கொள்கை உலக அரங்கில் சிறப்பிடம் பெறுவது பெருமைக்குரியது.

(முற்றும்)

## வேலைக்குச் செல்லும்...

(4ம் பக்கத் தொடர்ச்சி)

பல பண்டங்களை விலை கொடுத்துவாங்க செலவு, எல்லாம் செய்தபின் மிஞ்சும் பணத்தில் தலைவலி மாத்திரைதான் வாங்க முடியும் — என்று கூறினால் அதில் உண்மை இருந்தாலும் ஆச்சரியமில்லை.

இன்னமும் பெண்ணின் முதல் கடமை அவள் வீட்டுக்கும், குடும்பத்துக்கும் தான்.

எந்த நிலையில் மனைவி வேலைக்குப் போவது குடும்பத்திற்கு உதவியாக இருக்கும்

எப்பொழுது அது ஒரு அநாவசிய செய்கையாக மாறும்.

உங்களுக்கு இரண்டு முழுநேர வேலைகளை முழுமையாகச் செய்ய சக்தி இருக்கின்றதா?

உங்கள் கணவர் வீட்டு வேலைகளிலும். உங்களின் வெளி வேலைகளிலும் உதவுவாரா?

வேலைக்குச் செல்லும் மனைவியால் கணவனின் தொழில் முன்னேற்றம் எந்த அளவுக்குப் பாதிக்கப்படும்? அவரும் வீட்டு வேலைகளில் பங்கேற்பதால் அவரது வேலையில் செலுத்தும் கவனம் குறையாதா?

அதிகாலையில் எழுந்து காலை உணவு சமைத்து, மதிய உணவை எடுத்து வைத்து, கணவனை வேலைக்கு அனுப்பி குழந்தைகளை பள்ளிக்கு அனுப்பி கதவைப் பூட்டிக் கொண்டு நீங்கள் புறப்படவேண்டும்.

அலுவலக இடைவேளையில் கடிதம் எழுதுவது போன்ற சில்லறை வேலைகளைச்செய்ய முடியுமா?

அதுமட்டுமா? அலுவலகம் முடிந்ததும் காய்கறி மளிகைச்சாமான்கள் வாங்கி வந்து இரவு உணவைத் தயாரிக்க வேண்டும்.

பகலில் செய்யத்தவறிய துணிதுவைத்தல், போன்ற வேலைகளை இரவில் செய்ய வேண்டும்.

இப்படியான சில்லறை வேலைகள் மலையாக வந்து இரவில் குவியும்.

மேலும் திடீரென உங்களுக்கு உடல் நலக் குறைவு ஏற்பட்டால் எந்த வேலையும் நடைபெறுது தடைப்படும்.

குடும்பத்தில் ஒருவருக்கு உடல் நலக் குறைவென்றால் கவனிக்க ஆள் வேண்டும்.

வேலைக்காரிக்கு உடல் நலக்குறைவென்றால் எல்லா வேலையும் தடைப்படும்.

இப்படியான கஷ்டங்கள் மத்தியில் நீங்கள் வேலைக்கு போவது அவசியம்தானா?

எல்லாவற்றையும் நாமே செய்துவிட முடியும் என்ற கர்வத்தில் தவறான கணக்கில் இருக்காதீர்கள். நீங்கள் சம்பாதிக்க வெளியில் போவதானால் வீட்டில் மற்றவர்களின் ஒத்துழைப்பு மிகவும் அவசியம்.

நன்றி 'சுமங்கலி'

## காலத்தால் அழியாத...

(5 ஆம் பக்க தொடர்ச்சி)

மயக்க முயற்சித்தார்கள். இவ்வரங்கங்களில், பார்க்க வருவோர் களிப்புற வேண்டி, மல்லர்கள் தங்களுக்குள் போர் விளைத்து ஒருவரை ஒருவர் கொல்லும்படி வற்புறுத்தப்பட்டனர். இவ்வாறு வேடிக்கையின் நிமித்தம் ஏராளமான அடிமைகளும் யுத்தக் கைதிகளும் கொல்லப் பட்டார்கள்

உரோம இராஜ்யத்தில் குழப்பங்கள் மிகுந்தன. அரசாங்கத்திற்கு விரோதமான எழுச்சிகள் தோன்றின மக்கள் கூட்டம் கூட்டமாகக் கொல்லப்பட்டனர். தேர்தல்களில் பொய், புரட்டு. லஞ்சம் முதலியன தாண்டவமாடின நசுக்கப்பட்டவர்களும் திக்கற்றவர்களுமாகிய அடிமைகள் கூட 'ஸ்பார்டகஸ்' எனும் மல்லனைத் தலைவனாகக் கொண்டு அரசாங்கத்தை எதிர்த்துக் கலகம் செய்தார்கள்.

களால் அவர்கள் ஈவு இரக்கம் இன்றி ஒடுக்கப் பட்டனர்

'அப்பியன்' சாலைஎனும் ரோம் நகரின் வீதியில் 6000 பேர் சிலுவையில் அறையப்பட்டனர் என்று சொல்லப்படுகிறது

சிறிது சிறிதாக செனட் சபையின் முக்கியத்துவம் குறைந்து சேனாதிபதிகளும் வெல்வாயர்களும் அதிகாரம் செலுத்த ஆரம்பிக்கிறார்கள். மாறுபட்ட சேனாதிபதிகளுக்குள் சண்டையும், உள் நாட்டுப் போரும், அவைகளால் கேடும் விளைகின்றன.

கிழக்கே பார்த்தியா அதாவது மெசபொடேமியா மீது ரோமர்கள் படையெடுத்துச் சென்றார்கள். அங்கே கரே எனும் இடத்தில் கி. மு. 53 ஆம் ஆண்டில் நடந்த போரில் ரோம சைனியங்கள் பார்த்தியர் களால் முறியடிக்கப் பட்டன.

(தொடரும்)

## அரச பஸ் சேவை .....

(3ஆம் பக்க தொடர்ச்சி)

இருந்தது இப்போது அது இல்லை. பஸ்சில் சென்று தான் பரிசோதனை செய்யவேண்டும். இப்போ சில பாதைகளில் ஒரு பஸ் மட்டும் தான் ஓடுகிறது. அதில் பரிசோதனை நடத்தியபின் நாம் வீடு போகவோ, டிப்போ திரும்பவோ முடியாது நடந்துதான் வரவேண்டும்." இனி மேல் ஒரு சைக்கிளையும் பஸ்சிலை கொண்டு போனால் தான் சுகமாயிருக்கும்" என்றார்

எனக்கு சிரிப்பாகவும், திகைப்பாகவும் இருந்தது.

முன்னர் எனக்கு பழக்கமான ஒரு சாரதி என்னிடம் வந்து குசலம் விசாரிக்கின்றார்

"உங்களுக்கெதுவும் பிரச்சினை இருந்தால் சொல்லுங்கோ பேப்பரிலை போடுவம், — நான்.

எனக்கெந்தப் பிரச்சினையும் இல்லை. கஷ்டப்படாமல் காசு உழைக்கிறன் வேலை செய்யாமல் சம்பளம் வாங்கிறன்... நான் பஸ்சை தொட்டே ஒருவருடத்துக்கு மேலாகின்றது'

சாரதி ஒரு சாதனை செய்த நிறைவில் கூறினார்.

அப்போது ஒருவர் பஸ்நிலைய அலுவலகத்திலிருந்து புறுபுறுத்தபடி வருகிறார்.

என்னை ஒரு பத்திரிகையாளன் என அறிந்ததும் அவர் பொரிந்து தள்ள ஆரம்பித்தார்.

மட்டக்களப்பு போக பஸ் விடுகினம் எண்டு வந்தால் போறதுக்கு கட்டணமாய் 100 ருபா கேக்கினம். அநியாயக் காசு மினிபஸ்காரன் கூட இப்படிக் கேட்க மாட்டான்.

காரணம் கேட்டால் டீசல் இல்லை, தட்டுப்பாடு எங்கினம் இவைக்கு மட்டும் தான் டீசல் தட்டுப்பாடு; மற்ற வாகனக்காரர் எங்கையிருந்து எடுக்கினம். பொறுப்புணர்ச்சி இருந்தால் எப்பிடியும் எடுப்பிக்கலாம் பஸ் தட்டுப்பாடாம். உங்கை கலியாண வீடுகளுக்கு விசேட பஸ் விடுகினம். அப்பமட்டும் எங்கிருந்து பஸ் வந்தது.'. ஆவேசத்துடன் கூறிமுடித்தவர் தன்னை ஆசுவாசப்படுத்திக்கொள்கிறார்.

'தம்பி இதைப்பற்றி எங்களிட்டை ஒன்றும் கேட்காதையும். டிப்போவிலை போய் நிர்வாகத்திட்டை கேளும்.' காரணம் சொல்லாது கையை விரிக்கிறார் பஸ்நிலைய அலுவலக அதிகாரி ஒருவர்.

எதுக்கும் வடபிராந்திய போக்குவரத்துச் சபை நிர்வாகத்தினரையே கேட்டுவிடுவதென்று முடிவுடன், இபோசாவை எதிர் பார்த்துக் காத்திராமல் 764 மினிபஸ் நிற்கும் இடத்துக்கு செல்கிறேன்.

(மிகுதி அடுத்த வாரம்)

## ஆலயத்தில் சைவப்...

(5 ம் பக்கத் தொடர்ச்சி)

விக 'யான் எம்மதமும் சம்மதம் என்ற கொள்கையுடையவன் சமரச சன்மார்க்கப் பித்தன் இந்த மேடையில் தமிழ்த் தெய்வமாகிய பாவலர் அவர்களுக்கு இடமில்லை என்றால் எனக்கும் இடமில்லை' என்று கோபத்துடன் கூறினார். அமைதியடைந்தனர் சிவ பக்தர்கள்.

இதன் பின்னர் பாவலர் அவர்கள் இந்த ஆலயத்தில் 'சைவம்வளர்த்த தமிழ்' என்ற பொருளில் மூன்று சொற்பொழிவுகளை நிகழ்த்தினார். இதற்கு விகவும் நண்பர்களும் ஏற்பாடு செய்திருந்தனர்

சேக்கிழார் முதல் இராமலிங்க அடிகள் வரை சைவப் பெருங் கடலில் மூழ்கி முத்தெடுத்ததைக் கண்ட கூட்டத்தினர் வியந்தனர். சிவபுராணம் ... மூன்று முழுமை...

ஓதிச் சபையினரையும் சில கேள்விகள் கேட்டார்.

சிவபுராணம் பற்றி அவர்களுக்குப் பதில் சொல்லத் தெரியவில்லை. உண்மையான சைவர்களுக்குத் தேவார திருவாசகத்தில் ஆழ்ந்த புலமை இருக்கவேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தார்.

மூன்று நாட்களும் சைவம் வளர்த்த தமிழ் காட்டாறாகப் பாவலர் நாவிலிருந்து பெருக்கெடுத்தோடியது.

ஆரம்பத்தில் பாவலரை எதிர்த்த கூட்டத்தினர் அவர் முன்னிலையில் தாம் செய்த தவற்றுக்காக வருந்தினர்.

பாவலர் அவர்கள் எழுபத்தைந்து ஆண்டுகள் வாழ்ந்தார். இஸ்லாத்தையும் சைவத்தையும் மதித்து முஸ்லிம்களிடையேயும் தமிழ் மக்களிடையேயும் ... புகழ் பரப்பினார்.

## விவேகானந்தரை வியப்படைய வைத்த ராஜகோபாலன்

அந்தப் பையனின் பெயர் ராஜகோபாலன் சிறு வயதிலேயே ராஜகோபாலன் மிகவும் கெட்டிக்காரனாயிருந்தான் அவனுடைய அப்பா அவனுக்கு அடிக்கடி காசு கொடுப்பார். அந்தக் காசை அவன் வீணாகச் செலவழிக்க மாட்டான், நல்ல நல்ல புத்தகங்களாக வாங்கிப் படிப்பான் எந்தப் புத்தகத்தைப் படித்தாலும் உடனேயே அதில் உள்ள நல்ல விஷயங்களை மனதிலே பதிய வைத்துக் கொள்வான். எவ்வளவு நாட்கள் சென்றாலும் மறக்கவே மாட்டான்.

சிறுவயதிலேயே புத்தகம் படிப்பதில் ஆர்வமும் நல்ல ஞாபகசக்தியும் இருந்ததோடு புத்திக் கூர்மையும் ராஜகோபாலனுக்கு அதிகமாக இருந்தது.

ராஜகோபாலன் வாலிபனாகி சென்னையிலுள்ள சட்டக் கல்லூரியில் படித்துக்கொண்டிருந்த போதுகடற்கரைக்குப் பக்கத்தில் உள்ள ஒரு மாணவர் விடுதியில் தங்கியிருந்தான் ஒரு நாள் அந்த விடுதிக்கு சுவாமி விவேகானந்தர் வந்திருந்தார். அவர் விடுதியைச்சுற்றிப் பார்த்துக் கொண்டுவரும்பொழுது, ராஜகோபாலன் இருந்த அறைக்குள் நுழைந்தார். அந்த அறைச் சுவரில் கிருஷ்ண பகவானின் படம் ஒன்று மாட்டப் பட்டிருந்தது அது ஒரு வர்ணப் படம். அதில் கிருஷ்ண பகவானுடைய உடல் நீல வர்ணத்தில் தீட்டப்பட்டிருந்தது.

அதைப் பார்த்ததும் விவேகானந்தர் ராஜகோபாலனைப் பார்த்து 'கிருஷ்ண பகவானின் உடல் நீலநிறத்தில் இருக்கிறதே, காரணம் தெரியுமா? என்று கேட்டார்

உடனே ராஜகோபாலன் ஜன்னல் வழியாகத் தெரிந்த கடலையும் ஆகாயத்தையும் காட்டி ஆகாயம் நீலமாக இருக்கிறது' கடலும் நீலமாக இருக்கிறது இரண்டும் எல்லையில்லாது விரிந்து கிடக்கின்றன. அதே போல் கிருஷ்ண பகவானும் எல்லையில்லாது எங்கும் வியாபித்துள்ளான் என்பதைக் காட்டவே நீலநிறம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்றான்.

இந்த அருமையான பதிலைக் கேட்டதும் விவேகானந்தர் மிகவும் வியப்படைந்தார்! ராஜகோபாலனை மனமாரப் பாராட்டினார்.

சிறுபையனாக இருந்த போதுதான் அவனை 'ராஜகோபாலன்' 'ராஜகோபாலன்' என்று அழைத்தார்கள். ஆனால் வளர்ந்தபின் அப்பெயரால் அவன் அழைக்கப் படவில்லை. ராஜகோபாலன் என்ற பெயர் மறந்துகூடப் போய்விட்டதே! ராஜாஜி என்று தான் மிகவும் மரியாதையாகவும் அன்பாகவும் சகலரும் அழைத்தார்கள்!!

(அழவள்ளியப்பா எழுதிய சின்னஞ்சிறு வயதில் என்ற நூலிலிருந்து எடுக்கப்பட்டது)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# பக்தர்களுக்கு அருளும் துர்க்கை
# பார் போற்ற தேரில் வருகிருள் நாளை

ஆயும் அறிவும் கடந்த அரனுக்குத் தாயும் மகளும் தாரமுமாக விளங்குபவள் அம்பிகை. இவளே சகல ஆற்றல்களுக்கும் இருப்பிடமாயவள். அமைதியான வாழ்வையும் அளவில்லாத ஆனந்தத்தையும் அருளும் அன்னையாக மிளிர்கிருள். இவளை

**தெல்லிப்பளை அருள்மிகு துர்க்காதேவி இரதோற்சவம் நாளை**

உபாசித்துப் பெரும் புண்ணியம் பெற்ருேர் பலர். எவனுக்கு மறுபிறவி என்பது ஒன்று இல்லையோ அவனே அம்பிகையை உபாசிக்கும் பாக்கியம் பெற்றவனுவான்

நம் நாட்டில் தேவிவழிபாடு மிகச் சிறந்து காணப்படுகிறது. அம்பிகையின் உருவபேதங்கள் பல. அவற்றை அமைத்துக் கொண்டு வேறு வேறு நிலையில் வைத்து வழிபடுவோர் பலர்.

எக்காலத்தில் தர்மத்துக்குக் குறைவு உண்டாகி அதர்மம் மிகுதியாகின்றதோ அப்பொழுது நான் அவதரிப்பேன் என்று பார்த்தசாரதியான கண்ணன் கீதையில் அருளினுன். அதேபோல் எப்பொழுது அரக்கர்களால் துன்பமுண்டாகிறதோ அப்பொழுது நான் அவதரித்துப் பகைவர்களை நாசம் செய்வேன் என்பது தேவியின் அருள்வாக்கு. இவ்விதம் தேவியும் கண்ணனும் ஒரே கருத்துள்ள வாசகங்களை வெளிப்படுத்துவதனுல் இருவரும் ஒரே தத்துவமாக இருக்கவேண்டுமென்பது புலனுகிறது. 'அமியலால் தேவியில்லை' என்பது தேவாரம். பரமேஸ்வரனுடைய சக்தி போககாலத்தில் பவானியாகவும், போரிலே துர்க்கையாகவும், கோபகாலத்தில் காளியாகவும், இரட்சிக்கும் காலத்தில் விஷ்ணுவாகவும் பிரிந்து காட்சி தருகிறது. இதனுல் சக்தி தத்துவமும் விஷ்ணு தத்துவமும் ஒன்றென்பதை அறியலாம். சக்திகளின் பெருமையை விளக்குவது சப்தசதி மந்திரமாகும். இதில் எழுநூறு மந்திரங்கள் இருப்பதாலும், எழுநூறு வகையான பிரயோகங்கள் அமைவதாலும் சப்தசதி என்று பெயர் கூறுவர். சப்த என்பது ஏழு; சதி என்பது நூறு.

துர்க்காதுரந்தரி
**தங்கம்மா அப்பாக்குட்டி**

சிறப்பாகச் சப்தசதி மந்திரத்திஞல் உணர்த்தப்படும் தேவதை துர்க்கை. துர்க்காதேவி ஒன்பது பேதமுடையவளாகச் சொல்லப்பட்டிருக்கிருள். ஜெயா, விஜயா, பத்ரா, பத்ரகாளி, ஸுமுகி, துர்முகி, ப்ரக்ஞா, வ்யாக்ரமுகீ, ஸிங்கமுகீ என்று ஒன்பது வகையாகத் துர்க்காதேவி சொல்லப்பட்டிருக்கிருள். மேலும் ஆகமங்களில் வனதுர்க்கை, ஜலதுர்க்கை, வன்னிதுர்க்கை, ஸ்துலதுர்க்கை, விஷ்ணுதுர்க்கை, பிரமாதுர்க்கை, ருத்ரதுர்க்கை, மஹாதுர்க்கை, சூலினிதுர்க்கை என்று ஒன்பது வகையான திருக்கோலங்களும் கூறப்பட்டிருக்கின்றன. துர்க்கையை எல்லா நலம் குறித்தும் பிரார்த்திக்கலாம். பிராமண குமாரியாக நின்று உயர்நலம் அளிக்கின்ருள். சத்திரிய குமாரியாக நின்று வெற்றி தருகின்ருள். வைசியகுமாரியாக நின்று லாபம் அளிக்கின்ருள். சூத்திரகுமாரியாக நின்று திருமணம் பிள்ளைப்பேறு ஆகிய வரங்களைத் தருகின்ருள். நாட்டிலே மழையில்லாது வரட்சியுற்ற நேரத்தில் மழையைப் பொழிவித்துப் பசிப்பிணியைத் தீர்த்து இரட்சிப்பதால் சாகம்பரி, சதாட்சி என்ற நாமங்கள் ஏற்பட்டன. துர்க்கன் என்ற அசுரனைக் கொன்றமையால் துர்க்கா என்னும் சிறப்பு நாமம் கொண்டு வழிபடப்படுகிறது.

மகிடாசுரனுல் துன்புறுத்தப்பட்ட தேவர்கள் பிரமாவிடமும், விஷ்ணுவிடமும் தங்கள் குறைகளைச் சொல்லி முறையிட்டனர். ஆங்கு வெளிப்பட்ட சினம் என்னும் சக்தி ஒன்றுசேர்ந்து உருவெடுத்த வடிவமே துர்க்கை வடிவம் என்று பேசப்படுகிறது. துர்க்காதேவி சிங்கவாகனத்தில் ஆரோகணித்து, மகிடாசுரனை எதிர்த்துப் போருக்கெழுந்தாள். அவ்வசுரனும் படைகளுடன் போருக்கு வந்தான். அம்பிகையின் வாகனமாகிய சிங்கமே அசுர சைனியங்கள் அனைத்தையும் அழித்துவிட்டது. அசுரன் மகுட உருவில் வந்தபோது அவன் செருக்கை அடக்கி அம்பிகை தனது திருவடியால் அமுத்தி ஆட்கொண்டாள். தேவி சதுர்ப்புஜங்களில் சங்கு, சக்கரம், தாமரை, ஜெபமாலை என்பவற்றைத் தாங்கிநிற்கும் திருக்கோலம் தியானத்திற்கு விருந்தளிப்பதாகும். துர்க்காதேவிக்கு ஈழவள நாட்டில் மிகப் பழமையான தனிப்பெருங் கோயில் அமைந்திருப்பது என்ருல் அது யாழ்ப்பாணத்தின் வடபாகத்திலுள்ள தெல்லிப்பழையிலே தான் இருக்கிறது. கிழக்கு பார்த்த சந்நிதியாகப் பிரதான வீதியை நோக்கிய வண்ணம் காட்சி தருவதும், தலவிருட்சங்களாக இலுப்பையும், மாவும், மகிழும், அரசும் அமைந்து விளங்குவதும், ஆகம விதிகளுக்கமைய மூல மூர்த்தியும் பிரகார மூர்த்திகளும் அமைந்து காட்சி தருவதும், பாகசாலை, யாகசாலை, வாகனசாலை, அந்தணர்சாலை, அலுவலகத் திருமுறை மண்டபம், பக்தர்கள் விடுதி, திருநந்தவனம், அன்னதான மண்டபம் என்பவற்ருேடு இவ்வாலயம் தோற்றமளிப்பதும் கண்கொள்ளாக் காட்சியாகும். ஏராளமான பக்தர்கள் இப்பொழுது இங்கு வந்து அவரவர் இஷ்டபூர்த்திக்கு வேண்டுதல் செலுத்தி, அதனுல் நிவர்த்தியும் பெறுகிருர்கள் என்பது கண்கூடு. கடந்த பத்து ஆண்டுகளுக்குள் துர்க்காதேவியின் அருட் பிரகாசம் பிரவாகித்து ஈழவள நாடெங்கணும் செறிந்து பாய்கிறது. அன்னையின் அருள்மிகு திருக்கோலத்தினைப் பல்லாயிரம் மக்கள் எழில்மிகு சித்திரத் தேரில் வைத்துத் தரிசிப்பதற்கு நாளை திரண்டு வந்து அருள் பெறுவார்கள்.

நின்ற திருக்கோலத்தில் எழுந்தருளி அன்னை பவனிவரும் காட்சி அடியார்களை அத்திருவருள் ஒளிக்குள் நிறுத்திவிடும் என்பதில் சந்தேகமில்லை. (நன்றி: தேர்த்திருவிழா சிறப்புமலர்)

''அச்சுவேலித் திருவிழாவாம் அதற்கேற்ற சப்பறமாம் வாணவிளையாட்டுக்களாம் வண்டிச் சவாரிகளாம்...'' என்று ஆரம்பிக்கும் பாடல் யாழ்ப்பாணத்தில் பிரபலமானது. அச்சுவேலி உலவிற்குளச் சித்திவிநாயகர் ஆலயத்தில் வருடாவருடம் பத்துத் திருவிழாக்கள் நடைபெறுகின்றன. முதல் ஒன்பது திருவிழாக்களிலும் வாண விளையாட்டுக்கள் இடம் பெறுவதுண்டு. அதனுல் தான் முன் கண்ட பாட்டு.

உலவிற்குளம் சித்திவிநாயகர் ஆலயத்தின்வரலாற்றுக்கும் அச்சுவேலி வரலாற்றுக்கும் ஒரு நெருங்கிய தொடர்புண்டு. 1910-ம் ஆண்டில் இராச இராசனுடைய படைத் தளபதிகளில் ஒருவனுகிய கருணாகரத் தொண்டமான் யாழ்ப்பாணத்துக்குப் படையுடன் வந்து இங்கு தங்கி தனது படைப் பிரிவு ஒன்றையும் இங்கு நிறுவினுன்.

அந்தக் கருணாகரத் தொண்டமானின் ஆட்கள் அச்சுவேலி, கரவெட்டி, மருதங்கேணி முதலிய இடங்களில் தங்கி உப்பு ஏற்றுமதியை ஊக்குவித்தனர். விளைந்த உப்பின் அளவையும் ஏற்றுமதி செய்த உப்பின் அளவையும் கணக்கு வைப்பதற்காக அச்சுவேலியில் உள்ள தலை முரண்டான் செட்டி என்பவர் நியமிக்கப்பட்டார். இந்த வகையில் மருதங்கேணிக்கும் அச்சுவேலிக்கும் தொடர்புகள் ஏற்பட்டன.

இற்றைக்கு 850 வருடங்களுக்கு முன் அச்சுவேலி தெற்கில் வசித்து வந்த சிதம்பரம் இராமர் என்பவர் வைக்கோல் ஏற்றுவதற்காக மருதங்கேணிக்குப் போயிருந்தார்.

வைக்கோல் ஏற்றி வந்த பின்னர் பிரயாணக் களைப்பால் சிறிது கண்ணயர்ந்தார். அவ்வேளை ஒரு சிறு குழந்தையின் அழுகுரல் அவரைத் திடுக்குற்று எழச் செய்தது. ஆனுல் அந்தப் பகுதியில் எப்படித் தேடியும் குழந்தையைக் காணவில்லை. இறுதியில் வைக்கோல் போரிலிருந்து அழுகுரல் வந்ததை அறிந்து அங்கு போய் தேடிய போது வைக்கோல் குவியலுக்குள் ஒரு மரப்பெட்டியும் அதனுள் பிள்ளையாரின் விக்கிரகமும் இடக்கக் காணப்பட்டன.

அந்த விக்கிரகம் பிரதிஷ்டை செய்யப்பட்டு இன்று உலவிற்குளம் பிள்ளையாராக வீற்றிருந்து அவ்வூர் மக்களுக்கும் அயலூர் மக்களுக்கும் அருள் பாலித்து வருகிருர்.

இவ்வாலயம் புனரமைக்கப்பட்டு இன்று (13 ம் திகதி சனிக்கிழமை) எண்ணெய்க் காப்பு சாத்துதலும் நாளை ஞாயிற்றுக்கிழமை மகா கும்பாபிஷேகமும் நிகழ விநாயகப் பெருமான் அருள்பாலித்து உள்ளார்.

—சுந்தரம் | விமலச்சந்திரன்.

## அச்சுவேலி உலவிற்குள
## சித்திவிநாயகர் ஆலய மகா கும்பாபிஷேகம் நாளை

(The article «அச்சுவேலி உலவிற்குள சித்திவிநாயகர் ஆலய மகா கும்பாபிஷேகம் நாளை» begins in the column beside the Durga article and continues under its heading above.)

## உதயன் - சஞ்சீவி
### நடத்திய
### நல்லூர் உற்சவகால அறிவுப்போட்டி முடிவுகள்

மேற்படி போட்டிக்கு இரண்டு வினப்படிவங்கள் பிரசுரித்திருந்தோம். ஏராளமான போட்டியாளர்கள் சரியான விடைகளை எழுதியிருந்தார்கள். அவர்களில் அதிஷ்டச்சீட்டுமூலம் தேர்ந்தெடுக்கப்பட்டதில் பரிசில் பெறுவோரின் விபரம் பின்வருமாறு:

முதற்பரிசு பெறுவோர்;

திரு. சி. வடிவேல்,
மே/பா. நா. தம்பிமுத்து,
மூர்த்தவிஞயகர் கோவில்,
ஆனைக்கோட்டை.

திரு. தி. சாந்தீபன்,
72/1 ,புகையிரதப்பாதை
கிழக்கு ஒழுங்கை,
சந்தர்மடம், யாழ்ப்பாணம்.

இரண்டாம் பரிசு பெறுவோர்:

செல்வன். போ. உல்லாசன்,
மே/பா. நா. போஜன்,
கொல்லங்கலட்டி,
தெல்லிப்பளை.

செல்வி. க. செல்வி,
1032, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

மூன்ரும் பரிசு பெறுவோர்:

திரு. க. சச்சிதானந்தம்,
அம்பனை,
தெல்லிப்பளை.

செல்வி. விக்னேஸ்வரி விஜயரட்ணம்'
பலாலிவீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

ஆறுதல் பரிசு பெறுவோர்;

1. செல்வி. ச சிவயோகநாயகி, அம்பனை, தெல்லிப்பளை,
2. செல்வி. சிவஜோதி சண்முகம், இல; 10, பிறவுண் வீதி, 8ம் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.
3. திரு. ம. சுந்தரேசன், பிள்ளையார் வீதி, திருநெல்வேலி மேற்கு, யாழ்ப்பாணம்.
4. செல்வி.கலைச்செல்வி சோமசுந்தரம், பன்னுலை, தெல்லிப்பளை
5. செல்வி. உதயந்தி வாமதேவன், திருநெல்வேலி வடக்கு, யாழ்ப்பாணம்.
6. திருமதி. தவமணிதேவி சோமசுந்தரம், பன்னுலை, தெல்லிப்பளை.

பரிசு வழங்கப்படும் காலம். இடம் பற்றிய விவரங்கள் வெற்றி பெற்றவர்களுக்குக் கடித மூலம் அறிவிக்கப்படும்.

போட்டிக்கு வந்துசேர்ந்த விடைப்படிவங்கள் 03-09-86 ஆம் திகதி நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில், ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள் அவர்களின் முன்னிலையில் திருத்தப்பட்டு, தேர்ந்தெடுக்கப்பட்டன.

திருமதி. மங்கையர்க்கரசி திருச்சிற்றம்பலம், திரு. மு. சிவராசா, திரு. மு. ஆறுமுகம் ஆகியோர் நடுவர்களாகப் பணியாற்றி போட்டிப் படிவங்களைப் பரிசீலனை செய்து முடிவுகளை வழங்கினர்.

போட்டியில் உற்சாகத்துடன் கலந்து கொண்ட சகலருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்ருேம்.

## விதிவழி செல்லும் மதியை - - -

(3ஆம் பக்க தொடர்ச்சி)
கென்னை வெகுண்ட தென்ருன்''

இந்த விதியை நாம் அனுபவிக்கத் தருவது தெய்வமே ஆகும். தெய்வம் நம்செயலின் வழியே தொழிற்படும். நாம் செய்த தீவினைப் பயன் நம்மை வருத்தும்போது அதற்குக் காரணமாகிய நம் செயலை நோவாது தெய்வத்தை குறை கூறுபவர்களையும் நாம் காண்கின்ருேம்.

''தாரமும் குருவும் தலை விதி'' என்பர். ஒருவருக்குக் குணத்தாலும் நலத்தாலும் ஏற்ற மனைவியைக் கூட்டி வைப்பதும் அவரது நல்விதியேயாகும். கணவொழுக்கத்தின் கண்ணே தலைவியை அடைந்து மகிழ்ந்த தலைவன் தன் நலவிதியைப் புகழ்ந்து கூறுமிடத்து தெய்வத்தையும் விதியுடன் இணைத்தல் படித்து மகிழ்தற்குரியது.

கிளவியின் நீக்கியக் கெண்டையங் கண்ணியைக் கொண்டுதந்த விளைவையல்லால் வியவேன் தெய்வ மிக்கனவே' என்பது திருக்கோவையார்.

''விளைவை'' என்பது நல்வினையின் விளைவாகிய தெய்வத்தை'' என உரைகாரர் கூறினர். இதற்கேற்ப தலைவியின் நற்ருேழியை இறைவனது அருள் எனத் திருக்கோவையார் கூறுகிறது.

நற்றிணை என்னும் நூலில் இவ்வித சந்திப்பில் ஊழின் சிறப்பு மிகத் தெளிவாக எடுத்துக் காட்டப்படுகிறது. சிறந்த வண்டொன்று தாமரை மலர்த்தேனை எடுத்து சந்தன மரத்திலே கொண்டுசென்று கூடுகட்டுகிறது பூவினிற் சிறந்தது தாமரை அதன் தேன் மரங்களிற் சிறந்த சந்தன மரத்திற்குச் செல்கிறது. வண்டுகளில் பலவகை உண்டு. சிறந்த வண்டே சிறந்த மலரில் தேன் எடுக்கச் செல்லும். மணிவாசகர் கோத்தும்பியிற் விளித்துப் பாடுவதும் இந்த வகைய ஒரு சிறந்த வண்டேயாகும். இங்கே சந்தன மரம் தலைவனுக்கும் தாமரைத்தேன் கலைவிக்கும் வண்டு நல்லூழுக்கும் பொருத்திக் காணுதற்குரியதாகும்.

விதிவழிச் செல்லும் மதியை மாற்ற வழியில்லையா? என்பது கேள்வி. அதற்கும் சான்ருேர் விடை கூறியுள்ளனர். [illegible] தெய்வத்தா [illegible] முயற்சிதன், மெய்வருந்தக் கூலிதரும் எனக் கூறினர். இந்த முயற்சியென்பது உலகியலில் வாழ்வோர்க்கு மிகவும் பயன் தருவதாகும். உயிர்நீங்கிவிடும் என்பதை நன்ருக அறிந்தபின்பும் ஆயுளை நீடிக்கச் செய்யும் மருந்தை ஒரு வைத்தியன் கொடுக்கிருன். இதைத் தீமையென்று சொல்லமுடியாது. அதுபோல இறுதிவரையும் முயன்ருல் முடியாபோல் தோன்றி முடிவு பெறும் செயல்களும் சில உண்டு என்பது குமரகுருபரர் கருத்து.

முயற்சியால் ஊழையும் வெல்லலாம் என்பது அவரின் கருத்து. உலையா முயற்சி களைகணு ஊழின வலி சிந்தும் வன்மையும் உண்டு' எனக்கூறும் நூலாசிரியர் மார்க்கண்டேயர் கதையை எடுத்துக் கூறுகிருர். உலகப் பற்றில் அலையும் மதியை இறைவன் பாதத்தில் கட்டிவிட்டால் விதி மதியைத் தன்பக்கம் இழுக்க முடியாது. உலக கருமங்களைச் செய்யும்போதும், மகிழ்ச்சியிலும், துன்பத்திலும் எப்பொழுதும் இறைவனையே சிந்திக்க வேண்டும். அப்போது மதி விதியின்படி செல்லாது அல்லாதார்க்கு மதியே விதியாய் விடும்.

''சிவாய நமவென்று சிந்தித் திருப்போர்க்கு அபாயம் ஒருநாளு மில்லை —உபாயம் இதுவே மதியாகும் அல்லாத தெல்லாம் மதியேவிதியாய்விடும்' ✶

## கிச்சிலியின் . . .

(6 ம் பக்கத் தொடர்ச்சி)
கள்பின்நோக்கிப்பட்டும், கெவர்களில் இருந்து பிசின் வடிவதையும் காணக்கூடியதாக இருக்கும்.

**போருேன்**

இதன் குறைபாட்டிஞல் இலைகளில் ரூபத்தைக் கெடுத்தலும் உருவமாறுபட்டும் (Distortion & deformation) காணப்படும். கூடுதலாக குறைபாடு ஏற்படின் நுனிகருகலும் இலை விளிம்பு கருகலும் ஏற்படும்.

**மொலிப்டினம்**

இக் குறைபாட்டிஞல் இலைகளில் வட்டவடிவமான அல்லது முட்டை வடிவ மஞ்சல் நிறப் புள்ளிகள் காணப்படும். சிலவேளையில் இப்புள்ளிகள் நீர்படிந்தனவாகக் காணப்படும்.

**கட்டுப்படுத்தல்**
(இந்தியன் விவசாய ஆராய்ச்சிப் பகுதியின் சிபார்சு)

சிறந்த முறை:- எல்லா மூலகங்களையும் கொண்ட வளமாக்கியை விசுறுவதேயாகும் ஆனுல் இவ் வளமாக்கியில் கீழ் கூறப்படும் அளவு மூலகங்களைக் கொண்டவையாக இருத்தல் வேண்டும்.

சிங்சல்பேற் .5 வீதம், கொப்பசல்பேற் .3வீதம், மக்னீசியம் சல்பேற் .2 வீதம், மங்கனீஸ் சல்பேற் .2வீதம், பெறஸ் சல்பேற் .1 வீதம், போறெக்ஸ் .1 வீதம் அத்துடன் .9 வீதம் சுண்ணம் (சமநிலைப்படுத்த கலவையை) அத்துடன் கூடுதலாக 1 வீதம் யூறியாவும்.

தெளித்தல் ஒன்று அல்லது இரண்டு முறை ஒவ்வொரு போகத்திலும் (புதுத் தளிர் இலைகள் தோன்றும் காலத்தில்) அத்தோடு சரியான காலநேரத்தில் நைதரசன், பொஸ்பரஸ், பொட்டாஸ் ஆகிய மூலகங்களை கூட்டெரு, இரசாயனப் பசளை மூலம் கொடுத்தல் சிறந்த பராமரிப்பு முறையாகும்.

நமதுநாட்டில் விற்பனையாகும் திரவ வளமாக்கள் (சிறந்தவை)

1. நைற்ருே பொஸ்பா (Nitro-phosk)
2. நுயூற்ரு பொஸ் (Nutra phos) 10-4-7-0.2
3. [illegible] (Complesal)
4. [illegible] (Maize crop). ✶

## சொற்சிலம்பம்

### போட்டி இல. 33

| 1 | | 2 | | 3 | | 4 | 5 |
|---|---|---|---|---|---|---|---|
| | ■ | | ■ | | ■ | 6 | |
| 7 | | | 8 | ■ | 9 | | ■ |
| | ■ | 10 | | 11 | | ■ | 12 |
| ■ | 13 | | ■ | | ■ | 14 | |
| 15 | | ■ | 16 | | 17 | | ■ |
| 18 | | | | ■ | 19 | | 20 |
| 21 | | ■ | 22 | | | ■ | |

அனுப்புபவர் பெயர்:-

திரு/திருமதி/செல்வன்/செல்வி: ..............................

..............................

வயது: ..............................

விலாசம்: ..............................

..............................

ஒப்பம்: ..............................

### போட்டி விதிகள்

சொற்சிலம்பம் போட்டி விதிகள் ஒவ்வொரு மாதமும் முதல் வாரத்தில் வெளியாகும்.

**மேலிருந்து கீழ்**

1. பரம்பரை
2. சஞ்சலம்
3. காற்று
4. தசம்; குழம்பியுள்ளது
5. மூன்று
8. சிறையில் இருப்பவன்
9. தாயிடம் இருக்கிறது, ஆனுல் நிமிர்த்த முடியாதது
11. வேள்வி
12. தவளைஇனத்தைச் சேர்ந்தது
13. துலாமரம்
14. இளைப்பாறுதல்
15. இதற்குப் போட்டி அதிகம்
16. சிலை
17. அன்பு
20. முனிவர்

**இடமிருந்து வலம்**

1. பேரரசன்
6. குதிரை
7. செய்திகளைப் பிரசுரிப்பதை கட்டுப்படுத்துவற்கு அரசு அவ்வப்போது விதிப்பது
9. தர்க்கம்
10. இதற்கு மேல் ஓலையைக் கட்டி வேலி ஆக்குவர்
13. இணக்கத்தைக் குறிப்பது
14. நேரம்
15. தூங்கு
16. இந்தியாவின் பிரதானமான பட்டினங்களில் இதுவும் ஒன்று
18. பொருத்தமற்றது
19. மயிர்
81. பழைய போர் ஆயுதம்
22. மத்தி

### சொற்சிலம்பம் இல. 31 விடைகள்

**மேலிருந்து கீழ்**

1. கதி 2. திருவடி 3. காவியம் 4. மதில் 5. கதிரை 8. சகதி 11. முரசு 12. மலை 13. கபோதி 14. தப் 15. சடுதி 17. கபடு 18. கல்வி 19. நத்தை 21. சக.

**இடமிருந்து வலம்**

1. கதிர்காமம் 6. திரு 7. விதி 8. சதி 9. வளையல் 10. கரை 11. முடி 12. மதி 14. தலை 16. சுகபோகம் 19. நடு 20. பதில் 21. சத்தி 22. காடு 23. விடுகதை.

### சொற்சிலம்பம் இல. 31
### பரிசு பெற்றவர்கள் விவரம்

முதலாம் பரிசு:- செல்வி. எஸ். யஸ்மின், 33, கதீட்ரல் ரோட், யாழ்ப்பாணம்.

இரண்டாம் பரிசு:- செல்வன் நா. இராகுலன், மே/பா சி. நாகராசா, கண்டி வீதி, சாவகச்சேரி.

மூன்ரும் பரிசு:- திரு. கே. சிவகுமாரன், சோதி வீதி, காங்கேசன்துறை.

✶ குறிப்பு:-
பரிசு பெற்றவர்கள் கடிதம் மூலம் அழைக்கப்படுவர். பரிசுப் பணத்தைப் பெறுவதற்கு பத்திரிகையில் வெளியான பெயருக்குரியவரே உரிய அடையாளஅத்தாட்சிகளுடன் நேரில்வரவேண்டும் எக்காரணம் கொண்டும் வேறு எவரிடமும் பரிசுப்பணம் கையளிக்கப்படமாட்டாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சஞ்சீவி

13 - 09 - 1986 சனிக்கிழமை



### சகாய விற்பனை

தெல்லிப்பழை துர்க்காதேவி தேர்த்திரு விழா] தீர்த்தத்திருவிழா 14. 9. 86/ 15 .9 86, மில்க்லைற் விளம்பர வாகனத்தில் ரூ. 15/ற்கு மில்க்வைற் தயாரிப்புகளை வாங்கும் அன்பர்களுக்கு ஸ்ரீ துர்க்கா தேவி அஷ்டகம், அபிராமி அந்தாதி, சரஸ்வதி ஸ்ரிக்கர், அறிவு நூல்களும் பொலித்தீன் பைக்கும் அன்பளிப்பாக வழங்கப்படும். வேலுறைகள் சேகரித்து வைத்திருக்கும் அன்பர்கள் அங்கு கொடுத்து உயர்ந்த பரிசுகளைப் பெற்றுக் கொள்ளலாம்.



'உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்'

உழுவோம்
உழைப்போம்
உயர்வோம்

10 மில்க்வைற் நீலசோப் அல்லது 2 மில்க்வைற் பார்சோப் மலுறைகளை அனுப்பி அழகிய பாரதியார் ஸ்ரிக்கர் ஒன்றைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

மில்க்வைற்-யாழ்ப்பாணம்


★ கஷ்டமும் நன்மையும் ★ படகுத் தமிழர் அதிஷ்டசாலிகள்

# ஜேர்மன் நகரத்திலிருந்து கனேடிய சொர்க்கத்தில்!

'அத்திலாந்திக் கடலில் படகுத் தமிழர்'- விவகாரம் இடம் பெற்று ஒரு மாதம் பூர்த்தியாகி விட்டது.

ஏன் மேற்கு ஜேர்மனியை விட்டுப் புறப்பட்டார்கள்? கனடா அவர்களுக்கு ஏன் கைகொடுத்தது? —என்பது பற்றிய பின்னணித் தகவல்களுடன் புதிய கண்ணோட்டத்துடன் இக்கட்டுரை எழுதப்பட்டுள்ளது.

1986 ஆகஸ்ட் 9' கப்பல் பயணத்தின் 13 ஆவது நாள்.

வட அத்திலாந்திக் கடலில் நின்று கொண்டிருக்கும் சரக்குக் கப்பலில் இருந்து கயிற்று ஏணி மூலம் பயணிகள் இறக்கப்படுகின்றனர்.

கடலில் மிதந்துகொண்டிருக்கும் இரண்டு உயிர்காக்கும் படகுகளில் அவர்கள் ஏணி மூலம் இறங்கி ஏறிக் கொள்கிறார்கள்.

கயிற்று ஏணியில் மெதுவாக இறங்குபவர்களை, கப்பல் கப்டன் முதுகில் பிடித்துத் தள்ளி விடுகின்றான்.

தப்பினோம், பிழைத்தோம் என்று எப்படியோ இறங்கிக் கொண்டனர்.

கப்பல் மாலுமிகள் இறங்குபவர்களின் உணவுப் பொருள்களை கப்பலில் இருந்தே படகுகளுக்குள் எறிகின்றனர்.

பால் போத்தல்கள், பாண், டோர்ச் லைட்டுகள் படகில் விழாமல் கடலினுள் விழுந்து அமிழ்ந்து போகின்றன.

கடலினுள் விழாமல் தப்பினோமே என்ற திருப்தியுடன் 155 பேரும் இரண்டு உயிர் காக்கும் படகுகளில் 'சரித்திரப் பயணத்தை' தொடர்கின்றனர்.

இரக்கமற்ற சரக்குக் கப்பலின் கப்டனோ, சரக்குகளில் ஒன்று என்று 'மனிதச் சரக்குகளை'யும் இறக்கி விட்டு பயணமாகிறான்......................

மூன்று தினங்கள் உயிரைக் காக்கும் முயற்சியில் உயிர் காக்கும் படகுகளில் நடுக்கடலில் தத்தளித்த இவர்கள் வாழ்வில் ஆகஸ்ட் 11ஆம் திகதி பிறந்தது.

### கப்டன் கண்டதால் உயிர் வந்தது

பனி முட்டத்தைக் கிழித்துக் கொண்டு வந்த மீன்பிடிப்படகு 'த பெக் போர்டின்' கப்டன் பெலிக்ஸ் டொபின் கண்களுக்கு இப்படகுகள் தென்பட்டன.

பிற்பகல் 3 மணி இருக்கும். கப்டன் டொபின் படகுகளைப் பார்த்தார்? நெருங்கி அணுகிக் கொண்டு படகுகளில் 155 பயணிகள்.

எப்படி வந்தார்கள்? எங்கு இருந்து குதித்தார்கள்? மூளையைப்போட்டு உடைத்துப் பார்த்தார்கள் கப்டன் ஒன்றுமே புரியவில்லை அவருக்கு.

கனடாவின் கரையில் இருந்து 6 மைல் தொலைவில் திக்குத் திசை தெரியாது மூன்று தினங்களுக்கு மேல் தத்தளித்த 155 பயணிகளுக்கு அப்போதுதான் ''உயிர்'' வந்தது.

அந்த 155 பயணிகளும் முதல் படகுத் தமிழர் என்ற பட்டத்தைத் தட்டிக் கொண்டவர்கள்.

'அலைகடலின் கருணையினால் தப்பிப் பிழைத்த இவர்கள் தெகிகித்தலைகளை உலகப் பத்திரிகைகள் போட்டி போட்டுக் கொண்டு பிரசுரித்தன.

உலகின் பல நாடுகளைச் சென்றடையும் இலங்கைத் தமிழ் அகதிகள் பற்றிய பிரச்சினை உச்சக்கட்டத்தை எட்டிப் பிடித்த காலம் இது என்று கூறலாம்.

**தீபன்ராஜா**

### பொய்யும் உண்மையும்

முதலில் இந்தியாவில் இருந்து புறப்பட்டோம் என்று சொன்ன இவர்கள் பின்னர் மேற்கு ஜெர்மனியில் இருந்து வந்தோம் என்று உண்மையை ஒப்புக் கொண்டார்கள்.

பொய் சொன்னதால் இழந்த அனுதாபத்திலும் பார்க்க கூடிய அனுதாபத்தை உண்மையை ஒப்புக்கொண்டவுடன் கனடாவில் இவர்களால் பெறமுடிந்தது.

பொய்சொன்ன வாய்க்குப் பொரியும் இடைக்காது என்பார்கள்.

கனடாவோ, போசனத்துடன் உத்தியோகத்தையும் வழங்கியது.

அதுமட்டுமல்ல, ''கனடா வந்தேறுகுடிகளாலும் அகதிகளாலும் கட்டி எழுப்பப்பட்ட நாடு. தஞ்சம் அடைந்தவர்களை திருப்பி அனுப்ப மாட்டோம்'' —இப்படி கனடா பிரதமர் பிரையன் முல்ரோனியை சொல்லவும் வைத்தது.

''இப்படிச் சொல்ல பிரதமரை நாம் தான் தூண்டினோம்.

சுதந்திரத்தையும் கௌரவத்தையும் மதித்துவரும் கனடாவின் பெருமையை மீண்டும் உறுதிப்படுத்தும்படி பிரதமருக்கு தூண்டுதல் கொடுத்தோம்'' —இப்படிச் சொன்னார், சர்வதேச மன்னிப்புச் சபையின் முன்னாள் தலைவர் மைக்கல் செலூ என்பவர்

இவர் மன்னிப்புச் சபையின் அகதிகள் பிரிவுப் பேச்சாளர்.

மைக்கல் செலூ, மனித உரிமைவாதி இலங்கைத் தமிழ் அகதிகள் கனடாவை அடைந்ததும் கொதித்தெழுந்த வலதுசாரி அரசியல்வாதிகளைப் பார்த்து அவர் கேட்டார்;

''சித்திரவதை காரணமாக போர்த்துக்கலில் இருந்து படகுமூலம் அகதிகள் வந்தபோது நீங்கள் ஏன் எதிர்க்கவில்லை''

### இலவசம் இலவசம்

கனடாவில் சில இடங்களில் தமிழ் அகதிகளை ரயில்வே நிலையங்கள் இலவசமாக ரயில் பயணம் மேற்கொள்ள அனுமதித்தன. சிகை அலங்காரம் கூட இலவசமாக சிலருக்குச் செய்யப்பட்டன.

போட்டி போட்டுக் கொண்டு உத்தியோகங்கள் வழங்கப்பட்டன.

மேற்கு ஜெர்மனியை விட்டு இவர்கள் ஏன் புறப்படவேண்டும்?

''நாய்களுக்கு உள்ள சுதந்திரம்கூட மேற்கு ஜேர்மனியில் தமிழருக்கு இல்லை'' —என்று கூறுகிறார் மே. ஜேர்மனியில் உள்ள தமிழீழ விடுதலைப் புலிகள் பேச்சாளர் சத்தியன் சுதன்.

''மேற்கு ஜேர்மனியில் அலவன்ஸாக மாதம் 80 மார்க்குகள் அகதிக்குக் கொடுக்கின்றார்கள். நடமாட்டம் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. உறவினர்களைப் பார்க்க முடியாது; அவர்களுக்கு கடிதம்கூட எழுதமுடியாது.

''தொழில் வாய்ப்புக் கிடைத்தாலும் அரசு அதிகாரிகள் ஏற்க அனுமதிக்கிறார்கள் இல்லை. அப்படி வேலை கிடைத்தாலும் புல் வெட்டும் வேலை கிடைக்கிறது ஒரு மணித்தியால வேலைக்கு ஒரு மார்க் வீதம் சம்பளம் வழங்கப்படும். ஜெர்மன் தொழிலாளி அதே வேலைக்கு 13 மார்க் சம்பளம் பெறுகிறான்''

—இப்படி தமிழ் அகதி ஒருவர் சொன்னார்.

''எமக்கும் சுயமரியாதை உண்டு. உழைத்துச் சாப்பிடவே விரும்புகின்றோம் எமக்கு இலவச உதவிகள் தேவை இல்லை'' —இப்படி இன்னொரு அகதி கூறுகிறார்.

தொழில் வாய்ப்புப் பெற்று சுயமரியாதையுடன் வாழ விரும்பும்இலங்கைத் தமிழர் அகதிகளுக்கு 'அகதிகளாலும் வந்தேறு குடிகளாலும்' கட்டி எழுப்பப்பட்ட கனடாதான் சரியான இடம் என்பது சொல்லித் தெரியவேண்டியது இல்லை.

---

# ஹராரேயில் ராஜீவ் அதிர்ச்சி வைத்தியம்!

### உள்ளும் புறமும்

குறுமுனி

மாலைதீவு எச்சரிக்கையின் பின்னர் வந்தவர் தான் ஹராரே கண்டனம்.

மாலைதீவு மயக்கத்தைக் கொடுத்தது. ஹராரே கலக்கத்தைக் கொடுத்துள்ளது.

தர்மிஷ்டரே ஹராரே கண்டனத்தினால் குழப்பமும் கலக்கமும் அடைந்து இருப்பதாகக் கூறுகின்றார்.

1984 சர்வகட்சி மாநாடு நடந்த சமயம் கிராமோதய, பிரதேச சபை என்ற சித்தாந்தத்தையே பாடி வந்தவர் பிரேமதாஸ, அது] மட்டும் அல்ல இந்திய எதிர்ப்புணர்ச்சியை வேண்டும் என்ற அளவு நாடாளுமன்றத்திலும் சரி வெளியேயும் சரி கக்கி வந்தவர்.

பண்டாரநாயக்க முறையைத் தொடர்ந்து பிரேமதாஸவின் கருத்து முறையும் மாறியது. வாய்மூடி மௌனியாக இருந்தார்.

இனப் பிரச்சினைக்குத் தீர்வுக்கு ஆக்கபூர்வமாக எதையாவது வெளியில் சொல்ல தர்மிஷ்டருக்குப் பயம்.

நிலைமை தனக்கு மேல் போகவேதான் வருவது வரட்டும் என்று மாகாண சபை யோசனையை முன்வைத்தார்.

பிரேமதாஸ அது குறித்தும் வாய் திறக்கவில்லை

அரசு — கூட்டணி முதல் கட்டப் பேச்சுத் தொடங்கும் சமயம் பிரேமதாஸ உலகப் பயணம் ஒன்றை தொடங்கி விட்டார்.

இரண்டாம் கட்டப் பேச்சுத் தொடங்கிய பின்னர் தான் தாயகம் திரும்பிய பிரேமதாஸ, அரசு — கூட்டணியின் ஒரு சுற்றுப் பேச்சில் மட்டும்கலந்து கொண்டார்.

அதில் கூட மாகாண சபை அதன் அதிகாரங்கள் பற்றி ஒரு வார்த்தைதானும் பேசவில்லை.

இந்த நிலையில் தான் தர்மிஷ்டர் ஒரு தந்திரம் செய்தார்.

ஹராரேக்கு அனுப்பி கிட்டால் அங்கு தனது யோசனையை ஆதரித்துப் பேசுவார் என்று எதிர் பார்த்தார்.

ஆனால் விஷயமோ 'பிள்ளையார் பிடிக்க வைக்கப் பெருங் குரங்காய்' முடிந்தது போல் ஆகிவிட்டது.

''அரசியலில் முதுகெலும்பில்லாதவர்கள்'' என்று காரசாரமாக இந்தியப் பிரதமர் கூறிவிட்டார்.

இன்று கொழும்பில் உள்ளவர்கள் எல்லாம் தங்கள் 'முதுகை'த் தொட்டுப் பார்க்கத் தொடங்கியிருக்கிறார்கள்,

''ஒன்றரை ஆண்டுகளுக்கு முன்னர் நாம் தந்த யோசனைகளை இப்பொழுதான் உங்களால் ஏற்க முடிந்ததா? இடைப்பட்ட காலத்தில் எத்தனை ஆயிரம் அப்பாவித் தமிழர்கள் இறந்து விட்டார்கள்''

கேட்க வேண்டிய கேள்வியை, பிரதமர் ராஜீவ் கேட்கக் கூடாத இடத்தில் கேட்டுவிட்டார்?

அணிசேரா இயக்கத் தலைமைப் பதவியைக் கையளித்த மறுகணமே கேட்டு விட்டார் என்பது தான் எல்லார் மனதிலும் காட்டமாக பதிந்துவிட்டது.

''இனப் பிரச்சினைக்குத் தீர்வு இறுதிக் கட்டத்துக்கு வந்துவிட்டது. இனியாவது ரோஷவுணர்வு கொண்டு தமிழர் அபிலாஷைகளை திருப்தி செய்யக்கூடிய தான தீர்வைக்காண இலங்கைத் தலைவர்கள் முன்வருவார்களா?''—

மேற்கண்ட ஏக்கத்தின் பிரதிபலிப்பாக இந்தியப் பிரதமரின் ஹராரே கண்டனத்தை இலங்கை ஏன் எடுத்துக் கொள்ளக் கூடாது?

ஹராரே அதிர்ச்சி வைத்தியம் மூன்றாம் கட்ட பேச்சுக்களின் போது சரியாக வேலை செய்யுமா?

அல்லது வேதாளப் பழையபடி முருங்கை மரம் ஏறிய கதைதானோ? இருந்து தான் பார்ப்போமே!

---

# அணிசேரா நாடுகளின் எதிர்காலம் எப்படி?

அணிசேரா நாடுகளின் எட்டாவது உச்சி மாநாடு சிம்பாப்வேயின் தலைநகரான ஹராரேயில் நடந்து முடிந்துள்ளது.

அணிசேரா நாடுகளின் தலைவர் என்ற பெரும் பொறுப்பை சிம்பாப்வே ஜனாதிபதி ரொபர்ட் முகாபே ஏற்றுள்ளார்.

கறுப்பு இன ஆபிரிக்க நாடுகளைப் பொறுத்த வரை சிம்பாப்வேக்கு வழங்கப்பட்ட தலைமைப் பதவி கறுப்பு இன நாடுகளின் தென் ஆபிரிக்க எதிர்ப்புப் போராட்டத்துக்கு மேலும் உத்வேகத்தை அளித்துள்ளது எனலாம்.

அணிசேரா நாடுகள் இயக்கம் 25 வருடங்களுக்கு முன்னர் ஆரம்பித்து வைக்கப்பட்டது இது இன்று 101 நாடுகள் அங்கம் வகிக்கும் அணிசேரா இயக்கமாக உருவெடுத்துள்ளது

இரு பெரும் வல்லரசுகளான அமெரிக்காவும் சோவியத் யூனியனும் பல தடவை போரின் விளிம்பில் தள்ளப்பட்ட சந்தர்ப்பங்களை அடுத்தே அணிசேரா நாடுகளை உருவாக்கும் திட்டம் கருக்கொண்டது.

இரு வல்லரசுகளுக்கும் இடையில் சமரசத்தை ஏற்படுத்தக் கூடிய மூன்றாவது சக்தியாக அணிசேரா இயக்கம் செயற்படவேண்டும் என்பதே அதனை உருவாக்கிய தலைவர்களின் நோக்கமாக இருந்தது.

கடந்த 25 வருடகாலத்தில் நடைபெற்ற எட்டு உச்சிமாநாடுகளும் உருப்படியான காரியம் ஒன்றையாவது செய்தனவா என்பதே இன்று எழுந்துள்ள முக்கிய கேள்வி ஆகும்.

**உலக உலா**

அணிசேரா நாடுகளில் அங்கம் வகிக்கும் இரு நாடுகளான ஈரானும ஈராக்கும் கடந்த ஆறு ஆண்டுகளாகப்போரிட்டு வருகின்றன

அணிசேரா நாடுகளில் ஒன்றான லிபியாவின் இரு நகரங்கள் மீது (திரிபோலி, பென்காசி) அமெரிக்க விமானங்கள் கடந்த ஏப்ரல் மாதம் தாக்குதல் நடத்தின. இதனையும் அணிசேரா நாடுகளினால் தடுத்து நிறுத்த முடியவில்லை

1983 இல் கிரெனிடா மீதான அமெரிக்கப்படை எடுப்பையோ இந்திய பாக் யுத்தங்களையோ மத்திய கிழக்கு யுத்தங்களையோ தடுத்து நிறுத்த முடியாத நிலைமை அணிசேரா இயக்கத்துக்கு இருந்து வந்தது.

இந்த இயலாத்தன்மையின் பிரதிபலிப்பையே ஹராரே மாநாட்டில் உரையாற்றிய பல தலைவர்களின் உரைகளில் காணக்கூடியதாக இருந்தது.

லிபியா மீதான அமெரிக்கத் தாக்குதலின் பின்னர் முதல் தடவையாக வெளிநாட்டுப் பயணம் மேற்கொண்டு ஹராரே மாநாட்டுக்கு வந்த கேணல் கடாபி, இயக்கத்தின் இயலாத்தன்மையைக் கண்டித்து முதல் தடவையாக உரையாற்றி இருக்கிறார்.

வார்சோ ஒப்பந்த நாடுகளையும் சேர்த்துக் கொண்டு அமெரிக்க எதிர்ப்பு முகாம் ஒன்றை உருவாக்க வேண்டும் என்ற தொனி அவரின் பேச்சில் இருந்தது.

அணிசேரா நாடுகள் இயக்கம் சோவியத் யூனியனுக்கு ஆதரவாகச் செயற்படுவதாகவும் சில நாடுகள் ஹராரே மாநாட்டில் குற்றஞ்சாட்டி இருந்தன.

அணிசேரா இயக்கம் வல்லரசுகளின் பிணக்குகளில் தலையிடாவிட்டாலும் தனது அங்கத்துவ நாடுகளின் விவகாரங்களிலாவது பயனுள்ள விதத்தில் செயலாற்றுவது அவசியம்.

அணிசேரா இயக்கத்தின் தற்போதைய போக்கு நீடிக்குமானால் அது காமன் வெல்த் போன்ற வெறும் பொம்மை அமைப்பாகவே உருமாறி விடலாம்.

---

## தமிழர் விடுதலை---

(2ம் பக்கத் தொடர்ச்சி)

துவதும் அவர்கள் திட்டம். முப்படைகளும் சேர்ந்து நடத்திய கூட்டு நடவடிக்கை இது.

எப்படியோ ஓரளவு முன் கூட்டியே இத்திட்டம் எமக்குத் தெரிய வந்தது. நாமும் பெரும்பாலும் சிவில் யுத்தம் ஒன்றுக்குத் தயாரானோம். மக்களையும் தயார்ப்படுத்தினோம் சிவில் பாதுகாப்பு நடவடிக்கைகள், விமானத் தாக்குதலில் இருந்து தப்ப பதுங்கு குழிகள் அமைப்பது போன்றவற்றை மக்களுக்குச் சொல்லிக் கொடுத்தோம்.

எவ்வளவு போராளிகளை இழப்பினும் விட்டுக் கொடுப்பது இல்லை என்ற தீர்மானத்தை எடுத்தோம். அதனால்தான் எல்லாப் பக்கங்களில் இருந்து வந்த இராணுவத்தினரை எதிர்த்து எமது தோழர்கள் ஆக்ரோஷத்துடன் போராடினார்கள். ஒருவர் கூட இதில் பின் வாங்கவில்லை. இதில் 9 போராளிகளை நாம் இழந்தோம். எமது இணைந்த உக்கிரமான போராட்டத்தினால் அவர்கள் சிதறுண்டனர்.

கிளிநொச்சி முகாமில் இருந்து வந்த படையினரை பளையில் வைத்து [illegible] ஆனையிறவில் இருந்து வந்தவர்கள் [illegible] கொண்டுவர முயற்சிக்கப்பட்டது. நாம் அதனை முறியடித்தோம்.

(உதயனில் தினமும் தொடரும்)

## படிக்கும் நடிக்---

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

டக்டரிடம் சொன்னார்.

கண்டக்டரும் மனைவியை அனுமதித்தார். 'டாக்டரம்மா' ஆஸ்பத்திரிக்குச் சென்று அப்பெண்ணைச் சோதனை இட்டார்.

குறிப்பிட்ட குளிகையில் 21 வாங்கிக்கொடுங்கள் என்று'டாக்டரம்மா' பெண்ணின் கணவனுக்கு சீட்டு எழுதிக் கொடுத்தார்.

மருந்துக் கடையில் சீட்டைக் கொடுத்த கண்டக்டரை, கடைக்காரர் ஏற இறங்கப் பார்த்தார்.

''வழக்கத்தில் அந்த ரகக் குளிகையில் 5க்கு மேல் எடுக்கும்படி டாக்டர்கள் கூறுவதில்லை. அப்படி இருக்க 21 குளிகைகளை எடுக்கும்படி கூறிய டாக்டர் யார்?''

— மருந்துக்கடைக்காரர் சிரேஷ்டமருத்துவ அதிகாரி ஒருவரிடம் இப்படி முறையிட்டார்.

அதன் பின்னர் 'டாக்டரம்மா' வாக நடித்த [illegible] தேவதாஸ் கைதாகி விளக்கமறியலில் வைக்கப்பட்டார்

## சரித்திரம் திரிப்-----

(1ம் பக்க தொடர்ச்சி)

எண்ணுகின்றனர்

'அது உண்மை அல்ல இலங்கையில் பல்லாண்டு காலங்களுக்கு முன்பு பிறந்து வளர்ந்தவர்களே பின்னர் தெய்வங்களாகக் கொள்ளப் பட்டனர். பௌத்த மதத்தையும், பௌத்த மதத்தையும் காப்பாற்றி ஒரு வர்கள் அவர்கள்'' - இவ்வாறு கல்விக்கழக விரிவுரையாளர் ஒருவர் அண்மையில் அலம்பி இருக்கிறார்.

கௌதம புத்தர் ஓர் இந்தியர் பிறந்தவர் என்பது அந்த விரிவுரையாளருக்குத் தெரியுமோ என்னவோ!

புத்தரின் வாழ்க்கை நெறியே சமயமாக மாற்றப் பட்டது. ஆனால் இந்த சமயம் ஒரு பூரணமதம் அருவமும், உருவமும் இல்லாத ஆதியன — இதனைத்தான் இந்துக்கள் கடவுளாகக் கொண்டார்கள். புராண இதிகாசங்களில்தான் கடவுளுக்குப் பெயர்கள் வைக்கப்பட்டன -

இலெமூரியா என்ற ஒரு கண்டம் இருந்தது. இலங்கை இந்தியாவின் நிலப்பகுதியில் ஒன்றாக இருந்தது. இயற்கை நிகழ்வினால் கடல் கொண்டபோது பிரிந்தது. எகிப்திய நாகரிகம் கூட இப்போது தென்தமிழ் நாடு அமைந்துள்ள இலெமூரியாவில் இருந்துதான் பரவியது —

இந்த வரலாற்றுத் தகவல்கள் அந்த விரிவுரையாளருக்குத் தெரியுமோ தெரியாதோ!

யார் தான் எதை எதைச் சொன்னாலும் தமிழர் வரலாறு, பாரம்பரியத்தை, பண்பாட்டை எடுத்துச் சொல்லி நிலைநாட்ட ஒரு நிலையம் வேண்டும்.

தமிழர் தைமிட சமூகத்தில்தான் அது அவசியம்.

வரலாற்றை திரிக்க முயல்வோரை தக்க வாதங்களால் திருத்தி எடுக்க எம்மிடம் அறிஞர்கள், சரித்திரவியலாளர்கள் இல்லையா? ஐயகோ, தமிழினமே! தமிழ்மொழியே!!


**Dynamica**

**புதிய தளபாடக் காட்சியறை**

யாழ். நவீன சந்தை மேல்மாடியில்

Chairs, Tables, Beds, T.V. Stands, Hall Set, Revolving Chair, Book Rack, Wall safe Etc.

QUALITY PRODUCTS. MANY ELEGANT MODELS
WIDE SELECTION ECONOMICALLY PRICED

**கவிதாஸ் - டைனமிக்கா காட்சியறை**

இல- 22, நவீன சந்தை மேல்மாடி.

யாழ்ப்பாணம். Tele: 24149

dyn ads



இப்பத்திரிகை யாழ்ப்பாணம், மின்சாரநிலைய வீதி, இரண்டாவது ஒழுங்கை 15-ஆம் இலக்கத்தில் உள்ள உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிரைவேட்) லிமிடெட், ஸ்தாபனத்தாரால் அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது வெளியிட்ட திகதி 13- 09 - 1986.

Printed and Published by Uthayan Publications (Private) Ltd, 15 Second Lane, Power House Road, JAFFNA.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org